" ஈரோடு நகரசபையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஈரோடு நகரசபைக் கமிஷனரின்பேரில் 11 முனிசிபல் கவுன்சிலர்கள் கையெழுத்திட்டு முதல் மந்திரி அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், எனக்கும் ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார்கள். முனிசிபாலிடிக்குத் தேவையான இரும்புக் கம்பங்கள் வாங்கும் விஷயத்தில், ஒரு கம்பத்திற்கு ரூ. 50 வரையில் அதிகம் கொடுத்ததன்மூலம் ஈரோடு முனிசிபாலிடிக்கு 10 ஆயிரம் ரூபாய் வரையில் நஷ்டமேற்பட்டிருக்கிறது. இதுவிஷயமாக காங்கிரஸ் கட்சி முனிசிபல் கவுன்சிலர்களும், மற்ற கட்சி அங்கத்தினர்களும் கட்சிச்சார்பற்ற முறையில் 11 பேர்கள் கையெழுத்திட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். எனக்கு அனுப்பிய நகல் இப்பொழுது என்கையில் இருக்கிறது. அதை என்னுடைய பிரசங்கத்தில் கடைசியில் கனம் அமைச்சருக்கு, சட்டசபைக் காரியதரிசி மூலமாக, சமர்ப்பிக்கின்றேன். இதை நான் எதற்காக இந்த சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன் என்றால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சர்க்காரிலிருந்து பணம் கொடுக்கிறார்கள், அந்தப் பணத்தை ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் செலவிடவேண்டும். அப்படிச் செய்யாமல் அங்கிருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்கள் எப்படி அந்தப் பணத்தை துர்விநியோகம் செய்கிறார்கள் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்கு எடுத்துக்காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. பதினொன்று முனிசிபல் கவுன்சிலர்கள் கையெழுத்திட்ட விண்ணப்

பத்தை நான் கனம் மந்திரி அவர்களுக்கு, சட்டசபைக் காரியதரிசி மூல மாக சமர்ப்பிக்கின்றேன். அதை கனம் மந்திரி அவர்கள் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட முனிசிபல் கமிஷனர்பேரில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். உடனடியான நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் என்னவென்றால் ஒரு சிறிய நகரசபைக்கு, ஏற்கெனவே அவர்களுடைய நிதி நிலைமை குறைவாக இருக்கும்போது, ரூ. 10,000 நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. சாதாரண ஒரு நகரசபைக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டமென்றால்—அது சிறிய தொகை அல்ல—இதிலிருந்து நகரசபை அதிகாரிகளுடைய போக்கு எந்த முறையில் இருக்கிறதென்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

" நகரசபையில் கட்சி மனோபாவம் இருந்து வருகிறது. அதற்கு ஒரு உதாரணத்தை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஈரோடு ரயில்வே காலனியில் 15 வருஷ காலமாக இருந்துவரும் பள்ளிக் கூடத்தில் 800 குழந்தைகளுக்குமேல் படிக்கிறார்கள். எட்டாவது வகுப்பு வரையில் அந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துவருகிறார்கள். மேலும் விஸ்தரிப்பதற்கு இடம் போதவில்லை. இருபது உபாத்தியாயர்களுக்கும் 800 குழந்தைகளுக்கும் போதிய இடம் இல்லாததால் மரத்தடியில் விசுவாமித்திரர் காலத்தில் எப்படி பிள்ளை களுக்கு போதிக்கப்பட்டு வந்ததோ அந்த முறையில் இந்த இருபதாவது நூற்றாண்டிலும் பாடம் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக் கிறது."

Sri G. GOVINDAN :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விசுவாமித்திரர் காலத்தில் பள்ளிக்கூடம் எப்படியிருந்தது என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார். விசுவாமித்திரர் காலத்தில் அவர் இருந்திருக்கிறாரா என்று அவரிடமிருந்து அறிய விரும்புகிறேன்." (சிரிப்பு.)

DEPUTY SPEAKER :—" சரித்திரத்திலிருந்து கனம் அங்கத்தி னர் தெரிந்துகொண்டிருக்கலாம்."

Sri K. T. RAJU :—" கனம் அங்கத்தினர் என்ன சொல்லுகிறார் என்று தெரியவில்லை."

DEPUTY SPEAKER :—" விசுவாமித்திரர் காலத்தில் நீங்கள் இருந் திருக்கிறீரா என்று கனம் அங்கத்தினர் உங்களைக் கேட்கிறார்." (சிரிப்பு.)

Sri K. T. RAJU :—" பள்ளிக்கூடத்தில் எவ்வளவு நெருக்கடி இருக் கிறது என்பதற்காக நான் இதைச் சொல்லுகிறேன். எண்ணூறு பிள்ளை களுக்கும் 20 உபாத்தியாயர்களும் வகுப்புகளை நடத்துவதற்கு இடம் போதாமலிருக்கிறது. ரயில்வே காலனியில் நடக்கக்கூடிய விஷயம் ஆகை யால் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பிகிறேன். ரயில் வேயைச் சேர்ந்த இடமானபடியால் முனிசிபாலிடியார் கட்டிடம் கட்டிக் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். பொதுமக்களும், பெற் றோர்கள் சங்கமும் ரயில்வே மந்திரி கனம் ஸ்ரீ ஓ. வி. அளகேசன் அவர்க ளுக்கு விண்ணப்பித்துக்கொண்டதன்பேரில் ரயில்வேயைச் சேர்ந்த நான்கு ஏக்கர் நிலத்தை ஒரு ரூபாய்க்கு விற்றுவிட ரயில்வேயினர் தயாரா யிருக்கிறார்கள் என்று 1954-ம௵ செப்டம்பர்௴ 20உ அன்று முனிசி பாலிடிக்கு டெல்லியிலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார். தென்பிராந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் குழந்தைகளின் படிப்பை முன்னிட்டு நான்கு ஏக்கர் நிலத்தை ஒரு ரூபாய்க்கு நகரசபைக்கு விற்றுவிடத் தயாராயிருப்ப தாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஈரோடு நகரசபையானது ஒரு ரூபாய் செலவு செய்து நான்கு ஏக்கர் நிலத்தை குழந்தைகளின் கல்வியை முன்னிட்டு வாங்குவதற்கு முன்வரவில்லையென்றால் நகரசபை யினரின் போக்கை என்னவென்று சொல்வது என்று தெரியவில்லை. சமீபத்திலுள்ள ரயில்வேக்குச் சொந்தமான இடத்தை வாங்குவதற்கு

19th March 1955] [Sri K. T. Raju]

மறுத்துவிட்டு, 800 குழந்தைகளும் வெகுதூரம் சென்று படிக்கக்கூடிய முறையில் புதிய இடத்தை வாங்க முனிசிபல் கமிஷனரும் சேர்மனும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்கும் விஷயத்தை மட்டும் கவனிக்கவேண்டியதவசியம். நான்கு ஏக்கர் நிலம் ஒரு ரூபாய்க்கு நகரசபைக்குக் கிடைக்கிறது என்றால் அதை நகரசபை வாங்கிக்கொண்டிருக்கவேண்டும். பத்தாயிரம் ஜனத்தொகை இருக்கக்கூடிய காலனி பிரதேசத்தில் வேறு பள்ளிக்கூடமே இல்லை என்பதையும் நகரசபையினர் கவனித்து அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கவேண்டும். மத்திய சர்க்கார் முன்வந்து, ரயில்வே போர்டு முன்வந்து நான்கு ஏக்கர் நிலத்தைக் கொடுக்க முன்வந்திருப்பதை நகர சபையினர் குழந்தைகளின் கல்விக்காகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டாமா ? பள்ளிக்கூட விஷயத்தில் என்ன அரசியல் நோக்கம் இருக்கமுடியும் ? முனிசிபல் கமிஷனர் பள்ளிக்கூடத்திற்குச் சென்று அந்த இடத்திலே பள்ளிக்கூடம் தேவையில்லை, அப்புறப்படுத்தவேண்டும் என்று சொல்வதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. இலவசமாகக் கிடைக்கக்கூடிய நிலத்தை நகரசபை கைவிடுவது நியாயமா, தர்மமா என்று பார்த்தால், எந்த முறையில் பார்த்தாலும் சரியல்ல என்றுதான் சொல்லவேண்டும். முனிசிபல் சேர்மனும், கமிஷனரும் கட்சிக்கண்ணோட்டத்தோடு ஸ்தல ஸ்தாபன விஷயத்தில் நடந்துகொள்ளுவது சரியல்ல. பொதுமக்களுடைய நலனை இந்த மாதிரியாகப் புறக்கணிப்பது சரியல்ல. பெற்றோர்கள் சங்கமும், பொதுமக்களும் நாலைந்து வருஷங்கள் போராடி இந்த உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். இதுவிஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஈரோடு பிரசவ விடுதியில் இப்பொழுது லேடி டாக்டர் கிடையாது. ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால், லேடி டாக்டர் கிடையாது. லேடி டாக்டர் வரும் வரையில் பிரசவம் ஆகாமலேயே இருக்க முடியுமா என்பதை யோசிக்கவேண்டும். பிரசவ ஆஸ்பத்திரியாக இருப்பதால் ஆண் டாக்டர்கள் போடுவதற்கில்லை. பெண் டாக்டர்தான் தேவை. அதுவிஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டாமா ? ஒன்பது மாதங்கள் கடந்தும் இதுவரை லேடி டாக்டர் நியமிக்கப்படவில்லை. ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரிக்கு டாக்டர் நியமனம் செய்யப்படுவதில் விருப்பு வெறுப்புக்களும், அபிப்பிராய பேதங்களும், 'லோகல் பாலிடிக்ஸ்' களும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மிக அவசியம். ஸ்தல ஸ்தாபனங்களில் இம்மாதிரி விஷயங்களில் 'லோகல் பாலிடிக்ஸ்' தலையிடாமல் பார்த்துக் கொள்ளுமாறு மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பொது மக்களின் நலன் ஒன்றையே பிரதானமாக நகரசபைகள் கவனிக்கவேண்டும்.

"கிராமங்களிலுள்ள ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் வேண்டுமென்றால் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் வருவதில்லை. குறைந்த அளவு சம்பளம் கொடுப்பதுதான் அவர்கள் கிராமங்களுக்குப் போகாமலிருப்பதற்குக் காரணம். தகுதியான டாக்டர்களுக்கு அதிகமான பணத்தைக் கொடுத்து உதவி, படித்து பட்டம் பெற்ற டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்யவேண்டும். 100, 200 ரூபாய் மட்டும் சம்பளம் கொடுத்தால் டாக்டர்கள் கிராமங்களுக்குப் போக மாட்டார்கள். நகரசபைகள் என்ன பண்ணமுடியும் ? எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்பவேண்டுமென்று சொன்னால் ஸ்தல ஸ்தாபனங்களிடம் பணம் கிடையாது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவி செய்து, எம்.பி.பி.எஸ். டாக்டர்களை முக்கியமாக 5, 6 இடங்களிலாவது நியமிப்பதற்கு உதவி செய்வதால் கிராமங்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்கமுடியும். இந்த விஷயத்திலும் அரசாங்கம் கூடுமானவரையில் உதவி செய்ய முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் சொன்ன விஷயங்களையெல்லாம் கனம் மந்திரி அவர்கள் கவனிக்கவேண்டும். நான் முதலில் சொன்னபடி ஈரோடு நகர சபையைச் சேர்ந்த 11 கௌன்சிலர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை மந்திரி அவர்களுக்கு, சட்டசபைக் காரியதரிசி மூலமாக இப்பொழுது நான் உங்கள் அனுமதியின்பேரில் சமர்ப்பிக்கின்றேன்."

[19th March 1955

(At this stage the hon. Member Sri K. T. Raju presented a petition to the Joint Secretary to the State Legislature.)

10-20 a.m. * SRI S. JAYARAMA REDDIAR :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் பிரேரே பித்த மான்ய கோரிக்கையை ஆதரிக்கும் வகையில் சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு என்று மூன்று பிரிவுகளாக நடந்து வருகின்றன. முனிசிபாலிடிகள் சம்பந்தமாக, ஏதோ ஸ்ரீ ரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி சீர்திருத்தங்களெல் லாம் செய்து வருகிறோம் என கனம் மந்திரியார் அவர்கள் சொன்னார் கள். அந்த சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யவேண்டியது அவசியமா, நியாயமா, அவைகள் நன்றாக நடைமுறையில் நடக்குமா என்பதைப்பற்றி யெல்லாம் நான் அபிப்பிராயம் சொல்ல முன்வரவில்லை. முனிசிபல் நிர்வாகங்களில் சம்பந்தபட்டவர்கள், அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி சொல்லிவிட்டுவிடுகிறேன். குறிப்பாக, கிராமவாசிகளாக இருக்கும் எங்களுக்கு, ஜில்லா போர்டு நிர்வாகங்கள், பஞ்சாயத்து போர்டு நிர்வாகங்கள் எப்படி இருக்கவேண்டுமென்பதைப்பற்றி, நான் சில வார்த் தைகள் சொல்ல விரும்புகிறேன். 10, 15 வருஷங்களுக்கு முன்னதாக இருந்ததைவிட, இப்போது ஜில்லா போர்டு நிர்வாகங்கள் மிகவும் விரிவு அடைந்திருக்கின்றன. ஜனங்களும் ஜில்லா போர்டு நிர்வாகத்தின்மூலமாகவும் பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்தின் மூலமாகவும், எல்லா வசதிகளையும் பெற் றுக்கொள்ள வேண்டுமென்று ஆவலுடன் இருக்கிறார்கள். ரோடு வசதி கள், கிணறு வசதிகள் மற்றெல்லா வசதிகளும் பெற்றுகொள்ளவேண்டும், சர்க்கார் அவற்றை செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் ஜனங்களிடம் பரவிவருகிறது. இந்த எண்ணத்தை நாம் பூர்த்தி செய்தாகவேண்டும். இந்த நிலைமையில் ஜில்லா போர்டு நிர்வாகத்தை நாம் எந்த முறையில் வைத்திருந்தால், இந்தத் தேவைகளை எல்லாம் நாம் எளிதில் பூர்த்தி செய்யலாம் என்று நாம் சர்ச்சை பண்ணவேண்டிய கட்டத் திற்கு வந்துவிட்டோம். கனம் மந்திரி அவர்கள் இன்று காலையில் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் முறையில், ஜில்லா போர்டு நிர்வாகங்கள் எப்படி நடத்தப்படவேண்டும் என்பதுபற்றி அடுத்த ஜில்லா போர்டு தேர்தல் வருவதற்கு முன்னால், முடிவு செய்வோம் என்று சொன்னார்கள். நான் அப்போதே அதைப்பற்றி ஒரு கேள்வி போடவேண்டும் என்று நினைத்தேன். ஆனாலும்கூட, சாவகாசம் அதிகம் இருப்பதால் கனம் மந்திரி எனது நண்பர் என்ற முறையில் என் அபிப்பி ராயத்தை தனியாக சொல்லிக்கொள்ளலாம் என்று நினைத்து, அப்போது அந்தக் கேள்வியை கேட்காமல் நிறுத்திவிட்டேன். எனக்குச் சந்தர்ப்பம், இப்போது நான் கேட்காமலேயே நண்பர் ராமகிருஷ்ண அய்யர் அவர்கள் கொடுத்திருப்பதால், இப்போது சொல்லலாம் என்று இருக்கி றேன். ஜில்லா போர்டு நிர்வாகம் இப்போது இருக்கும் நிலையில் இருந் தால், ஜனங்களுக்கும் ஜில்லா போர்டுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லாமல் போய்விடும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். நானும் ஜில்லா போர்டு தலைவனாக இருந்திருக்கிறேன். முந்தி நான் இருக்கும்போது ராமநாதபுரம் ஜில்லா போர்டின் கீழ் 1,200 வாத்தியார்கள் இருந்தார்கள். இப்போது இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த உபாத்தியாயர்கள் வேலை செய்யும் பள்ளிக்கூடங்களை எல்லாம் ஜில்லா போர்டு தலைவர் எப்போது சென்று பார்வையிடுவது. Vice-president என்று சில ஜில்லா போர்டுகளில் இருப்பார்கள், சில ஜில்லா போர்டுகளில் இருக்கமாட்டார்கள். Vice-president கள் உள்ள ஜில்லா போர்டுகளில், Elementary Education-ஐ அவர்களுக்கு Delegate பண்ணுவது உண்டு. அவர்கள் இந்தப் பள்ளிக்கூடங்களை சுற்றி பார்வையிடுவார்கள். ஜில்லா போர்டு தலைவர் authorise பண்ணினால் ஒழிய, ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் உள்ள செக்ரடரி சுற்றுப் பிரயாணம் செய்ய முடியாது. இந்த மாதிரி நிலைமையில் ஜில்லா போர்டு நிர்வாகத்தை ஜில்லா போர்டு தலைவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும் கூட திறம்பட நடத்த முடியாது. எங்கு பார்த்தாலும் பள்ளிக்கூடங்கள். முன்பு எல்

19th March 1955] [Sri S. Jayarama Reddiar]

லாம் ஒரு தாலூகாவுக்கு இரண்டு **High School** கள் இருந்தன. இப்போது 10 **High School** கள் இருக்கின்றன. ஜில்லா போர்டு பராமரிக்கவேண்டிய ரோடுகளின் பரப்பும், மிக அதிகமாகிவிட்டது."

SRI S. T. ADITYAN :—" Sir, on a point of order: May I know whether the hon. Member is speaking on this cut motion or on District Board administration. I think he is speaking about a subject which is irrelevant."

DEPUTY SPEAKER :—" This is the only opportunity for hon. Members to speak about the administration of Local Boards. So it is relevant."

* SRI S. JAYARAMA REDDIAR :—" நான் தப்பிதமாக பேசுவதாக கனம் அங்கத்தினர் கருதுகிறார். ஏதோ வேறு உலகத்தில் இருந்து கொண்டு எனது பேச்சை நோக்குகிறார் போல தோன்றுகிறது. **Election**-ல் இருந்து சமீபத்தில் வந்திருப்பதால் ஒரு மாதிரியாக இருக்கிறார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு.) ஜில்லா போர்டு நிர்வாகம் இப்போது இருக்கிறபடியே இருக்கவேண்டுமா அல்லது வேறு மாதிரி மாற்றி அமைக்கப்படவேண்டுமா என்பது தான் இப்போதைய பிரச்னை. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இப்போது இருக்கிற நிலைமையில், ஜில்லா போர்டு நிர்வாகத்தை, எவ்வளவு கெட்டிக்கார **President** ஆக இருந்தாலும் கூட, திறம்பட நடத்த முடியாது என்பது தான். ஆகையால் அதை எந்த முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்பதை என்னுடைய சிற்றறிவிற்கு எட்டிய வரையில் சொல்ல முற்படுகிறேன். தாலூகா போர்டுகளை நிறுவலாம் என்று சொல்லுவேன். ஆனாலும், அப்படி தாலூகா போர்டுகள் நிறுவினாலும் கூட, கெட்டிக்கார மெம்பர்களோ, அல்லது **President** ஓ உள்ள இடத்தில் வேலைகள் நடந்து விடுகின்றன என்ற பேச்சு எழும். ஆகையால் இன்னும் குறுகிய முறையில், பல கிராமங்களை ஒன்றாக சேர்த்து, பஞ்சாயத்து போர்டுகள் நிறுவி, 20 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு **Executive Officer** வீதம் போட்டு, **Grant**-களை அவர்கள் கையில் கொடுத்து, பஞ்சாயத்து போர்டுக்கு **Centre**-ஆக இருக்கும் இடத்தில் மருத்துவசாலை, **High School** ஏற்படுத்த திட்டம் செய்து இந்த முறையில் எல்லா கிராமங்களுக்கும் வசதி செய்யும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" இப்போது சாதாரணமாக, நடை முறையில் **Local Development Works**-க்கு என்று எல்லாம் பணம் கொடுக்கிறார்கள். அது என்ன ஆகுது. நண்பர் கோவிந்தன் இப்போது தான் சொல்லிக்கொண்டிருந்தார். கெட்டிக்காரர்கள் இருக்குமிடத்தில் இந்த **Grant**-ஐ வாங்கி செலவு பண்ணுகிறார்கள். **Sivakasi** காரர்கள் **Grant**-ஐ அடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். முதுகளத்தூரில் வாங்கி செலவு பண்ணுவதில்லை என்று கூறிக்கொண்டிருந்தார்கள். மேற்கூறியவாறு பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்தி விட்டால், பஞ்சாயத்து போர்டு **President** கவர்ன்மெண்ட் கொடுக்கும் **Grant**-ஐ பெற்றுக்கொண்டு, கால்பங்கு **Contribution**-ஐ மக்களிடமிருந்து வாங்கி அந்த வேலைகளைச் செய்வதற்கு வகை செய்வார்கள். ஆகையால் பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்தி, கிராம மக்களுக்கு எப்படியும் இந்த **Local Development Works** மூலம் ஏற்படும் வசதிகள் போய்ச்சேரும் முறையில் செலவாக்கினால், கெட்டிக்காரத் தனத்தினால் போய்ச்சேருகிறது என்றில்லாமல், கட்டாயம் எல்லோருக்கும் போய்ச் சேர வேண்டும் என்று திட்டம் போட்டு, நிர்வாகத்தை ஏற்படுத்தி விட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். அதுவும் நண்பர் படையாச்சி அவர்கள் தலைமையிலேயே இது மாதிரி ஏற்படுத்தி அவர்கள் ஒரு பெருமையை அடைந்து கொள்ளவேண்டுமென்று நான் ஆண்டவனை பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்."

[19th March 1955

* SRI A. GOVINDASWAMI NAYAGAR :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நண்பர் நாராயண நம்பியார் கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா போர்டுகளுக்கு சர்க்கார் ஒதுக்கியிருக்கும் மான்யம் போதாது. இந்த மான்யத் தொகையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் தூசி படியாத பாதை போடுவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் கிராம ரோடுகளை சீர்திருத்த அதிகம் கவனம் செலுத்துவதில்லை. 1948-49-ல் சர்க்கார் தூசிபடியாத பாதை போட ஜில்லா போர்டுகளுக்கு 75 சதவிகிதம் மான்யம் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் 1949–50-ல் அந்த மான்யத்தை 50 சத விகிதமாக குறைத்திருக்கிறார்கள். ஆகையால் இப்போது ஜில்லா போர்டுகள் இந்த இனத்தில் அதிகப்படியாக துகையை செலவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிராம ரோடுகளை போட ஜில்லா போர்டுகளுக்கு பணம் இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே சர்க்கார் முன்பு கொடுத்த மாதிரியே, 75 சதவிகித மான்யம் கொடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் ராஜ்யம் பூராவும் கிராம ரோடுகள் போடுவதற்காக $4\frac{1}{2}$ லட்ச ரூபாய்கள் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் தொகை மிகவும் குறைவானதாகும். இதை வைத்துக்கொண்டு அதிக அளவிற்கு கிராம ரோடுகள் போடுவது என்பது முடியாத காரியமாகும். தென் ஆற்காடு ஜில்லாவைப் பொருத்தவரையிலும் கிராம ரோடுகள் மிக மிக மோசமாக இருக்கிறது என்பது கனம் மந்திரி அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அவர் போகாத பகுதிகளே கிடையாது. இதன் காரணமாக கிராம மக்களுடைய வியாபாரம், போக்குவரத்து இவைகள் மிகத்தடைபடுகின்றன என்பது கனம் மந்திரியாருக்குத் தெரியும். இது மாத்திரமில்லை. தென் ஆற்காடு ஜில்லாவில் பஸ்கள் ஓட கிராம ரோடுகள் வசதி இல்லாத காரணத்தினால், அதிக பஸ்கள் ஏற்படவில்லை. என்னுடைய தொகுதி வழியாக புதியதாக ஒரு பஸ், விழுப்புரத்திலிருந்து அனந்தபுரம்வரை ஓடுகிறது. அதில் ஏறிப்போனால், வீடு போய் சேருவதற்குள் ஒவ்வொருவருடைய தலையும் பல தடவைகள் பஸ்ஸில் அடிபடுகிறது. இந்த முறையில் ரோடு இருக்கிறது. இத்தகைய ரோடுகளை பராமரிக்கவேண்டியது சர்க்காரின் கடமை. ஆகையால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது சென்னையில் கப்பி ரோடுகளை
10–30 a.m. தார் ரோடுகளாகவும், தார் ரோடுகளை சிமென்ட் ரோடுகளாகவும் போட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர கிராமங்களில் நல்ல மண் ரோடுகள்கூட போடுவதில்லை. சென்னையில் இன்னும் ரப்பர் ரோடுகள் கூட போடுவார்கள் என்று தோன்றுகிறது. ஆகவே கிராமங்களிலும் நல்ல ரோடுகளைப் போட்டுக் கொடுத்து வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுறம் போகும் ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. அங்கு கனம் மந்திரி அவர்கள் அடிக்கடி போயிருப்பார். அதனுடைய நிலைமை என்னவென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். முன்பு அந்த ரோடு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இப்போது இருக்கிறது. அதை கனம் மந்திரி அவர்கள் கவனித்து நல்ல ரோடாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விழுப்புரத்திலிருந்து- அனந்தபுரத்திற்கு ரோடு இருக்கிறது. அந்த ரோடு மோசமாகயிருப்பதால் பஸ்ஸில் போகும்போதும், வண்டியில் போகும் போதும் துள்ளிக் குதிக்கவேண்டியுள்ளது. விழுப்புரத்தில் மாம்பழப்பட்டி ரோடு இருக்கிறது. அந்த ரோடில் போனால் அதுவும் மோசமாக இருப்பது நன்றாகத் தெரியும். அந்த ரோடு பெயரளவில்தான் இருக்கிறதே தவிர நல்ல நிலைமையில் இல்லை. அதையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் விழுப்புரத்திலிருந்து அன்னியூருக்கு நல்ல ரோடு போட்டால் பஸ் விட சௌகர்யமாயிருக்கும்.

19th March 1955] [Sri A. Govindaswami Nayagar]

"என்னுடைய விக்ரவாண்டித் தொகுதியில் ரோடுகளை சரிவர கவனிக்காமல் புரக்கணித்து வருவதாகவும் தெரிய வருகிறது. ஒவ்வொரு கிராம ரோட்டிலிருந்தும் நகர ரோடிற்கு தொடர்பு இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்பொழுது அப்படி இல்லாமல் இருப்பதால் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலைமையில் ரோடுகள் போடுவதென்றால் பொது மக்கள் கால் பங்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். லோகல் டெவலப்மென்ட் ரோடுகள் போடுவதென்றாலும் பொது மக்கள் கால் பங்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். என் தொகுதியிலுள்ளவர்களும் செஞ்சி, கள்ளக்குறிச்சியில் இருக்கக்கூடியவர்களும் அப்படி கொடுக்கும்படியான நிலையில் இல்லை. அதற்கு தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் மிக மிக மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். அந்த ரோடுகளுக்கு அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"முனிசிபல் சேர்மன்களுக்கும் ஜில்லா போர்டு தலைவர்களுக்கும் இன்னும் அதிகப்படியான அதிகாரங்களைக்கொடுக்கவேண்டும். ஜில்லா போர்டு தலைவர்களுக்கு ஏற்கெனவே இருந்த அதிகாரத்தையும் இப்பொழுது எடுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. ரோடு டிரான்ஸ்போர்ட் போர்டில் ஜில்லா போர்டு தலைவர் ஒரு உறுப்பினராக இருந்தார். இப்பொழுது அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுப்பது இல்லை. ஜில்லா போர்டு தலைவரும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதனால் அவருக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். ஜில்லா போர்டின் ரோடுகளில் பஸ்கள் போய் வருவதால் அந்த போர்டில் தலைவருக்கு அதிகாரம் இருந்தால்தான் அந்த பஸ் நிர்வாகத்தை நன்றாக கவனிக்கலாம். அவர் இல்லாமல் போனால் பொது மக்களுக்கு அவர் நன்மை அளிக்கமுடியாது. பொது மக்களுடைய பிரதிநிதிக்கு அந்த போர்டில் இடம் இருக்கவேண்டும். கலெக்டர், இஞ்சினியர் இவர்களும் ஜில்லா போர்ட் தலைவரும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஸ்தல ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவைகளை திருத்தி அமைப்பதற்கும் திரு. குட்டிகிருஷ்ண நாயர் கமிட்டி திரு. ரத்தினசபாபதி முதலியார் கமிட்டி ஆகிய இரண்டு கமிட்டிகளை நியமித்திருந்தார்கள். அந்தக் கமிட்டிகள் தங்களுடைய ரிப்போர்ட்டையும் சமர்ப்பித்துவிட்டன. அந்தக் கமிட்டிகள் சமர்ப்பித்த தஸ்தாவேஜியை பரிசீலிக்க மற்றொரு கமிட்டியை நியமிக்கப் போவதாகத் தெரியவருகிறது. அப்படி நியமிப்பது சரியல்ல. இந்தக் கொள்கையில் ஒரு கமிட்டியை நியமித்தால் அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டை பரிசீலிக்க மற்றொரு கமிட்டியும், அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டை பரிசீலிக்க இன்னொரு கமிட்டியையும் நியமிக்கவேண்டியதாக இருக்கும். இப்படி கமிட்டிகளை நியமித்துக்கொண்டிருக்கும்படியான நிலைமையிலேயேதான் இருப்போம். அவ்விதம் இல்லாமல் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட அந்தக் கமிட்டி சமர்ப்பித்த ரிப்போர்ட்டையே பரிசீலனை செய்தால் போதும் என்று தோன்றுகிறது.

"விழுப்புரத்திலிருந்து விராட்டிக்குப்பம் ரோடு போடவேண்டும் என்று நான்கு வருஷங்களுக்குமுன்பே சாங்க்ஷன் ஆகி இருக்கிறது. இன்னும் ரோடு போடப்படவில்லை. தென்னாற்காடு ஜில்லாவில் ரோடு போடுவதாக இருந்தால் ஜில்லா போர்டின் நிதி நிலை சரியில்லை. தென்னாற்காடு ஜில்லாவில் ரெயில்வே செஸ்ஸிலிருந்து ரோடு போட முடிவு செய்துள்ளது. ரோடு போடுவதாக இருந்தால் எட்டு லட்சம் ரூபாய்க்கு திட்டம் தீட்டி சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த ரோடுகள் பூராவையும் சர்க்கார் அங்கீகரிக்கவேண்டும். ரெயில் செஸ்ஸிலிருந்து அங்கு ரோடு போடுகிறபோது நிலம் வாங்குவதற்கு கஷ்டமாக இருக்கிறது. அங்குள்ள டிபுடி கலெக்டர் அங்குள்ளவர்களுக்கு நியாயமாக பணம் கொடுத்தால் தான் கிராம மக்கள் ரோடுகள் போடுவதற்கு நிலத்தைக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். நல்ல முறையில் அந்த நிலங்களை வாங்க வழி செய்யவேண்டும். மற்றும் ரோடு போடுவதற்கு வசதி வேண்டும்

என்றால் இப்பொழுது இருக்கும் அதிகாரத்தைவிட ஜில்லா போர்டு தலைவருக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்படவேண் டும்.

"ஜில்லா போர்டு தலைவர்கள் நிறைவேற்றும் தீர்மானங்கள் எல்லாம் பெயரளவில் இருக்கிறதே தவிர நடைமுறையில் அவைகள் பயன்படுவது இல்லை. ஜில்லா போர்டு தலைவர்கள் அனுப்பும் தீர்மானங்கள் எல்லாம் நியாயமானவைகள் என்று கருதி அவைகள் நல்ல நோக்கத்துடன்தான் நிறைவேற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன என்று கருதி அவைகளை அங்கீ கரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் ஏதாகிலும் ரோடு போடவேண்டும் என்று சொன்னால் அந்த ரோடுகளைப் போடு வதற்கு உடனடியாக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட் டுக்கொள்ளுகிறேன்.

"ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிகள் நல்ல முறையில் நடைபெறவில்லை. அங்குள்ள டாக்டர்களுக்குக்கொடுக்கப் படும் சம்பளம் போதவில்லை. ஜில்லா போர்டிலிருந்து சம்பளம் கொடுப்ப தென்றால் அவர்களிடம் அதற்கு வேண்டிய பணம் இல்லை. ஜில்லா போர்டு நிர்வாகத்தில் நடக்கும் ஹைஸ்கூல்கள் எல்.டி. ஆசிரியர்கள் அதிகமாக கிடையாது. ஏனென்றால் அவர்களுக்கு அங்கு தகுந்தபடி சம்பளம் கொடுக்கப்படுவது இல்லை. ஜில்லா போர்டுகளில் வேலை செய் யும் கீழ்த்தர சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம்கூட குறைவாக இருக்கிறது. அதனால் சர்க்கார் அதற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். ஜில்லா போர்டுகளுக்கு வேண்டிய பணம் இல்லாத காரணத் தால் அவர்களால் அதிகப்படியான சம்பளம் கொடுக்க முடியவில்லை. இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய பணம் பூராவையும் சர்க்கார் கொடுக்கவேண்டும். கிராம ரோடுகளைப் போடுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த விஷயங்களில் கனம் மந்திரி அவர்கள் கவனம் செலுத்தினால்தான் அவர்கள் பேரில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அதனால் இவை களில் அவர் கவனம் செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் அவர் ஜனங்களின் நம்பிக்கையை பெறமாட்டார் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—"As there are a number of hon. Members who want to participate in the discussion, I reduce the time-limit of speeches to five minutes."

* SRI A. RAMASWAMI TEVAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை நான் ஆதரிக்கிறேன். இதைச் சார்ந்த மந்திரி அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். சந்தோஷமாக பாராட் டுகிறேன். ஏனென்றால் அவர் ஒரு நகர சபையின் தலைவராக இருந்து அனுபவம் பெற்றவர். ரத்னசபாபதி முதலியார் கமிட்டியின் சிபாரிசை அவர் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போவதைக் கேட்டு நான் சந்தோஷப்பட்டு அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல அங்கத்தினர்களுடைய சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

SRI S. RAMALINGAM :—"ஒரு ஒழுங்குப் பிரச்னை. ரத்னசபாபதி முதலியாருடைய சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு அவர் நன்றி செலுத்து கிறாரா அல்லது அதை ஏற்றுக்கொள்ளாததற்கு நன்றி செலுத்து கிறாரா என்று கேட்கிறேன். அதைப்பற்றி சர்க்கார் முடிவு செய்யவில் லையே."

SRI A. RAMASWAMI TEVAR :—"கனம் மந்திரி அவர்கள் பேசும் போது கனம் அங்கத்தினர் இங்கு இல்லை. அதனால்தான் அவர் இப்படி கேட்கிறார். கனம் மந்திரி அவர்கள் பேசும்போது அந்தக் கமிட்டியால்

சிபாரிசு செய்யப்பட்டவைகளில் பத்து திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரப்போவதாகச் சொன்னார். அதற்கு நகர சபைகளின் சார்பாக நான் அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படி நன்றி செலுத்தவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் கனம் மந்திரி அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வதென்னவென்றால் நகர சபைகளுக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். இப்பொழுது நடைபெற்றுவருவதைப் பார்த்தால் கனம் மந்திரி அவர்களுக்குக்கூட அதிகாரம் இல்லை என்று தோன்றுகிறது. நகர சபை ஏதாகிலும் தீர்மானம் போட்டு அனுப்பினால் அது காரியதரிசியின் கையெழுத்திட்டு வரட்டும் பார்ப்போம் என்று சொல்லுகிறார். ஒவ்வொரு தடவையிலும் ஒரே மாதிரியாக சொல்லி வருகிறார். இவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஏதாகிலும் நல்ல கோரிக்கைகள் வந்தால் அதை உடனடியாகச் செய்யும்படியாக நான் அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" முக்கியமாக நகர சபையை நிர்வாகம் செய்வதில் ஒரு பெரிய தொந்தரவு இருக்கிறது. அங்கு டெக்னிகல் சாங்ஷன் என்றும் அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் என்றும் இரண்டுவித சாங்ஷன்கள் இருக்கின்றன. இந்த இரண்டிற்கும் நகர சபை உட்பட்டிருக்கிறது. அதனால் ரொம்பவும் கஷ்டம் இருக்கிறது. சாதாரணமாக கட்டடம் கட்டவேண்டுமென்றால் ரூ. 25,000-க்கு மேல் செலவாகலாம். அது டெக்னிகல் சாங்ஷன் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கு வருகிறது. அந்த சாங்ஷன் அரசாங்கத்திலிருந்து திரும்பி வருவதற்கு ஒரு வருஷத்திற்குமேல் ஆகிறது. அதனால் அந்த நகர சபைத் தலைவர்பேரில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கூட வந்துவிடுகிறது. (ஒரே சிரிப்பு.) மற்றும் சில சமயங்களில் மூன்று வருஷங்கள் கூட ஆகிவிடுகிறது. அதற்குள் அந்தத் தலைவருடைய தலைமைக் கால அளவு கூட முடிந்து விடுகிறது. அவருக்குப் பிறகு வந்தவருடைய காலத்தில் சாங்ஷன் ஆகி வருவதால் பிற்பட்டு வரக்கூடிய தலைவருக்கு நல்ல பெயர் போய்விடுகிறது. அதனால் சர்க்கார் டெக்னிகல் சாங்ஷன் அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் இவைகள் எல்லாம் எப்படி இருக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்யவேண்டும். இந்த விஷயத்தை கனம் மந்திரி அவர்கள் உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருக்கும் மந்திரி நகர சபைத் தலைவராக இருந்தவர். அதனால் இதிலுள்ள கஷ்டங்கள் எல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் இந்த விஷயங்களில் ஏதாவது நடவடிக்கை எடுப்பார் என்று நினைக்கிறேன். அவருக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. கண்டிப்பாக இதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" இரண்டாவதாகச் சொல்லும்போது ஜஸ்டிஸ் கட்சி இருந்த காலத்தில் கமிஷனர்களை ஏற்படுத்தினார்கள். அவர்கள் நிபுணர்களாக இருந்தபடியால் வருவாய்களையெல்லாம் பாக்கி இல்லாமல் கவனித்து வசூல் செய்து வந்தார்கள். இப்பொழுது உள்ள கமிஷனர்கள் அப்படிச் செய்யவில்லை. இதைச் சொன்னால் சர்க்கார் என் பேரில் யாதொரு குற்றமும் சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய ஸ்டான்டர்டும் குறைந்துவிட்டது. அங்கு வரும் அதிகாரிகள் நகர சபை தலைவர்களை அதிகாரம் பண்ணுவதாக இருக்கிறது. அதற்காகவே அவர்கள் அங்கு வருவதாகவும் தெரிகிறது. அவர்களை தலைவர்கள் ஏதாகிலும் கேட்டால் தான் அந்த ஊர் இல்லை என்றும் தான் வேறு ஊரிலிருந்து வருவதால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் சொல்லிவிடுகிறார்கள். அதனால் நல்ல முறையில் கமிஷனர்களை நியமித்தால் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும். இது கனம் மந்திரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அவருக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. அதனால் அனுபவம் வாய்ந்த கமிஷனரையே நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

[19th March 1955

10-40 a.m. ***Sri M. NARAYANAN NAMBIAR**:—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, തെക്കൻകണ്ണാടകജില്ലയിൽ ഗതാഗതസൌകര്യങ്ങൾ ഏററവും കുറഞ്ഞ ഒരു പ്രദേശമാണ് കാസർഗോട്ട് താലൂക്ക്. കഴിഞ്ഞ നാലഞ്ചു കൊല്ലങ്ങളായി ചില റോഡുകളെല്ലാം വെട്ടിയിട്ടുണ്ട്; വേറെയും ചില റോഡുകളുടെ പണി ആരംഭിച്ചിട്ടുണ്ടെങ്കിലും പൂർത്തിയാക്കിയിട്ടില്ല. ഉടയംചാൽ-കുന്നുംകൈ റോഡിന്റെ പണി ആരംഭിച്ചിട്ടു വളരെക്കാലമായി. പക്ഷെ ഇതുവരെ പൂർത്തിയാക്കിയിട്ടില്ല. അതുപോലെതന്നെ ഹോസ്ദുർഗ്ഗ്-മടിക്കൈ-നീലേശ്വരം റോഡിന്റെ പണിയും പൂർത്തിയാകാതെ കിടക്കുകയാണ്. ചീമേനി-കുന്നുംകൈ റോഡും, പെരിയ-പള്ളിക്കര റോഡും ഇനിയും മുഴമിച്ചിട്ടില്ല. ഈ റോഡുകൾ മുഴമിപ്പിക്കുന്നതിന്നു വേണ്ട പണം അനുവദിക്കാൻ ഗവമ്മേണ്ടു തയ്യാറായിക്കാണുന്നില്ല. അതുകൊണ്ടു് ഈ പണികൾ അങ്ങനെ മന്ദഗതിയിൽ നടന്നാൽ മതിയെന്നുള്ള അഭിപ്രായമാണ് ഗവമ്മേണ്ടിനുള്ളതെന്നു വിചാരിക്കേണ്ടിയിരിക്കുന്നു. നീലേശ്വരം-മാലോത്തു റോഡിൽ കവാററിപ്പുഴയിൽ ഒരു പാലം ഇല്ലാത്തതു നിമിത്തം വാഹനഗതാഗതം സാദ്ധ്യമല്ലാതെ കിടക്കുകയാണ്. ഈ പാലത്തിന്റെ കാര്യം പല പ്രാവശ്യം ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽ കൊണ്ടുവന്നിട്ടുണ്ടെങ്കിലും അതിന്റെ പണി ഗവമ്മേണ്ടു് ഇതുവരെ അനുവദിച്ചിട്ടില്ല. ഹോസ്ദുർഗ്ഗിൽനിന്നു പാണത്തൂക്കു ഒരു റോഡുള്ളതു് നന്നാക്കിയിട്ടു വളരെക്കാലമായി. പ്രത്യേകിച്ചും 18-ാം മൈൽ മുതൽ 25-ാം മൈൽവരെയുള്ള ഭാഗം വളരെക്കാലത്തിനിപ്പുറം നന്നാക്കിയിട്ടില്ലത്തതുകൊണ്ടു് ഗതാഗതത്തിന്നു തീരെ കൊള്ളരുതാത്തതായിക്കിടക്കുകയാണ്. മഴക്കാലങ്ങളിൽ ഗതാഗതം സാദ്ധ്യമല്ലാതെ ബസ്സുകൾ പനത്തടിവരയ്ക്കു മാത്രമെ ഓടുന്നുള്ളു. ഇതു പാണത്തൂർ യാത്രക്കാക്ക് വളരെ അസൌകര്യങ്ങൾ ഉണ്ടാകുന്നുണ്ടു്. ഈ റോഡ് മെയിൻറനൻസിന്നു ഹൈവേയ്ക്കു വിട്ടുകൊടുക്കുമെങ്കിൽ നല്ല നിലയിൽ നടത്തുവാൻ സാധിക്കുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു. മൂന്നു ഭാഗവും പുഴകളാലും കിഴക്കു ഭാഗം പശ്ചിമഘട്ടങ്ങളാലും ചുററപ്പെട്ടു കിടക്കുന്ന കൊളത്തൂർ, ബേടകം, കുററിക്കോൽ, ബന്തടുക്ക എന്നീ ഗ്രാമങ്ങളിലെ പതിനയ്യായിരത്തിലധികം വരുന്ന ആളുകൾക്കു ഗതാഗതം ചെയ്യാനുള്ള ഒരു റോഡു് നിർമ്മിച്ചുവരികയാണ്. കരിച്ചേരിപ്പുഴയിൽ ഒരു പാലം ഇല്ലാത്തതുനിമിത്തം ഈ റോഡ് വേണ്ടത്ര പ്രയോജനമില്ലാതെ പോകുമെന്നു ഭയപ്പെടേണ്ടിയിരിക്കുന്നു. ഈ ഗ്രാമങ്ങളിലെ ആളുകൾക്കു പുറത്തു പോകുന്നതിന്നു യാതൊരു സൌകര്യവും ഇന്നില്ല. അടുത്ത പഞ്ചവത്സരപദ്ധതിയിലെങ്കിലും കരിച്ചേരിപ്പുഴയ്ക്കു ഒരു പാലം ഉൾപ്പെടുത്താൻ ഗവമ്മേണ്ടു ശ്രദ്ധിക്കണമെന്നു അപേക്ഷിച്ചുകൊള്ളുന്നു.

" അടുത്ത കാലത്തു നാട്ടുകാർ ഉണ്ടാക്കിയിട്ടുള്ള ഒട്ടധികം റോഡുകളുണ്ടു്. ബളാലിൽനിന്നു കൊന്നക്കാട്ടുവരെയുള്ള റോഡ്, പടിഞ്ഞാറെ എളേരിയിൽ 12 മൈൽ നീളത്തിലുള്ള ഒരു റോഡു് ഇങ്ങനെ പല റോഡുകളും നാട്ടുകാർ നിർമ്മിച്ചിട്ടുള്ളതാണ്. പക്ഷെ അതൊന്നും ഗവമ്മേണ്ടു ഏറെറടുത്തു നന്നാക്കി സൂക്ഷിക്കാത്തതുകൊണ്ടു് ഗതാഗതയോഗ്യമല്ലാതെ കിടക്കുകയാണ്. തെക്കൻ കണ്ണാടകത്തിൽ മാത്രമല്ല, മലബാറിലും, പ്രത്യേകിച്ചു് പേരാമ്പ്ര—നാട്ടിക ഫർക്കകളിൽ നാട്ടുകാർ ചേർന്നു ഉണ്ടാക്കിയിട്ടുള്ള അനേകം റോഡുകളുണ്ടു്. അവയും ഗവമ്മേണ്ടു് ഏറെറടുക്കാത്തതുകൊണ്ടു് നാശമായിക്കിടക്കുകയാണ്. നാട്ടുകാരുണ്ടാക്കിയിട്ടുള്ള റോഡുകളെല്ലാം ഏറെറടുത്തു നന്നാക്കി സൂക്ഷിക്കാൻ ഗവമ്മേണ്ടിന്നു് ഒരു പദ്ധതിയില്ലെങ്കിൽ നാട്ടുകാരുടെ പ്രയത്നം മുഴുവൻ വ്യത്ഥമായിപ്പോകുന്നതാണ്. കാസർഗോട്ടു താലൂക്കിൽ കിഴക്കൻ എളേരി മുതലായ ഗ്രാമങ്ങളിൽ പഞ്ചായത്തു ബോർഡുകളില്ല. പഞ്ചായത്തു ബോർഡുകളുള്ള സ്ഥലങ്ങളിലും പഞ്ചായത്തുകളുടെ ധനസ്ഥിതി മോശമായതുകൊണ്ടു ജനങ്ങൾക്കു അത്യാവശ്യമുള്ള പദ്ധതികളൊന്നും നടപ്പിലാക്കാൻ കഴിയുന്നില്ല. പഞ്ചായത്തു ബോർഡുകളുടെ വരുമാനം വദ്ധിക്കാത്തിടത്തോളം കാലം ഗവമ്മേണ്ടിൽനിന്നു സഹായം ലഭിച്ചാലല്ലാതെ പഞ്ചായത്തു ബോർഡുകളെക്കൊണ്ടു് പദ്ധതികളൊന്നും നടപ്പിൽവരുത്താൻ സാദ്ധ്യമല്ല. മലബാറും തെക്കൻ കണ്ണാടകവും തോടുകളും പുഴകളുംകൊണ്ടു് നിറഞ്ഞ പ്രദേശമാണ്. അവിടെ ധാരാളം പാലങ്ങൾ ആവശ്യമാണ്. പാലങ്ങളില്ലാത്തതുകൊണ്ടു് പല സ്ഥലങ്ങളിലും ഗതാഗതം സാദ്ധ്യമല്ലാതെയാണിരിക്കുന്നതു്. പ്രത്യേകിച്ചും സ്കൂൾ കുട്ടികൾക്കു പല സ്ഥലങ്ങളിലും സ്കൂളിൽ പോകാൻ വളരെ ബുദ്ധിമുട്ടുണ്ടു്. ഈ പണികളെല്ലാം പഞ്ചായത്തു ബോർഡുകൾ ചെയ്യട്ടെ എന്നുവച്ചാൽ അടുത്ത കാലത്തൊന്നും നടക്കാൻപോകുന്നില്ല. അതുകൊണ്ടു് ഗവമ്മേണ്ടു ധനസഹായം നല്കി ഈ പണികൾ ഡിസ്ത്രിക്ട് ബോർഡുകളെക്കൊണ്ടു ഏറെറടുത്തു നടത്തിക്കാനുള്ള ശ്രമം നടത്തണമെന്നു അപേക്ഷിച്ചുകൊണ്ടു് അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു. "

19th March 1955]

SRI S. T. ADITYAN :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இஜ்ஜில்லா போர்டார், ரயில் ரோடுகளேயும், சாதாரண ரோடுகளேயும்போட்டு பராமரிக்கிருர்கள். இவ்விரண்டு ரோடுகளில் வரும் வருமான புள்ளி விவரங்களேப்பார்த்தால், சாதாரண ரோடுகளில் வரும் வருமானம்தான் அதிகம் என்பது தெரியவரும். ஏனென்ருல் இந்த ரோடுகளில் பஸ்கள் ஓடுகின்றன, லாரிகள் ஓடுகின்றன, இதனுல் பஸ்கள், லாரிகள் விலேயாகின்றன, அதனுல் வரி கிடைக்கிறது, டயர் முதலான சாமான்கள் வாங்கும்போதும், வரி கிடைக்கிறது, வியாபார போக்குவரத்து ஆவதனுல், அதனுலும் வரி கிடைக்கிறது. பெட்ரோல் விற்பனேயாவதால், அதற்கும் வரி வருகிறது. லேசன்ஸ் **fees** வருமானமும் வருகிறது. இப்படிப் பார்க்கும்போது ரயில் ரோடுகளினுல் ஜில்லா போர்டுக்கு கிடைக்கும் வருமானத்தைவிட, சாதாரண ரோடுகளால் அதிகவருமானம் கிடைக்கிறது. ஆனுல் எந்தெந்த இனத்தில், எவ்வளவு எவ்வளவு வருமானம் வருகிறது என்று கணக்குத்தெரியாமல் இருப்பதால், அந்தந்த வருமானத்துக்குத்தக்கபடி பிரித்துக்கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, சர்க்கார், சரியானபடி கணக்கைபார்த்து, சரியானபடி விவரங்களே சேகரித்து, சாதாரண ரோடுகளினுல் எவ்வளவு வருமானம் வருகிறது, அந்த வருமானத்தில் இவ்வளவு சதம் விகிதம்தான் ரோடுகள் அமைக்கவும் பராமரிக்கவும் ஒதுக்கவேண்டுமென்று கணக்குப்போட்டு தீர்மானிக்கவேண்டும். பம்பாயில் இது சம்பந்தமாக ஒரு சபையிருக்கிறது. அச்சபை இவ்விவரங்களேப்பற்றிய கணக்குப்பார்த்து, கிட்டத்தட்ட, வருமானத்தில் பாதியை ரோடுகளுக்காக செலவு செய்கிருர்கள். அது எப்படி இருந்தாலும், நான் கேட்டுக்கொள்வது என்னவென்ருல், ரோடுகளினுல்வரும் வருமானத்தை ரோடு **development**-க்கே உபயோகிக்கவேண்டும். அப்படிச் செய்தால் ரோடுகள், அதிகமாக, அதிகமாக வியாபாரம் விருத்தியாகும், பஸ்கள், லாரிகள் அதிகம் ஓடும், அதனுல் சர்க்காருக்கு அதிகவருமானம் கிடைக்கும். இதிலே ஒரு விஷயம் சொல்லவேண்டியதாக இருக்கிறது. சர்க்கார் ஏன் தங்கள் வருமானத்தைக் குறைத்துக்கொள்ள தீவிரமான முயற்சிகள் எடுக்கிருர்கள் ? உதாரணமாக ரோட் **Traffic board** ஒன்று ஏற்பாடுசெய்து வைத்திருக்கிருர்கள் சர்க்கார். அந்த போர்டிலுள்ளவர்கள் செய்வதெல்லாம், அந்த பஸ் ஓடக்கூடாது, இந்த ரோடில், இவர்களுடைய மூன்று பஸ்கள்தான் ஓடவேண்டும், இந்த மார்க்கத்தில் இவ்வளவு லாரிகள்தான் போகலாம் என்று கட்டுப்படுத்தி, போட்டி என்பதே இல்லாமல்செய்து, சர்க்காரினுடைய வருமானத்தைக் குறைத்துக் கொள்ளுகிருர்கள். இம்மாதிரி போட்டி எனபதே இல்லாமல் செய்தால் ஒரு குறிப்பிட்ட பெரிய முதலாளிகளுக்குத்தான் அதிக லாபம்வரும். இந்த செண்ட்ரல் டிராபிக் போர்டு செய்யும் இக்காரியங்களே சர்க்கார் தணிக்கைசெய்து கவனிக்கவேண்டும். பெரிய முதலாளிகளுக்கு லாபம் வந்தால் என்ன, லாபம் இல்லாமல்போனுல் என்ன, கேட்டவர்களுக்கு ரோட் போக்குவரத்து சாதனங்களுக்கு ஏன் லேசன்ஸ் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். காந்திஜிகூட சொல்லியிருக்கிருர்கள் ; யார் கேட்டாலும் லேசன்ஸ் கொடுக்கும்படி. ஏன் அப்படி கொடுக்கக்கூடாது ? அதிக பஸ்கள், லாரிகள் ஓடினுல், அதிக வருமானம் சர்க்காருக்கும், ஜில்லா போர்டுக்கும்வரும், அதனுல், அதிக பள்ளிக்கூடங்கள்வைத்து அதிக பிள்ளேகளே படிக்கவைக்கலாம். அப்போக்குவரத்தினுல், வியாபாரம் அதிகமாகும். சர்க்கார் வேண்டியவர்களுக்கெல்லாம் லேசன்ஸ் கொடுக்காமல் இருப்பதால், அதன்மேல் சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, பஸ், லாரி லேசன்ஸ், யார்கேட்டாலும், அவர்களுக்குக் கொடுக்கும்படி சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

" ஒவ்வொரு ஜில்லா போர்டும், இன்னும் அதிகம் பணம் வேண்டும், ரோடுகள் போடத்தாயர் என்று சொல்லுகிறது. இதற்கு இடையே இரட்டை நிர்வாகம் இருக்கிறது. ஜில்லா போர்டு, ஒரு பாதி நிர்வாகமும், சர்க்கார் பாதி நிர்வாகமும் நடத்துகிறது. ஜில்லா போர்டு, ஒரு பாதி ரோடுகளே சீரழிக்கிறது, சர்க்கார் அதிலே தலேயிட்டு, இன்னொருபாதியை சீரழிக்கிறது. இவர்கள், எங்கெங்கு ரோடுகள் போடவேண்டுமோ, அங்கு எல்லாம் போடாமல், எங்கு வேண்டாமோ, அங்கு எல்லாம் ரோடுகள் போட்டுக

[Sri S. T. Adityan] [19th March 1955

கொண்டிருக்கின்றன. செல்வாக்குள்ள ஆசாமியாக இருக்குமிடங்களிலும், ஜில்லா போர்டு மெம்பர் இருக்குமிடங்களிலும்தான் அவசரமாக ரோடுகள் அமைக்கிறார்கள். சர்க்கார் இப்பேர்பட்ட காரியங்களில் தலையிட்டு, அவ் விதமாக நடக்காமல்செய்து, இரட்டை நிர்வாகமில்லாமல் ஒத்த நிர்வாக மாக்கவேண்டும். அதாவது, ஒன்று ஜில்லா போர்டு நிர்வாகம், அல்லது சர்க்கார் நிர்வாகமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி இரட்டை நிர்வாகத்தின்கீழ் இருப்பதால், ரோடுகள் எல்லாம் சீரழிகின்றன. இன்னொரு வார்த்தை சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். எங்கள் ஜில்லா போர்டிலே, சமீபத்தில் எலெக்ஷன் நடந்த ஜில்லா போர்டில், **development fund** காக, அதன் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இப்படி ஒதுக்கிவிட்டு, தற்போது, அந்தப்பணம் அதிகமென்றுசொல்லி, அப்படி ஒதுக்கிவிட்டதை ரத்து செய்துவிடுவார்கள்போல் தோன்றுகிறது. அப்படி ரத்து செய்யவிடாமல், ஒதுக்கின பணத்தை, **development** காரியங் களுக்கே செலவுசெய்ய ஏற்பாடுகள் செய்யும்படி கேட்டுக்கொள்ளு கிறேன். தற்போது நேரம் ஆகிவிட்டதால் தலைவருக்கு நன்றி செலுத்திக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

10.50 a.m.

SRI V. K. KANNAN :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக வட ஆற்காடு ஜில்லாவில் அநேக இடங்களில் ரோடு வசதிகள் கிடையாது. எனக்கு முன்னால் பேசினவர்கள்கூட அவர வர்கள் ஜில்லாவில் இம்மாதிரி ரோடு வசதிகள் இல்லை என்று சொன்னார் கள். ஆனால் வட ஆற்காடு ஜில்லாவில் ரோடுகள் வசதி மிக மிக மோசமாக இருக்கிறது. ஐந்தாண்டு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கும் பணத்திலே நாலில் ஒரு பங்கு கிராமமக்கள் கொடுத்தால், அக்கிராமங்களில் ரோடு வசதி செய்வதாக அரசாங்கம் சொல்லுகிறது. வட ஆற்காடு ஜில்லா ரொம்ப பிற்போக்கான, ஏழைமக்கள், பாட்டாளிமக்கள் இருக்கும்படியான ஜில்லா. அஜ்ஜில்லாவிலுள்ள கிராமமக்கள், அவ்விதம் நாலில் ஒரு பங்கு பணத்தை கொடுக்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் ரோடு வசதிகள் செய்யாமல் இருக்கிறது. உதாரணமாக, ஆரணி தாலுக்காவில் 182 கிராமங்கள் இருக்கின்றன. அதிலேயே சுமார் 40 அல்லது 50 கிராமங்களுக்கு போக ரோடு வசதியே கிடையாது. எங்கள் ஜில்லா விலிருந்து வந்திருக்கும் கனம் மந்திரி ஸ்ரீ மாணிக்கவேல் நாயகர், முள் ளுளவு என்ற கிராமத்திற்கு போக, ஏரிக்கரையின் மேலேயே சென் றிருக்கிறார்கள். அங்கு ரோடே கிடையாது. அவர் போன வழி எப்படி இருந்தது என்பது அவருக்கு நன்றாகத் தெரியுமென்று நம்புகிறேன். கனம் மந்திரியார் அவர்கள், இவ்வரசாங்கத்திற்கு வந்து மூன்று வருஷங் களாயின. இந்த கிராமத்திற்கு நல்ல ரோடு வசதி இல்லாதது தெரிந் தும், அங்கு ரோடு போட, இதுவரை எந்தவிதமான ஏற்பாடோ, முயற் சியோ செய்யவில்லை. அவர்களுக்கு நன்றாக, இதைப்பற்றி தெரிந்திருப்ப தால், இதைப்பற்றி குறிப்பாக குறிப்பிடுகிறேன். ஆகவே இப்போது, ரோடு கள் சம்மந்தப்பட்ட இலாகாவை வைத்திருக்கும், கனம் மந்திரியார் அவர்கள், இப்பேர்பட்ட ரோடுகளை எல்லாம் பார்வையிட்டு உடனடியாக, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இந்த ஜில்லா போர்டுகள் நடத்துவதில் பல தொந்திரவுகள் இருக் கின்றன. அந்த ஜில்லா போர்டுகளிலும் கட்சிகள் இருக்கின்றன. ஜில்லா போர்டு, அஜ்ஜில்லா முழுவதிலும் வரி வசூல் செய்கிறார்கள் இந்த வசூலில் கட்சி பேதமே கிடையாது. ஆனால், அந்த ஜில்லா போர்டுக்கு யார் தலைவர்களாக வருகிறார்களோ, அவர்கள் தாலூக்காவின் அபிவிருத்திக்குத்தான் அதிகப்பணம் செலவழிக்கிறார்கள். ஜில்லா முழு வதிலும் வரிப்பணம் வசூல் செய்தாலும், ரோடுகள், எல்லா இடங்களிலும் போடவேண்டுமென்று நினைப்பதில்லை. ஆகையால், கட்சி பேதமில்லாமல், எங்கெங்கு ரோடு வசதிகள் இல்லாமல் இருக்கின்றனவோ, அவ்விடங் களிலெல்லாம் கவனித்து ரோடுகள் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கனம் மந்திரியாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

19th March 1955] [Sri V. K. Kannan]

"அடுத்தபடியாக, முனிசிபாலிடிகளில், முக்கியமாக தண்ணீர் வசதி இல்லாமலிருக்கிறது. ஆரணி பக்கத்தில் ஒரு பர்லாங்கு தூரத்தில் ஆற்று நீர் ஓடுகிறது. இதிலிருந்து தண்ணீர் எடுத்து அந்நகருக்கு தண்ணீர் வசதி செய்துகொடுக்கலாம். இரண்டு வருஷங்களாக அத்தண்ணீர் வசதி திட்டத்திற்காக **sanction** கோரப்பட்டிருக்கிறது. அதிலே அரசாங்கம் ஒரு விதமான அக்கரையும் காட்டவில்லை என்று வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகிறேன். அங்கு இருக்கும் முனிஸிபல் கமிஷனர் அங்கு இருக்கும் மக்களுக்கு உண்மையில் என்ன வசதிகள் செய்யவேண்டும், எந்தக் காரியத்தை முதலில் செய்தால் மக்கள் நல்ல பலனை அடைவார்கள் என்று கவனித்துப் பார்ப்பதேயில்லை. எந்தக் காரியத்தில் லாபம் வரும் எதிலே பங்கு கிடைக்கும் என்று பார்த்தும் வேண்டியவர்கள், வேண்டாத வர்கள் என்று பாகுபடித்தித்தான் வேலை செய்கிறார். அங்கு இருக்கும் மக்களுக்கு பொதுவாக என்ன செய்யவேண்டுமென்று நினைப்பதில்லை. ஆகவே, இப்பேர்பட்ட விஷயங்களில் நம் மந்திரியார் அவர்கள் கொஞ்சம் ஊக்கமெடுத்துக்கொண்டு, ஆங்காங்கு நகர சபைகள் இன்னின்ன முக்கிய காரியங்களை உடனடியாகச் செய்ய உத்திரவுபோட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்தபடியாக ஜில்லா போர்டு உபாத்தியாயர்களைப் பற்றி ஒரு வார்த்தை. அடிக்கடி உபாத்தியாயர்களை அந்த ஜில்லாவுக் குள்ளேயே மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் மேல் தப்பு இருந்தால் மாற்று வது நியாயமாகும். ஒரு குற்றமும் செய்யாதபோதே அடிக்கடி மாற்று கிறார்கள். அவர் வாங்குவதோ மிகுந்த குறைந்த சம்பளம். ஏதோ குரோத மனப்பான்மையினால் அவர்களை இப்படி மாற்றுகிறார்கள் என்று தெரிகிறது. அப்படி மாற்றினாலும், அவர்களுக்கு பிரயாணச் செலவு கொடுப்பதில்லை. நல்லெண்ணத்துடன் மாற்றினால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆகவே, இவ்வித அக்கிரம மாற்றுதல் என்பது இல்லாம லிருக்க, கனம் மந்திரியார் அவர்கள் தக்க உத்திரவுகள் போடவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri G. GOVINDAN :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில், ஜில்லா போர்டு நிர்வாகத்தில் சில முக்கியமான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று மக்கள் கோரி பல ஆண்டுகள் ஆகியும் கூட அந்த வேலைகள் எல்லாம் பூர்த்தி யாகாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் சர்க்கார் போது மான தொகையை ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு ஒதுக்குவதில்லை என்று சொல்லுகிறார்கள்.

"பரமக்குடி தாலூகாவில் மிகவும் முக்கியமானதொரு க்ஷேத்திரமாகிய நயினார் கோவில் என்ற கிராமத்திற்குப் போடப்படும் ரோடு இன்னும் பூர்த் தியாகாமலேயே இருக்கிறது. அதை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டு மென்று நாம் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அதோடு சக்கரக்குடி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் நாலாயிரம், ஐயாயிரத்திற்கு மேல் ஜனத்தொகை இருக்கிறது. இருந்தும் அந்த கிராமத்தில் இன்னும் பஞ்சாயத்து போர்டு அமைக்கப் படவில்லை. பஞ்சாயத்து போர்டை ஆரம்பிக்கும்படியாக பல மனுக்கள் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அதை கவனித்து உடனடியாக அந்த கிராமத்திற்குப் பஞ்சாயத்து போர்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சத்திரக்குடியிலிருந்து காமங்கோட்டைக்கு ஒரு ரோடை போடவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுமிகவும் அவசியமான ரோடு. சத்திரக் குடியில் ஒரு பஞ்சாயத்து போர்டு உள்ள பார்த்திபனூர் நாக்குடி என்ற இடத் தில் ஒரு பாலம் கட்டினால், அருப்புக் கோட்டை ரோடில் குண்டாறு, முது குளத்தூர் தாலூகாவை அது இணைக்கும். அதனால் பஸ் போக்குவரத் தும், இதர போக்குவரத்தும் சுலபமாகும். வியாபாரமும் பெருகும். அந் தப்பாலத்தை உடனடியாகக் கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

" அதோடு ஒரு வாத்தியார் பள்ளிகளை சர்க்கார் சமீபத்தில் அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஐந்நூறு பிள்ளைகளுக்கு மேல் உள்ள கிராமங்களில் எல்லாம் பள்ளி ஆரம்பிக்கும்படியாகவும் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கனம் நிதி மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். ஐந்நூறு பிள்ளைகளுக்கு மேல் உள்ள கிராமங்கள் மிகக் குறைவாக இருக்கும். கிராமங்கள் அநேகம் உள்ளன. ஆகவே அங்கங்கேயுள்ள பல கிராமங்களை இணைத்து அவற்றுக்குப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி கிராம மக்களுக்குக் கல்வி போதிக்க வேண்டியது அவசியம் என்பதை அரசாங்கத்தாருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக ஒவ்வொரு மக்களுக்கும் கல்விக்காகச் சர்க்காருக்கு வரி கட்டிக்கொண்டு தான் வருகிறார்கள். குறிப்பாக ராமநாதபுரம் ஜில்லா போர்டார் நிலவரியோடு கூட கல்விக்காக ஜில்லா போர்டு ரூபாய்க்கு 5 அணா ஒவ்வொருவரிடமிருந்தும் வசூலித்து வருகிறார்கள். இருந்தும் அந்த ஜில்லாவில் போதுமான பள்ளிக்கூடங்கள் இல்லாததால் விவசாயிகள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல் தவிக்கிறார்கள். இது தப்பான காரியம் நிலவரியுடன் கல்வி வரியை எப்படி நாம் அவர்களிடமிருந்து வாங்குகிறோமோ அதைப்போலவே அந்த விவசாயிகளுடைய குழந்தைகளுக்கும் படிப்பதற்குப் போதுமான வசதியை நம் சர்க்கார் செய்து கொடுக்க நிறைய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* Dr. K. B. MENON :—" Mr. Deputy Speaker, Sir, I welcome the two announcements made by the Hon. the Minister for Local Administration. I welcome the statement that the Kuttikrishna Menon Committee's report with regard to reorganisation of District Boards will be scrutinised very soon and that the Government propose to appoint a committee early in 1956 to go into the future of District Boards and Panchayats. The District Boards to-day are starved for want of finance and are just acting as distributing agents of the Government. I welcome also the announcement by the Minister in charge of Public Works that the Highways Department would be taken over by the Government. I also would suggest to the Hon. the Minister in charge of Education that another important function discharged by District Boards—Education—which to-day suffers largely for want of adequate finances be also taken over by the Government even before the changes are brought about in the functions of District Boards as a result of the implementation of the recommendations to be made by the High Level Committee to be appointed by the Government. I also welcome the second announcement made by the Hon. the Minister in charge of Local Administration increasing the powers of the Chairman of Municipalities in the matter of the formulation of the general policy of municipal administration and in various other ways. I would submit in this connection that just when powers of the Chairman are increased the powers of control over him by the elected representatives should also be increased.

11 a.m.

" Otherwise, there will be a tendency on the part of the Chairman to abuse the powers, if he feels quite secure in the position that he holds. The Chairmen of Municipalities can be removed only by a two-thirds majority. I feel that that should be amended

19th March 1955] [Dr. K. B. Menon]

and that it should be made possible for the elected representatives to remove him by a simple majority as is done even in this House. That is my submission.

"With regard to Local Development work in Malabar, I would like to say just a few words. There is ample fund allotted for the district; there are ample funds with the local officers and they can use them for developmental work. My information and experience is that these amounts that are sanctioned are not properly utilised by the officers and they are allowed to lapse. I believe that the Government should exercise a continuous control over this matter and the local officers should be asked to submit reports regularly as to how much they have spent, so that the expenditure could be regulated and there may not be any lapse. I believe that to allow amounts to lapse is prejudicial to the interests of the people and it should be prevented.

"I do not object to the half contribution that is insisted upon by the Government. I think it is a very healthy condition. It tones up and builds up the morale and also I feel that the people themselves are much interested in making this half contribution. I know in the case of Malabar there are a number of village roads constructed by the people. But these roads get into disuse, because the people do not get even any maintenance grant from the Government to keep the roads in good repair. I hope that the Government would institute an enquiry into this. Such roads are there in my own constituency, Ponnani taluk and also I understand from the hon. Member concerned that there are a number of such roads—for instance, the roads in Perambra—which are built by the people but which are not maintained. I wish that the Government would take over all these roads.

"Before I close, I would like to say just one or two words about the Kottapadi-Kundukadavu road. I have been mentioning about this road in season and out of season. In the whole of Andathode firka there is not a single metal road; it is completely starved for want of communication facilities both by way of roads as well as by way of telegraph facilities. I have submitted a proposal to the Hon. Minister and he has promised to consider it carefully and sympathetically. I wish that he would find it convenient to see that the road is metalled; it has been delayed for a very long time and I say again that that particular firka has not even one single metal road. Thank you, Sir."

SRI E. L. RAGHAVA MUDALIAR :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன இலாகாவின் மந்திரியாக இருக்கக்கூடியவர் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திலே நல்ல அனுபவம் வாய்ந்தவராகவும், நகரசபைத் தலைவராகவே பணியாற்றியிருப்பதாலும், ரத்தினசபாபதி முதலியார் கமிட்டியின் முக்கியமான சிபார்சுகளை எல்லாம் உடனடியாக அமுலுக்குக்கொண்டு வருவார் என்று எதிர்பார்த்தோம். எதிர்பார்த்த அளவுக்குப் பயன் இல்லாவிட்டாலும்கூட ஓரளவு அமுலுக்குக்கொண்டு வரவிருப்பாதகத் தெரிகிறது. அதற்கு நன்றி செலுத்திக் கொள்ளு

கிறேன். அவர்களுடைய அனுபவத்திலிருந்து பழைய சட்டத்தினால் ஜில்லா போர்டு தலைவர்கள் எவ்வளவு கஷ்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கி ரூர்கள் என்பது நன்கு தெரிந்திருக்கும். ஆகவே உடனடியாக ரத்தின சபாபதி முதலியார் கமிட்டியின் சிபார்சுகளை அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்று நான் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் அதனை உடனடியாக அமுலுக்குக்கொண்டு வந்தால் அவருடைய பதவி காலமும் நீடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"அடுத்தபடியாக இன்றைக்கு நகரசபையிலுள்ள அதிகாரிகளை கண் காணிக்கக்கூடிய அளவு அதிகாரம் சேர்மன் அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. பெரும்பாலான நகரசபைகளில் கமிஷனர் சேர்மன் யோசனை களின்படியே நடப்பதில்லை. கமிஷனர்களை அடிக்கடி மாற்றுவதற்குவேண் டிய ஏற்பாடு செய்தாலும் நலமாக இருக்கும். அவர்களை ஒரேயிடத்தில் பர்மனெண்டாக வைத்திருப்பதினால் அவர்கள் ஒரு தனி கட்சியை ஏற் படுத்திக்கொண்டு முனிசிபல் நிர்வாகத்தில் தலையிட்டு பல தொந்தரவுகளை கொடுக்கிரூர்கள். ஆகவே ஐந்து வருஷத்திற்கு ஒரு முறையாவது அல்லது அடிக்கடியாவது கமிஷணர்களை மாற்றுவதற்கு சர்க்கார் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

"இப்பொழுது 500-க்குமேற்பட்ட ஜனத்தொகை கொண்ட கிராமங் களுக்கு எல்லாம் பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்தலாம் என்று சட்டம் இருந்துகொண்டிருக்கிறது. சில இடங்களில் இரண்டு மூன்று கிராமங்களை இணைத்துப் பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்தியிருக்கிரூர்கள். அந்த கிரா மங்களின் மக்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்காததின் காரணமாக வரிவசூல் செய்யாமல் பல இடங்கள் அப்படியே இருக்கின்றன. குறிப்பாக என் தாலூகாவில் மாத்திரம் பல பஞ்சாயத்துகள் அப்படியேயிருக்கின்றன. அவர்கள் எல்லோரும் தனித்தனியாகவே பஞ்சாயத்து போர்டுகளை தங்கள் தங்கள் கிராமத்திற்கு ஏற்படுத்தும்படியாகக் கேட்டிருப்பதாகவும் தெரி கிறது. குறிப்பாக அந்தந்த கிராமங்களிலிருந்து வசூலாகும் வரிப்பணம் 50 ரூபாய்தான். ஆனல் கிஸ்தி வசூலிப்பவருக்கும், பாரம் வகையரு வுக்கும் நூற்றுக்குமேல் செலவு அதிகமாகிவிடுகிறது. இந்த வரியை வசூலிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை எடுத்துவிட்டால் மிக லாபகரமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

11-07 a.m. "அடுத்தபடியாக வாணியம்பாடி, நாராயணபுரம் ரோடு போடுவது சம்பந்தமாக 7 வருஷங்களாக வேலை எதுவும் நடைபெருமல் இருந்து கொண் டிருக்கிறது. நாங்களும் இந்த ரோடைப் போடவேண்டுமென்று 7 வருஷ ங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிரோம். கனம் மந்திரி அவர்கள் இவ் வாண்டாவது இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி உடனடியாக வாணியம் பாடி-நாராயணபுரம் ரோடைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri M. KALYANASUNDARAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர் களே, ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ரத்தினசபாபதி முதலியார் கமிட்டி அளித்துள்ள யாதாஸ்தில் அடங்கி யிருக்கும் முக்கியமான சில அம்சங்களை ஏற்றுக்கொண்டு நகரசபைத் தலைவர்களின் அதிகாரத்தை விஸ்தரிக்கக்கூடிய ஒரு மசோதாவை சர்க் கார் விரைவில் கொண்டுவரும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் வர வேற்கிறேன்.

"குறிப்பாக கமிஷணர்களுடைய அதிகாரத்தைக் குறைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனல் சர்க்கார் சொல்லியிருக்கக்கூடிய யோசனை களின்படி நகரசபைத் தலைவர்களின் அதிகாரத்தை விஸ்தரிப்பதன் மூலம் முனிசிபல் கமிஷணர், நகரசபைத் தலைவர் ஆகிய இவர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதங்கள் அதிகப்படுவதற்கும், ஸ்தல ஸ்தாபனங்களின் தலை வர்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்துவிடாமலிருக்க சர்க்கார் இலாகா காரியதரிசிகள் தலையிடவேண்டிய அவசியம் அதிகப்படக்கூடிய முறையிலும் தான் அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதே தவிர சுமுகமான முறையில்

19th March 1955] [Sri M. Kalyanasundaram]

நல்ல காரியங்கள் தடையின்றி நிறைவேற்றப்படுவதற்கு அனுகூலமாக இவை இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை என்பதையும் கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

"ஜில்லாபோர்டு சட்டம், முனிசிபல் சட்டம், போன்றவைகள் நிறைவேற்றப்பட்டு 30 வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. அவற்றை மறுபடியும் நன்கு பரிசீலனை செய்து இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னைகள் எல்லாவற்றையும் கவனத்தில் வைத்துக்கொண்டு புதுமாதிரியான முறையில் அவற்றைத் திருத்தி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சர்க்காருடைய யோசனைப் பிரகாரம் நகரசபைத் தலைவர்களின் அதிகாரத்தை விஸ்தரித்தால், நகரசபை நிர்வாகத்தில் இன்னும் பல புதிய சிக்கல்கள் ஏற்படுமென்றே நான் கருதுகிறேன். குறிப்பாக ஒரு தரம் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், அவர் எவ்வளவு ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலும்கூட அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு முடியாத அளவு அவருடைய அதிகாரம் விஸ்தரிக்க பட்டிருக்கிறது. குறிப்பாக ஒருமுறை வெற்றி பெற்று சேர்மனுகவோ, உபசேர்மனுகவோ வந்துவிட்டால், அவர்கள் ஒழுங்காக நடக்கத் தவறினுல் அவர்களின் பேரில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர கவுன்ஸிலர்களில் 5-ல் இரண்டு பங்கு மெஜாரட்டி முன்பு இருந்தால் போதும் என்று இருந்தது. ஆனுல் இன்றைக்கு அதைமாற்றி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி கவுன்ஸிலர்களில் இருக்கவேண்டுமென்று சர்க்கார் விதி செய்ய உத்தேசித்திருக்கிருர்கள். இது ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் நகரசபைத் தலைவர்கள், நகர சபை உபதலைவர்களுக்கு மிகுந்த பாதுகாப்பாகவே இருக்குமென்பதை சபையில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். யோக்கியமாக நடக்கக்கூடியவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கே பயப்படமாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு 5-ல் 2 பங்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்றுலும், 3-ல் 2 பங்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்றுலும் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. ஆனுல் 3-ல் 2 பங்கு மெஜாரிட்டி இருக்க வேண்டுமென்றுல் ஒழுங்கீனமாக இருக்கும் நகரசபைத்தலைவர்களுக்குத் தான் பாதுகாப்பாக இருக்கும், அவர்களை அதிகாரத்தைவிட்டு விலக்குவதே கஷ்டமாகப்போய்விடும். அதனுல் அவர்கள் மேலும் மேலும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகவே பல காரியங்களைச் செய்யவும் வசதி ஏற்பட்டுவிடும். ஆகவே நகரசபைத் தலைவர்கள் எல்லோரும் பொதுஜன அபிப்பிராயத்திற்குப் பயந்து நடக்கக்கூடிய முறையில் மொத்த கவுன்ஸிலர்களில் பாதிக்குமேல் ஒருவர் இருந்தாலும் போதும் என்று வைத்தால் ரொம்பவும் நியாயமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்பது மிகவும் அபாயகரமானது, இதனுல் நல்ல முறையில் நகரசபைகளின் நிர்வாகம் நடக்காமல் போய்விடும் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

"அதோடு ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர்களுக்கு எந்தக் கடிதம் எழுதினுலும் துரிதமாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு ஒரு கடிதம் போய் வருவது என்றுல் பெரிய கஷ்டமாக இருக்கிறது. அதைப்பற்றி அந்தப்பக்கத்திலிருந்து பேசியிருக்கக்கூடிய அங்கத்தினர்களே எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். அந்த அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கான உத்திரவாதம் இருந்தால்தான் ஸ்தல ஸ்தாபனங்கள் அவ்வப்போது செய்யவேண்டிய கடமையைச் செய்ய முடியும்.

"அதோடு பஞ்சாயத்து போர்டு அதிகாரிகளும், ஜில்லா போர்டு அதிகாரிகளும், அந்தந்த பஞ்சாயத்துக்கும், ஜில்லா போர்டுக்கும் உதவியாக இருப்பதைவிட பெரிய முட்டுக்கட்டையாகவே இருக்கிருர்கள். அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு எந்தக் காரியத்தை எடுத்தாலும் நன்மை

[Sri M. Kalyanasundaram] [19th March 1955

ஏற்படுமா, தீமை ஏற்படுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்து, நன்மை ஏற்படும் என்று தெரிந்தால் உடனடியாக அதை நிறைவேற்ற தக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. அதுவும் மெஜாரிட்டி அதிகாரிகள் நகரசபைத் தலைவர்களுக்குக்கூட கீழ்ப்படிவதில்லை. நகரசபைத்தலைவர்களோடு ஒத்துழைக்க அவர்கள் மறுப்பதாலேயே பல நல்ல காரியங்களையும் ஸ்தல ஸ்தாபனங்களால் செய்ய முடிவதில்லை. ஆகவே மக்களுக்கு அவர்கள் நல்ல சேவை செய்யக்கூடிய முறையில், அவர்களாகவே செய்யாவிட்டாலும் அவர்களைச் செய்யும்படியாக வேலை வாங்கக்கூடிய முறையில் நகரசபைத் தலைவர்களுக்கு அதிகாரம் இருப்பது ஓரளவு அவசியம் தான். அவர்களால் பத்துப் பதினைந்து நாட்களில் நடக்கக்கூடிய காரியங்களைச் செய்ய இரண்டு மாதம், மூன்று மாதம்கூடக் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அப்படி ஒன்றுமில்லாத விஷயங்களை எல்லாம்கூட இழுக்கடிக்கிறார்கள். நானே இரண்டொரு சந்தர்ப்பதில் ஐ.எல்.பி-க்குக் கடிதம் எழுதி துரிதமான நடவடிக்கை எடுக்கும்படியாகச் செய்திருக்கிறேன்.

"குறிப்பாக ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திற்கு அவர்கள் உதவுவதற்குப் பதிலாக பெரும் முட்டுக்கட்டைகளாகத்தான் சில இடங்களில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய மனோபாவம் மாறவேண்டியது மிக மிக முக்கியம். குறிப்பாக கனம் நிதி மந்திரி அவர்கள் போலீஸ் மானியத்தின் மீது விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டு பணியாற்றவேண்டிய மனோபாவம் எதிர்க் கட்சிக்காரர்களிடையே ஏற்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதைவிட மிகவும் முக்கியமானது இந்த ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளுடைய மனோபாவம் மாற வேண்டியது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

"குறிப்பாக முனிஸிபல் கவுன்ஸிலர்கள், சேர்மன்கள் ஆகியோரின் மகாநாட்டைக்கூட்டி அவர்களைவிட்டு இந்த அதிகாரிகள் எந்த முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைப்பற்றி விமர்சனம் செய்யச்சொன்னால் அவர்கள் செய்யக்கூடிய விமர்சனங்களைக்கொண்டே எப்படி எப்படி அந்த நிர்வாக இயந்திரம் திருத்தப்படவேண்டுமென்பதில் சர்க்காருக்கு மிக உதவியாக இருக்கும். ஆனால் முனிஸிபல் கவுன்ஸிலர்களுடைய மகா நாட்டைக்கூட்ட சர்க்கார் ஏன் அஞ்சுகிறார்கள் என்பது தான் எனக்குத் தெரியவில்லை, சென்ற தடவை அவர்களுடைய மகாநாட்டைக்கூட்டியதினால் ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு தான் மறுபடியுமே அவர்களுடைய மகாநாட்டையே கூட்டவேண்டாம் என்று சர்க்கார் தீர்மானித்துவிட்டார்களோ என்றுகூட நான் நினைக்கவேண்டியிருக்கிறது. அவ்வளவு பயம் சர்க்காருக்கு வேண்டியதில்லை என்பது தான் என் அபிப்பிராயம். காரணம் அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலை, அரசியல் கொந்தளிப்பு இன்றைக்குக்கிடையாது. ஆகவே ஒவ்வொரு வருஷமும் அவர்களுடைய மகா நாடுகூட்ட சர்க்கார் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும்."

* **Sri P. G. KARUTHIRUMAN** :—" On a point of information, Sir, கனம் உதவி எதிர்கட்சித் தலைவர் பேசும்பொழுது கவுன்ஸிலர்கள், நகர சபைத் தலைவர்கள் ஆகியோரை ஒரு மகாநாடாகக் கூட்டி ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளைப்பற்றி விமர்சனம் செய்யச் சொன்னால் அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னார். அந்த மகாநாட்டுக்கு ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளையும் வரவழைக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்."

* **Sri M. KALYANASUNDARAM** :—" தாராளமாக அழைக்கலாம். ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளும், ஸ்தல ஸ்தாபன பொதுஜனப் பிரதிநிதிகளும் சேர்ந்தே அந்த மகாநாட்டை நடத்தலாம். அப்பொழுது தான் பொதுஜனப் பிரதிநிதிகள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் அதிகாரிகளுக்கும் தெரியவரும். அதேபோல பொதுஜனப் பிரிதிநிதிகள் எங்காவது தவறாக நடந்து கொண்டிருந்தால் அதை அதிகாரிகளும் எடுத்துச் சொல்லமுடியும். இதனால் இரு சாராருமே யோக்கியமாக, ஒழுங்காக

19th March 1955] [Sri M. Kalyanasundaram]

நடந்து கொள்வதற்கு வசதி ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த மாதிரியான மகாநாடுகள் அடிக்கடி கூட்டப்படவேண்டுமென்று நான் சர்க்காரைக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக பஞ்சாயத்து போர்டுகள், முனிஸிபாலிட்டிகள் ஆகிய வற்றிலுள்ள சுகாதார சம்பந்தமான நிர்வாகத்தைப்பற்றி சிலர் கூறி ஞர்கள். சுகாதாரம் சரியாகப் பாதுகாக்கப்படுவதில்லையென்றும் குறிப்பிட் டார்கள். ஆனால் பஞ்சாயத்து போர்டு, முனிஸிபாலிட்டி ஆகியவற்றிலுள்ள மக்களின் சுகாதாரத்தைக் காப்பாற்றுகிறவர்கள் நகர சுத்தித் தொழி லாளர்கள். அவர்கள் ஒழுங்காக வேலை செய்தால்தான் அவற்றின் சுகா தாரம் பாதுகாக்கப்படும் என்பதை நம் எல்லோருக்கும் தெரியும். சுகா தார நிர்வாகத்தில் ஒரு விதி இருக்கிறது. அதாவது ஒவ்வொரு நகர சுத்தித் தொழிலாளரும் முப்பது அல்லது நாற்பது வீடுகள்தான் சுத்தி செய்யப்படவேண்டுமென்ற விதி எந்த இடத்திலும் அமுலாக்கப்படுவதில்லை. குறிப்பாக எல்லா இடங்களிலும் ஒவ்வொரு தொழிலாளரும் தொண் ணூறு அல்லது நூறு வீடுகளுக்கு மேல் சுத்தி செய்யும்படியாக நிர்பந் திக்கப்படுகிறார்கள். இதனால் தான் பலயிடங்களில் சுகாதாரம் சரியான முறையில் கவனிக்கப்படாமல் போகிறது. நகரசுத்தித் தொழிலாளர்களு டைய எண்ணிக்கையைப் பெருக்கவேண்டும். அது இல்லாததின் காரண மாகத்தான் பலயிடங்களில் தகராறு இருந்து கொண்டேயிருக்கிறது. நக ரத்தின் சுகாதாரம் ஒழுங்காக இருக்கவேண்டுமென்றால் முப்பது அல்லது நாற்பது வீடுகள் தான் ஒரு தொழிலாளி சுத்தம் செய்யவேண்டுமென்ற விதி கண்டிப்பாக எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படவேண்டும். அதோடு நகர சுத்தித் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். அவர்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

"ஆனால் இன்றையதினம் என்ன நடக்கிறதென்றால் நகர சுத்தித் தொழிலாளர்கள் சங்கமே அமைத்துக்கொள்ளக் கூடாதென்று அதிகாரி கள் உத்தரவு போடுகிறார்கள். குறிப்பாக திருச்சிராப்பள்ளியில் இருக்கக் கூடிய ஆர்.ஐ. நகரசுத்தித் தொழிலாளர்கள் அமைத்துக்கொண்டிருக்கிற சங்கத்தை உடனடியாகக் கலைத்துவிடவேண்டுமென்று கடிதம் எழுதுகிறார். இந்தியக் குடியரசுச் சட்டத்தின்படி எந்த அதிகாரிக்கும் இந்த மாதிரியாக சங்கம் அமைத்துக்கொள்பவர்களை, 'நீங்கள் சங்கம் அமைத்துக்கொள்ளக் கூடாது, உங்கள் சங்கத்தைக் கலைத்துவிடவேண்டும்' என்று கடிதம் எழுத அதிகாரமே கிடையாது. ஆனால் அந்தச் சிறு உண்மையைக்கூட உணர்ந்து கொள்ள முடியாத நிலைமையில் அதிகாரிகள் பழைய அதே மனோபாவத் தோடுகூட அதிகாரம் நடத்த முயற்சிப்பதைக்கண்டு நான் வருந்தவேண் டியிருக்கிறது. இந்த மாதிரியான மனோபாவம் படைத்த அதிகாரிகளின் மனப்பான்மை மாறக்கூடிய வகையில் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுப்பதும் ரொம்பவும் அவசியமாகும். சர்க்கார் போடுகிற உத்திரவுகளையே சரியாகப் புரிந்து கொள்ளாமல் நடக்கின்ற பல அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். இந்த மாதிரியான நிர்வாக அதிகாரிகளால் தான் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக மணப்பாறை, அறுப்புக்கோட்டை போன்ற இடங் களில் பல நகரசுத்தித் தொழிலாளர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கி றார்கள். இது மிகவும் தவறானது. இதைப்பற்றி கனம் மந்திரி அவர் களிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இனிமேலாவது நகரசுத்தித் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவும், நகரசுத்தித் தொழிலாளர்கள் முப்பது அல்லது நாற்பது வீடுகளுக்கு மேல் சுத்தி செய்யக்கூடாதென்ற விதியை அமுல்படுத்தவும், அவர்கள் தங்களுக்குள்ளே யூனியன்களை அமைத்துக்கொண்டு தங்கள் கோரிக்கைகள் தங்கள் குறைபாடுகள் ஆகியவற்றைக் களைந்துகொள்ளவும் கனம் மந்திரி அவர்கள் வசதி செய்து தரவேண்டியது ரொம்பவும் அவசியமாகும். அவர்களுடைய யூனியனில் வெளியார் யாரும் இருக்கக்கூடாதென்று விதி முன்பு இருந் தது. இப்பொழுது வெளியார் யார் வேண்டுமானாலும் இருக்கலாம் என் கின்ற உத்திரவை சர்க்காரே போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த உத்திரவு வந்திருக்கிறது என்கின்ற உணர்வு இல்லாமலேயே பலயிடங்

[Sri M. Kalyanasundaram] [19th March 1955

களில் அதிகாரிகள் இந்தத் தொழிலாளர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த அதிகாரிகளுடைய மனோபாவம் மாறுவதற்கான தக்க ஏற்பாட்டை உடனடியாக சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

11-18 a.m. * THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" கனம் உதவி சபாநாயகர்அவர்களே, நான் பிரேரித்திருக்கக்கூடிய ஸ்தல ஸ்தாபன இலாகா மானிய கோரிக்கையை சிலர் ஆதரித்தும், சிலர் வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும் பேசியிருக்கிறார்கள். பொதுவாக எல்லோரும் அவரவர்களுடைய பிரதேசத்தில் அந்த ரோடு போடவில்லை, இந்த ரோடு போடவில்லை என்பதாகவே குறிப்பிட்டார்கள். அது வாஸ்தவம் எல்லா இடங்களுக்கும் ரோடுகள் போட்டுவிட்டதாக சர்க்கார் குறிப்பிடவேயில்லை. எல்லா இடங்களுக்கும் ரோடுகள் போட்டுவிடவேண்டுமென்ற கொள்கையோடுதான் அரசாங்கம் வேலை செய்து வருகின்றது. இருந்தாலும் போடப் பட்டிருக்கும் ரோடுகள் மிகக் குறைவானது என்பதையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறது. இப்பொழுதுதான் எல்லா இடங்களுக்கும் ரோடு போட்டுவிடவேண்டுமென்ற எண்ணத்தை செயலாற்ற நாம் ஆரம்பத்திருக்கிறோம். இப்பொழுது நாம் ஆரம்பப்படியில்தான் இருக்கிறோம். இன்னும் பல கிராமங்களில் ரோடுகள் போடவேண்டுமென்று அரசாங்கத்திற்கு தெரியும். ஆனால் அவற்றையெல்லாம் ஒரே ஆண்டில் போடுவதற்குப் போதுமான நிதி இல்லாததின் காரணமாகத்தான் ஒவ்வொரு வருஷமும் சில சில ரோடுகளைப் போட்டுக்கொண்டு வருகிறோம். வேறு எதுவும் இல்லை. மக்களுக்குப் பூராவாக ரோடு வசதிகளையெல்லாம் செய்துகொடுத்துவிட்டோம் என்று நாங்கள் ஒருபோதும் சொல்லிக்கொள்ளவில்லை. கனம் அங்கத்தினர்கள் கூறிய யோசனைகளையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு கூடுமானவரையில், கையிலிருக்கும் நிதி வசதிக்கேற்ப எல்லா வசதிகளையும் மக்களுக்குச் செய்து கொடுக்க இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்குமென்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" இரண்டாவதாக கிராமங்களுக்குப் போதுமான டாக்டர்கள் சேவை செய்யப்போக முன்வருவதில்லை. அதோடு எம்.பி., பி.எஸ். டாக்டர்களுக்கு ஜில்லா போர்டுகள் மிகவும் குறைந்த சம்பளமே கொடுப்பதால் அவர்கள் ஜில்லா போர்டுகளில் சேவை செய்ய முன்வருவதில்லை. அவர்களுடைய சம்பளத்தையும் அதிகப்படுத்தவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக கனம் நிதி மந்திரி அவர்கள் ஜில்லா போர்டு தலைவர்களின் அபிப்பிராயத்தைக் கோரியிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கிற அபிப்பிராயத்தின்பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரத்திலேயே கிராம டாக்டர்கள் நியமிக்கப்படும் விஷயமும் கவனிக்கப்படும் என்று இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" அதோடு பெரும்பாலான அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் பிராந்தியங்களில் ரோடு வசதியில்லை, பால வசதியில்லை, பள்ளிக்கூட வசதியில்லை என்பதாகப் பல புகார்களைக் கூறினார்கள். குறிப்பாக ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள், கோயமுத்தூர், சேலம் ஆகிய இரண்டு ஜில்லாவையும் சேர்க்கக்கூடிய பாலம் ஒன்றை ஈரோடுக்கு அருகே காவிரியில் கட்டவேண்டுமென்றும், அதை நானே வந்து திறப்பு விழாவும் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. பணம் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருப்பதோடுகூட, அதை எப்படி கட்டலாம் என்கின்ற விஷயத்தையும் கோரி அந்த இலாகா சம்பந்தப்பட்ட மந்திரி அவர்களுக்கு கடிதம் போயிருக்கிறது. ஹைவேஸ் இலாகாவும் கலந்து ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே சீக்கிரத்திலேயே இது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு முடிவைச் செய்யும், அந்த வேலையும் துவக்கப்படும். நானே அந்தப் பாலத்தைத் திறந்து வைப்பதற்கும் அவசியம் வருகிறேன் என்று ஸ்ரீ ராஜு அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (பலத்த கரகோஷம்.)

19th March 1955] [Sri S. S. Ramasamy Padayachi]

"ஸ்ரீ எ. கோவிந்தசாமி அவர்கள் பேசும்பொழுது 'தென்னுற்காடு ஜில்லாவில் பல கிராமங்களுக்கு ரோடு வசதியே இல்லே, அவ்விஷயம் எனக்கும் தெரிந்திருக்கும், அந்த கிராமங்களுக்கு எல்லாம் உடனடியாக ரோடுகள் போடவேண்டும்', என்று கேட்டுக்கொண்டார். எனக்கே அவ் விஷயங்கள் எல்லாம் தெரியும் என்று அவரே சொல்லுவதன் காரணமாக அந்தப் பொறுப்பை என் கையில் ஒப்படைத்து விடும்படியாக அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தப் பொறுப்பை எப்படி நிறைவேற்றுவது என்பது எனக்குத் தெரியும். அதைப்பற்றி நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளவே ஆசைப்படுகிறேன். குறிப்பாக தென்னுற்காடு ஜில்லா ரயில்வே செஸ் நிதியில் 13·73 லட்சம் ரூபாய் இருக்கிறது. அப் பணத்தைக்கொண்டு உடனடியாக அந்த ஜில்லாவிற்கு ரோடு வசதிகள் செய்து கொடுக்கலாமென எண்ணிக்கொண்டிருக்கிறேன். அந்தப் பணத்தில் எட்டு லட்சம் ரூபாய் கோரி அதை ரோடு வசதிகளுக்காகச் செலவிடும்படியாகச் யோசனை கூறினார்கள். எட்டு லட்சம் ரூபாய் இல்லே, பூராப்பணத்தையுமே இந்த ஜில்லாவின் வசதிகளுக்காகச் செலவிடவேண்டுமென்பது என் அபிப்பிராயம். அதுமாத்திரம் அல்ல.

"எந்தெந்த ஜில்லாக்களில் இதுமாதிரியாக ரயில்வே செஸ் நிதி இருக்கிறதோ அந்தந்த ஜில்லாக்களில் அந்தந்தப் பணத்தைக்கொண்டு ரோடு வசதி, பால வசதி, இன்னும் சிறிய சிறிய 'காஸ்வேஸ்', ஆகிய வற்றைச்செய்து கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை என்பதை இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அந்த பணம் பூராவாகவும் முடங்கிக் கிடைக்கின்றது. குறிப்பாக ரயில்வே செஸ் நிதி தென்னுற்காடு ஜில்லாவில் 13·73 லட்ச ரூபாயும், கோயமுத்தூர் ஜில்லாவில் 25·50 லட்ச ரூபாயும், மதுரை ஜில்லாவில் 6·50 லட்ச ரூபாயும், ராமநாதபுரம் ஜில்லாவில் 1·95 லட்ச ரூபாயும், சேலம் ஜில்லாவில் 21·20 லட்ச ரூபாயும், தஞ்சாவூர் ஜில்லாவில் 77·54 லட்ச ரூபாயும், திருநெல்வேலி ஜில்லாவில் 26·99 லட்ச ரூபாயும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் 2·89 லட்ச ரூபாயும் முடங்கிக் கிடக்கின்றன. அந்தப் பணத்தையெல்லாம் எடுத்து மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ரோடு வசதிகளேயும், பால வசதிகளேயும், 'காஸ்வேஸ்' வசதிகளேயும் செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்தார் தக்க ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிகொள்ள ஆசைப்படுகிறேன்."

Sri M. DHARMALINGAM:—"கனம் மந்திரி அவர்கள் ரயில்வே செஸ் நிதி இருக்கக்கூடிய சில ஜில்லாக்களேக் குறிப்பிட்டு, அந்தந்த ஜில்லாக்களுக்கு எல்லாம் வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். செங்கற்பட்டு ஜில்லாவிற்கு ஏதாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்."

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI:—"எந்தெந்த ஜில்லாக்களில் ரயில்வே செஸ் நிதி இருக்கின்றதோ அந்தந்த ஜில்லாக்களில் தான் அந்தந்த நிதி உபயோகப்படுத்தப்படும். செங்கல்பட்டு, வடாற்காடு ஜில்லாக்களில் ரயில்வே செஸ் நிதி கிடையாது.

"அடுத்தப்படியாக ஸ்ரீ ராமசாமி தேவர் அவர்கள் பேசும்போது தற்போது கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் ரொம்பவும் அதிகம் என்றும், அதைக் குறைத்து முனிசிபல் சேர்மன்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். முனிசிபல் சேர்மன்களுடைய உரிமைகளேயெல்லாம் பாதுகாப்பதற்கும், கமிஷனர்களுடைய தலேயீட்டைக் குறைப்பதற்கும் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் யோசனே செய்து கொண்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீ ராமசாமி தேவர் அவர்கள் பேசும்பொழுது கமிஷனர்கள் முனிசிபல் நிர்வாகத்தில் அதிகம் தலேயிடுகிறார்கள் என்று குறிப்பிட்டார். ஆனல் சேர்மன் போன்றவர்களும் இதர கவுன்ஸிலர்களும்தான் முனிசிபல் கமிஷனரின் நிர்வாகத்தில்

[Sri S. S. Ramasamy Padayachi] [19th March 1955

அதிகம் அனுவசியமாகத் தலையிடுவதாக அரசாங்கத்திற்குத் தெரிய வருகிறது. இதுவும் தப்பாகும். கமிஷனர்களுடைய நிர்வாகத்தில் கவுன் ஸிலர்களும், சேர்மன்களும் அதிகமாக, அனுவசியமாகத் தலையிடாமல் இருக்கவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

"அடுத்தப்படியாக ஸ்ரீ ஆதித்தன் அவர்கள் பேசும்பொழுது, எதற்காக பஸ், லாரி போன்றவைகளுக்கு லைசென்ஸ் வழங்கவேண்டுமென்றும், அவர வர்கள் அவரவர்களின் இஷ்டப்படி நிறைய பஸ்கள், லாரிகள் முதலிய வற்றை விடுவதற்கு அனுமதித்தால் சர்க்காருக்குத்தான் அதிக வரு மானம் வருமென்றும், ஆகவே லைசென்ஸ் முறையை வைத்து லாரி, பஸ் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தாமல் கேட்கிறவர்களுக்கு எல்லாம் லைசென்ஸ் வழங்கும்படியாகவும் யோசனை கூறினார். அவரது யோசனையை நான் அந்த இலாகா சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அவர் இந்த யோசனையை நன்கு பரிசீலனை செய்து சமயம் வரும்போது ஸ்ரீ ஆதித்தன் அவர்களுக்கும் பதில் சொல்வார்கள் என்றும் நம்புகிறேன்.

"அடுத்தபடியாக ஸ்ரீ கண்ணன் பேசும்பொழுது பலவிடங்களில் எந் தெந்த இடங்களுக்கு ரோடு போடவேண்டுமென்பதைக் கவனித்து அவ சியம், அவசரம் ஆகியவற்றை மாத்திரம் கணக்கெடுத்துக்கொண்டு ஜில்லா போர்டுகள் ரோடுகளைப் போடுவதில்லை என்றும், தங்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களின் இடத்திற்குத்தான் முதலில் ரோடுகள் போடப் படுவதாகவும், அதோடு ஜில்லா போர்டு தலைவராக யார் வருகிறார்களோ அவர்களுடைய ஊருக்குத்தான் முதலில் ரோடுகள் போடுவதாகவும் புகார் சொன்னார்.

"அதைப்பற்றி நான் விசாரித்ததில் ஜில்லா போர்டு தலைவராக வரு கிறவர்களின் கிராமத்திற்கு முதலில் ரோடுகள் போடப்படுவதில் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது. எப்படியென்றால் ஜில்லா போர்டு தலைவர் இருக்கக்கூடிய கிராமத்திற்கு ஜில்லா போர்டு மெம்பர்களும், ஜில்லா போர்டு அதிகாரிகளும் அடிக்கடி போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. குறிப்பாக அதிகாரிகள் நிர்வாக விஷயமாக ஜில்லா போர்டு தலைவரோடு அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. ஜில்லா போர்டு தலை வர் வசிக்கக்கூடிய கிராமத்திற்கு நல்ல ரோடு வசதியில்லையென்றால் அந்த அதிகாரிகளால் உடனே நேரில் போய் அவரோடு கலந்து பேச வசதியில்லாமல் போகிறது. அதனால் காலதாமதமும் ஆகிறது. ஆகவே ஜில்லா போர்டு தலைவரை ஜில்லா போர்டு மெம்பர்களும், ஜில்லா போர்டு அதிகாரிகளும் காலதாமதமன்றி அவர்களுடைய கிராமத்திற்கே சென்று நிர்வாக விஷயமாகக் கலந்து பேசுவதற்கு வசதியிருக்கவேண்டுமென் பதற்காகத்தான் அவர்களுடைய கிராமங்களுக்கு முதலில் ரோடுகள் போடப்படுவ்தாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இதில் தவறு இல்லையென்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஜில்லா நிர்வாகத்தின் அனுகூலத்தை உத்தேசித்தே இப்படி ரோடுகள் போடுவதால் இதை கனம் அங்கத் தினர்கள் பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லக்கூடாது என்று இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"ஸ்ரீ ஜி. கோவிந்தன் பேசும்பொழுது 'ராமநாதபுரம் ஜில்லாவில் பணமில்லாததின் காரணமாக பல ரோடுகள் போடப்படாமல், வேலை அப்படியே நின்று போயிருக்கின்றன. அந்த ஜில்லாவிற்கு கொஞ்சம் அதிக மானியம் ஒதுக்கி அந்த ரோடுகளை எல்லாம் போட்டுத்தரவேண்டும்', என்பதாகக் கேட்டுக்கொண்டார். நான் ஏற்கெனவே எந்தெந்த ஜில்லாக் களில் ரயில்வே செஸ் நிதி இருக்கிறதோ அந்தந்த ஜில்லாக்களில் அந்தப் பணத்தைக்கொண்டு ரோடு வசதி, பால வசதி, 'காஸ்வேஸ்' வசதி ஆகியவற்றைச் செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். ராமநாத புரம் ஜில்லாவிலும் ரயில்வே செஸ் நிதி இருக்கிறது. ஆகவே அவர் கூறிய யோசனைகள் எல்லாம் கவனிக்கப்படும் என்று அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

19th March 1955] [Sri S. S. Ramasamy Padayachi]

" அடுத்தபடியாக ஸ்ரீ கே. பி. மேனன் அவர்கள் பேசும்பொழுது முனிஸிபல் சேர்மன்களுடைய அதிகாரத்தை அதிகப்படுத்தினுல், அவற்றை அவர்கள் துஷ்பிரயோகம் செய்ய வசதி ஏற்படும் என்றும், ஆகவே அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரத்தையும் சர்க்கார் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் சொன்னுர். இன்றையதினம் முனிஸிபல் சேர்மன்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லாததாலும், அவர்களுடைய உரிமைகளைக் காப்பற்றிக்கொள்ள வசதியில்லாததாலும் பல இடங்களில் நல்ல காரியங்கள் எதையுமே அவர்களால் செய்யமுடியாமல் இருக்கிறது. அவர்களுக்குக் குறைந்தது சில குறிப்பிட்ட அதிகாரமாவது இருந்தால்தான் அவர்களால் மக்களுக்கு நல்ல முறையில் பல நல்ல காரியங்களைச் செய்யமுடியும் என்பதற்காகத்தான் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சர்க்கார் முன் வந்திருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு ஏதோ அரசாங்கம் அளிப்பதாக யாரும் நினைக்கக்கூடாதென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" எதிர்கட்சி உதவித் தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும் இதைப்பற்றியே குறிப்பிட்டார். பொதுவாக முனிஸிபல் சேர்மன்களின்மீது அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதாகவும், ஒழுங்காக நடந்து கொள்ளாத முனிஸிபல் சேர்மன்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 'சேர்மன், உபசேர்மன்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர கவுன்சிலர்களில் 5-ல் 2 பங்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்பதை 3-ல் 2 பங்கு இருக்க வேண்டுமென அரசாங்கம் உயர்த்துவதாகக்' குறை கூறினுர். அது சரியல்ல. இந்த ராஜ்யத்தில் மொத்தம் 61 நகரசபைகள் இருக்கின்றன. அவற்றில் திரும்பத்திரும்ப நான்கைந்து நகர சபைகளில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகின்றன. ராஜ்யம் பூராவும் பாக்கியிருக்கக்கூடிய நகர சபைகளின் நிர்வாகம் மிகவும் நன்ருகவே நடைபெற்று வருகின்றன. இந்த நான்கைந்து நகரசபைகளிலும் அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்து கொண்டேயிருப்பதால் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியாமலிருக்கின்றன என்பதற்காகவே அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென நிர்ணயித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

" மலையாளம் ஜில்லாவில் ரோடுகள் போடப்படவேண்டுமென்றும் பாலங்கள் கட்டப்படவேண்டுமென்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் இம்மாதிரி வேலைகள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். மலையாள தென் கன்னட ஜில்லாக்களில் பாலம் கட்டப்படுவது சம்பந்தமாக அன்ருடம் சபையில் நான் கேள்விக்குப் பதில் சொல்லி வந்திருக்கிறேன். அங்கத்தினர்கள் குறிப்பிடும் பாலங்களையெல்லாம் கட்டி முடிக்கவேண்டுமானுல் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகுமென்றும் சொல்லியிருக்கிறேன். எத்தனை கோடி ரூபாய் செலவாகுமென்று திட்டமாகத் தெரியவில்லை. தற்போது சர்க்காரின் நிதி நிலைமைக்கேற்றபடி அவ்வப்போது ஓரளவு செய்து கொண்டு வருகிறோம். பூராவாகவும் முடித்துவிட்டோம் என்று நான் கூறவில்லை. மலபார் ஜில்லாவில் நில அமைப்பு, அதிக மழை போன்ற இயற்கையான காரணங்களால் அங்கு ரோடு வசதி ஓரளவு குறைவாக இருக்கிறது. அங்கு முழு ரோடு வசதியும் செய்து கொடுக்க முடியவில்லை என்பதை அரசாங்கம் தெரிந்திருக்கிறது." 11-28 a.m.

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" மலையாள ஜில்லாவில் மழை அதிகமாக இருக்கிறது. ரோடுகள் போடமுடியவில்லை என்று சொல்வது சரியல்ல. ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனுல் அவைகள் சரியாக maintenance செய்யப்படுவது கிடையாது ; repair செய்யப்படுவது கிடையாது. சர்க்கார் இவைகளையெல்லாம் கவனிக்கமாட்டேன் என்கிறது. ஆகையால், கனம் அமைச்சரவர்கள் இவ்விஷயத்தைக் கொஞ்சம் கவனித்து உதவி பண்ணுவார்களா என்று கேட்கிறேன். அமைச்சரவர்கள் தயவு செய்து பதில் சொல்லவேண்டும்."

[19th March 1955

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" மலையாள ஜில்லாவிலுள்ள ரோடுகளைப் பாதுகாப்பதற்கும் ரோடு வசதி செய்து கொடுப்பதற்கும் என்னைவிட நல்ல நிலைமையில் இருக்கின்ற ஜில்லா போர்டு தலைவர், கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயணன் நம்பியார் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், அதை நன்றாகக் கவனித்துச் செய்யவேண்டும். அந்தப் பொறுப்புகளெல்லாம் ஜில்லா போர்டு தலைவருக்கு இருக்கும் காரணத்தினால் அந்த ஜில்லாவின் தேவைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறினால் வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" எதிர்க்கட்சி உப தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் பேசுகையில் லோகல் போர்டுகளின் ரிஜினல் இன்ஸ்பெக்டர் காரியாலயங்கள் ஒவ்வொன்றும் ஏராளமான பஞ்சாயத்து போர்டுகளையும் முனிசிபாலிடிகளையும் மேற்பார்வை பார்க்க வேண்டியிருக்கிறதென்றும் வேலையைச் சரியாக கவனிக்க முடியாத அளவுக்கு விரிவாக இருக்கின்றனவென்றும், பஞ்சாயத்துப் போர்டுகளிலிருந்து வரும் புகார்களை ரீஜினல் இன்ஸ்பெக்டர்கள் உடனுக்குடன் சீக்கிரமாக விசாரித்து பைசல் செய்வதற்கு முடியாமலிருக்கிறதென்றும், மாதக் கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறதென்றும் கூறியிருக்கிறார். இது விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் ஏற்கெனவே இருந்துவருகிறது. ஆகவேதான் மேலும் ஒரு ரீஜினல் இன்ஸ்பெக்டரைப் போட்டிருக்கிறோம். இப்படிச் செய்வதன்மூலம் ஒவ்வொரு ரீஜினல் இன்ஸ்பெக்டரும் தங்களுடைய மேற்பார்வையிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் குறைகளை உடனுக்குடன் கவனித்துச் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். ஏனென்றால், முன்போல் இல்லாமல் ஒரு சில ஜில்லாக்களிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களை மட்டுந்தான் அவர்கள் மேற்பார்வையிட வேண்டியிருக்கும். அவரவர்களின் கீழுள்ள ஸ்தாபனங்களின் குறைகளையும் புகார்களையும் காலதாமதமின்றி கவனித்து, குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் மேலும் ஒரு ரீஜினல் இன்ஸ்பெக்டர் காரியாலத்தை 'create' பண்ணியிருக்கிறோம். ஆகவே, இந்தக் குறையும் தீர்க்கப்பட்டுவிடும் என்று கூறவிரும்புகிறேன்.

" சர்க்காரால் நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரிகள் ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களிடமும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமும் மரியாதையாக நடந்துகொள்ளுவது கிடையாது. அதிகார தோரணையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்று கூறப்படும் complaint களையும் விசாரித்து அரசாங்கம் அவ்வப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிமீது தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. நான் சுற்றுப்பிரயாணம் செய்யும் இடங்களில் ஜில்லா போர்டு, நகரசபை, பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களைக் கூட்டி ஆங்காங்கு கூட்டம் போட்டு, அவரவர்கள் சொல்லும் யோசனைகளையும் அவரவர்களுக்கு உண்டான குறைகளையும் நான் கேட்டு அதற்கு வேண்டிய பரிகாரங்களை நான் செய்துவருகிறேன். எங்கெங்கு ரோடுகள் போடவேண்டும், எங்கெங்கு குடி தண்ணீர் வசதி செய்யப்படவேண்டும், எந்தெந்த இடங்களில் என்னென்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி தெரிந்துகொள்வதோடுகூட மேற்படி காரியங்களை ஸ்தல ஸ்தாபனங்கள் நிறைவேற்றிக் கொடுப்பதற்குக் குந்தகமாக இருக்கும் காரணங்கள் என்னவென்பதையெல்லாம் ஆராய்ந்து வேண்டுவன செய்து வருகின்றேன். ரீஜினல் இன்ஸ்பெக்டர் காரியாலயங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்று குறை சொல்லப்பட்டால், அதையும் கவனித்து காலதாமதத்திற்கு காரணமாயிருக்கும் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இம்மாதிரி முறைகளில் எல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களின் குறைகள் கவனிக்கப்பட்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு காலதாமதம் செய்யக்கூடிய அதிகாரிகளின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, ஸ்தல ஸ்தாபன நிர்வாக விஷயத்தில் யாதொருவிதமான குறையும் இருக்காது என்று எதிர்க்கட்சி உப தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நான் உறுதியளிக்கின்றேன்.

" கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராகவ முதலியார் பேசும்போது, முனிசிபல் கமிஷனர் பதவியை ராஜ்ய சர்வீசில் சேர்ப்பதுபோல் மானேஜர் முதலிய சில பதவிகளையும் அவ்வாறு 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்யவேண்டுமென்றும் இதர முனிசிபாலிடிகளுக்கும் மாற்றக்கூடிய வகையில் அமைக்க

19th March 1955] [Sri S. S. Ramasamy Padayachi]

வேண்டுமென்றும் சொன்னார். இப்பொழுது முனிசிபல் கமிஷனர்கள் நியமனங்களை மாகாண சர்வீஸ் ஆக்குவதற்கு முடிவு செய்திருக்கிறோம். மானேஜர் பதவிகளையும் அம்மாதிரி செய்யவேண்டுமென்று சொன்னால், அதுவிஷயம் பரிசீலனை செய்யப்படவேண்டும். பண சம்பந்தமான பிரச்னை என்ன என்பதையும் பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டும். இது விஷயத்தையும் நான் கவனிக்கிறேன்.

" நிர்வாக அதிகாரிகளை ஒரே இடத்தில் அதிக நாட்கள் வைத்திருந்தால் அவர்கள் கட்சி மனப்பான்மை கொண்டுவிடுகிறார்களென்றும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள், குழப்பமான நிலைமையை உண்டாக்குகிறார்கள் என்றும் ஸ்ரீ ராகவ முதலியார் கூறினார்கள். இம்மாதிரி குழப்பமான நிலை ஐந்தாறு நகரசபைகளில்தான் ஏற்பட்டிருக்கிறதேயொழிய அதிகமான இடங்களில் இல்லையாதலால் விசேஷ கவனம் செலுத்தவேண்டியதில்லையென்று நினைக்கிறேன். மூன்று வருஷங்களுக்குமேல் ஒரு கமிஷனர் ஒரு இடத்தில் இருக்கக்கூடாது, கூடிய சீக்கிரம் மாற்றவேண்டுமென்று ஸ்ரீ ராகவ முதலியார் கூறினார். இது பற்றியும் நான் கவனிக்கிறேன்.

" கனம் அங்கத்தினர்கள் சொன்ன அரிய யோசனைகளையெல்லாம் நான் பரிசீலனை செய்து ஆவன செய்வதற்கு முயற்சி செய்கிறேன், என்று சொல்லிக்கொள்ளுவதோடுகூட ஸ்தல் ஸ்தாபன நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்குவேண்டிய உதவியை கனம் அங்கத்தினர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வெட்டுக் பிரேரணையைக் கொண்டு வந்த கனம் அங்கத்தினர் அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

* Sri K. C. GOPALAN UNNI :—" Sir, I thought that the Hon. Minister could not understand my Malayalam. Therefore, I gave certain names in English. The Hon. Minister has not replied to those points. I request him to reply to them."

DEPUTY SPEAKER :—" May I know whether the hon. Member Sri T. C. Narayanan Nambiar is withdrawing his cut motion? "

Sri T. C. NARAYANAN NAMBIAR :—" In spite of the fact that most of our Members wanted very concrete and definite answers from the Hon. Minister, an attempt has really been made to meet the various complaints and grievances ventilated by the various hon. Members. To that extent, I have to congratulate the Hon. the Minister for Local Administration. I hope that the healthy, constructive, useful and helpful suggestions given by the Malabar District Board will be examined by the Government and necessary action taken. I beg leave to withdraw my cut motion."

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER :—" I shall now put the original Demand to vote. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 66,59,700 under Demand XXVI—Civil Works—Grants-in-Aid.' "

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND XLII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" On the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rs. 6,12,45,000 under Demand XLII—Loans and Advances by the State Government.*' "

DEPUTY SPEAKER :—" Demand moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 6,12,45,000 under Demand XLII—Loans and Advances by the State Government.' "

SRI K. T. RAJU :—" Sir, I move—

' *That the allotment of Rs.* 6,12,45,000 *under Demand XLII—Loans and Advances by the State Government be reduced by Rs.* 100.' "

The cut motion was duly seconded.

DEPUTY SPEAKER :—" Cut motion moved—

' That the allotment of Rs. 6,12,45,000 under Demand XLII—Loans and Advances by the State Government be reduced by Rs. 100.' "

SRI V. MADANAGOPAL :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே விவசாயிகளுக்குக் கடனாகவும், அட்வான்ஸாகவும் பணம் கொடுப்பதற்காக நிதி மந்திரி அவர்கள் சபை முன்பு மான்யம் கோரியிருக்கிறார். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

" இந்த மான்யத்தில் விவசாயிகளின் உதவிக்காக பல இனங்களில் ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ஒன்றறை கோடி ரூபாய்தான். இந்த ராஜ்யத்திலுள்ள விவசாயிகளுடைய கடன் தேவைகளையும் சர்க்கார் செய்து கொடுக்க உத்தேசித்திருக்கும் கடன் வசதிகளையும் ஒத்திட்டுப் பார்த்தால் ' யானைப் பசிக்கு சோளப்பொறி ' மாதிரி இருக்கிறது.

" விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் சமீபத்தில் நிறை வேற்றப்பட்டதன் காரணமாகவும், விலைவாசி வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும் விவசாயிகளுக்குக் கிராமப் புறங்களில் கடன் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கடன் கிடைக்காததன் காரணமாக விவசாயிகள் கடுமையான வட்டிகொடுத்து கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன் சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார் எல்லா விஷயங்களையும் விட மிக அவசர விஷயமாக இதைக் கவனிக்க வேண்டும். "

DEPUTY SPEAKER :—" The hon. Minister will reply to the **debate at 1-15 p.m.** "

SRI V. MADANAGOPAL :—" விவசாயிகளுக்குக் காலா காலங்களில் வசதியான முறையில் கடன் கிடைக்காததன் காரணமாக விவசாய உற்பத்தி பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, குறைந்த பட்சம்

19th March 1955] [Sri V. Madanagopal]

ஜில்லாவுக்கு ஒரு கோடி ரூபாயாவது ஒதுக்கி, விவசாயிகளுக்கு எவ்வெப்போது கடன் தேவைப்படுகிறதோ அவ்வப்போது கடன் காலாகாலத்திலும், காலதாமதமில்லாமலும் கிடைப்பதற்கு சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். கடன் கிடைக்காததன் காரணமாக விவசாயத்திற்கு அத்தியாவசியமான உரம், விதை போன்றவைகளுக்கு பணம் கிடைக்காமல் விவசாயம் சரியான முறையில் நடைபெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

"கூட்டுறவு credit சொசைடிகள் மூலமாக சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன்கள் சமீப காலங்களில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடன் பாக்கிகளைத் தவணை கடந்துவிட்டதால் அவர்களுக்கு கூட்டுறவு credit சொசைடிகள் மூலம் கடன் கொடுக்கப்படாமலிருக்கிறது. இதுபற்றி கூட்டுறவு credit சொசைடிகளுக்கு சர்க்கார் ஒரு யோசனை கொடுத்தாகவேண்டும். அதாவது Society-களில் தவணைப்படி பாக்கியை செலுத்தாதவர்களுக்கு கடன் ஸாங்ஷன் செய்யாவிட்டாலும், தவணைப்படி பாக்கியின்றி செலுத்தியவர்களுக்கு ஸாங்ஷன் செய்யவேண்டும் என்று யோசனை கூறவேண்டும். விவசாயிகளுக்கு கூட்டுறவு credit சொசைடிகளிலிருந்து சுலபமாகக் கடன் கிடைக்க உதவி செய்யவேண்டும்.

"தக்காவிக்கடன் வேண்டுமென்று ஒரு தாலூகாவில் அதிகமான விவசாயிகள் மனுச் செய்துகொண்டும்கூட ஒரு சிலருக்குத்தான் பணம் கிடைக்கிறது. பணம் குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம். ஒரு கிராமத்தில் 100 பட்டாதார்களிருந்தால், அவர்களில் 10 பேர்களுக்குத் தனிப்பட்டா இருக்கும், 90 பேர்களுக்கு ஜாயிண்ட் பட்டா இருக்கும். கடன் விவசாயிகளுக்கு sanction செய்வதற்காக உள்ள தாசில்தார்கள் பெரும்பாலான மனுக்களைப் புறக்கணிக்கிறார்கள். ஜாயிண்ட் பட்டாக்கள் இருந்தபோதிலும்கூட நிலம் சொந்த சாகுபடியில் இருக்கிறதென்று கிராம முன்சிபிடமிருந்து certificate பெற்று ஆதாரம் காட்டிவிட்டால் கடன் கொடுக்கப்படவேண்டும். விவசாயிகள் கடன் பெறுவதற்குள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்து சுலபமாகக் கடன் கிடைப்பதற்குள்ள வசதியைச் சர்க்கார் செய்து கொடுக்கவேண்டும்.

"தக்காவிக் கடன் கொடுக்கும்போது புஞ்சைக் காடுகளின்பேரில் கடன் கொடுப்பதில்லை. இரண்டு, மூன்று ஏக்கராக்கள் புஞ்சைக்காடுகளாக இருந்தாலும் தக்காவிக்கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நஞ்சை, தோப்புப் பிரதேசங்களின் பேரில் மட்டும் தக்காவிக் கடன் கொடுக்கப்பட்டு புஞ்சைப் பிரதேசங்களின்பேரில் கொடுக்காமலிருப்பது சரியல்ல. புஞ்சைப் பிரதேசங்களின் மதிப்பைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அந்த சொத்துக்களின் பேரில் 100 முதல் 200 ரூபாய் வரையிலுமாவது தக்காவிக் கடன் 'சாங்ஷன்' செய்யும்படிச் செய்தால் அவர்களும் விவசாயம் செய்ய முடியும்.

"தக்காவிக் கடன் கொடுக்கும்போது சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று பார்த்து அந்த மதிப்பில் நான்கில் ஒரு பகுதியோ, ஐந்தில் ஒரு பகுதியோதான் கடன் கொடுக்கப்படுகிறது. அப்படியில்லாமல் சொத்தின் மதிப்பில் 50 சத விகிதம் தக்காவிக்கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சொத்தின் மதிப்பில் பாதித் தொகை கடன் கொடுப்பதன் மூலம் பெரும்பாலானவர்களுக்கு கடன் வசதி கிடைக்க ஏதுவாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"இந்த Agriculture Department-ன் மூலமாக, விவசாயிகளுக்கு விதை, உரம், மற்றும் இதர சாமான்கள் கடன் கொடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால், அந்தந்த பிரதேச விவசாயிகள், எந்த பருவத்தில் என்ன விதைகள் தேவை என்று கேட்கிறார்களோ, அவை இருப்பதில்லை. விதை நெல் கேட்டால், பருத்தி விதை இருக்கிறது என்கிறார்கள். பருத்தி விதை கேட்டால், வேறு விதைகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். கேட்கும் விதைகள் Stock-இல் இல்லாமல் இருக்கின்றன, 11-40 a.m.

ம்பந்தப்பட்ட விதைக்காலங்களில், விதைகள் கேட்டால் நாங்கள் ஏற்பாடு செய்யவில்லை என்று சொல்லுகிருர்கள். ஆகவே இந்த இலாகாவானது முன் கூட்டியே, விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கு என்று ஒவ்வொரு பிர தேசத்திலும் என்னென்ன விதைகள் தேவைப்படுகின்றன என்பதைப் பார்த்து வாங்கி வைக்கவேண்டும். குறிப்பாக மதுரை, கோயமுத்தூர் ஜில்லாக்களில் மணிலா பயிர் உற்பத்தியாகிறது. பயிர் செய்வதற்கு வேண்டிய விதையை, விவசாயிகள் விதைக்காலத்தில் வாங்கும்போது, சாதாரண காலத்தில் மூட்டை 10 ரூபாயிக்கு விற்கக்கூடியது, அப்போது ரூபாய் 20-க்கு விற்கப்படுகிறது. இதனுல் ஏழை விவசாயிகளுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுவதுடன், மணிலாபயிர் பயிரிட முடியாத நிலைமையும் ஏற்படுகிறது. ஆகையால் இந்த விவசாய இலாகாவானது, மணிலா விதையை முன்கூட்டியே கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விதைக்காலங்களில் கடன்கொடுத்து உதவ ஏற்பாடுசெய்யவேண்டும். மேலும் பருத்தி விதை, நெல், உரம் முதலியவை காலாகாலத்தில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். பட்டாதார்களுக்கும், நிலச்சொந்தக்காரர்களுக்கும் தான் கடன் கொடுக்கப் படவேண்டும் என்ற நிலைமையிருப்பதால், நேரடியாக விவசாயத்தில் ஈடு படக்கூடிய பெரும்பாலான விவசாயிகளுக்கும் குத்தகைதார்களுக்கும் கடன் கிடைப்பதில்லை. இதன் காரணமாக, விவசாயிகள் மிராசுதாரர்களில் நிர் பந்தத்திற்கு கட்டுப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மேலும், கடன் கிடைக்காத காரணத்தினுல் நல்ல உரம்போடுவது, நல்லவிதைபோடுவது, களை எடுப்பது இவைகள் செய்யமுடியாமல், உற்பத்தி மிகப்பெரிய அளவிற்கு பாதிக்கப்படுகிறது. இதை நிவர்த்திக்க, விவசாயத்தில் நேரிடையாக சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கோ, குத்தகைதாரருக்கோ அத்தாட்சி இருக்கு மேயானுல், **Joint Security**-யின்பேரில் அவர்களுக்குத் தக்காவி கடனும், **Agriculture Department**-ன் மூலமாக கொடுக்கக்கூடிய கடன்களும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

"அடுத்தபடியாக நில அடமான பாங்கு விஷயம். இந்த பாங்கு, உதா ரணமாக மதுரை ஜில்லாவில், திண்டுக்கல், பழனி இந்த இரண்டு தாலுகாக் களுக்கும் ஒரே ஒரு இடத்தில்தான் இருக்கிறது. இந்த பாங்குகளில் கடனுக்கு மனுப்போடுபவர்கள் ஏராளம். ஆகையால் விவசாயிகளுக்கு இந்த பாங்கு கடன்களில் நம்பிக்கையே கிடையாது. இந்த பாங்குகளில் கடனுக்கு மனுப் போட்டால் இரண்டு, இரண்டரை வருஷங்கள் ஆனபோதிலும் கடன் கிடைப்பதில்லை. அப்படி ஏதாவது கடன் கிடைத்தாலும், இந்த பாங்கை கைப்பற்றி வைத்திருப்பவர்களுக்கு வேண்டுகிற முறையில் கடன் கொடுத்துக் கொள்ளுகிருர்கள்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"**Land Mortgage** விஷயம் இந்த **Demand**-ன் கீழ் வராது. ஆகவே அதைப்பற்றி பேசுவது பொருத்தமாக இருக்காது."

SRI V. MADANAGOPAL :—"மேலும், விவசாயிகள் கடன் சம்பந்தமாக சமீபத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சட்டம், விவசாயிகளுக்கு கடன் கிடைக்காத நிலைமையை உண்டு பண்ணியிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் உத்தேசித்து, சர்க்கார் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒன்றி ரண்டு **Credit Bank**-கள் ஏற்படுத்துவது போன்ற யோசனைகளை செய்து, உடனடியாக 10 கோடி ரூபாய் இவைகளில் **Deposit** பண்ணும்படியான ஏற்பாட்டை செய்து, விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைக்க ஏற் பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளு கிறேன்."

11-45 a.m. SRI V. C. PALANISAMI GOUNDER :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த மானியத்தை ஆதரித்து பேசும் முறை யில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது 6 கோடி ரூபாயுக்கு மேலாக இருக்கிறது. ஆனபோதிலும், அதைப்பிரித்துப் பிரித்து பார்க்கும்போது, கிராம விவ சாயிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது என்றுதான் நான்

19th March 1955] [Sri V. C. Palanisami Gounder]

சொல்லவேண்டியிருக்கிறது. சுமார் 90 லட்ச ரூபாய் **Land Improvement** க்கும், மற்ற இதர விஷயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக இந்த ரசாயன உரம் கொடுப்பதற்காக சுமார் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக பம்பு செட்டுகளுக்காக சுமார் 2½ லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் பார்க்கும்போது, ஒரு வருஷத்தில் கொடுத்துவாங்கும்படியான கடன், **Short-term Loan**, எவ்வளவு அனுகூலமாக இருந்தாலும்கூட, விவசாயிகளுக்கு **Long-term Loan** தான் மிகமிக அவசியம். இந்தமுறையில், 6 கோடி ரூபாயில் 90 லட்ச ரூபாய் நில அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது போதாது. அடுத்த படியாக இந்த தக்காவி கடனை, சர்க்காரிடத்திலிருந்து வாங்கும்படியான முறையை எடுத்துக்கொண்டால், அது மிகக் கடினமாக இருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்னமே, பிரிட்டிஷ் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்கள் மூலமாகத்தான் இன்னும் தக்காவி கடன் கொடுக்கப்படுகிறது. தக்காவி கடன்கூட அப்போது ஏற்பட்டவிஷயம்தான். இப்போது ஜனநாயக அடிப்படையில் சர்க்கார் நடக்கிறது. **Adult Franchise** மூலமாக சர்க்கார் நடக்கிறது. அப்படி இருக்கும் சமயத்தில் இந்த பழைய முறையால் பெரு வாரியான விவசாயிகள் தக்காவி கடனை வாங்குவது என்றால் மிகமிக பிரம்ம பிரயத்தனமாக இருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகையினால், இந்த சட்டதிட்டங்களை எல்லாம் மாற்றி, எளிதாக சிறியகாலத்திற்குள்ளாக, இந்த **Loan**ஐ விவசாயிகள் நல்லமுறையில் வாங்க புதிய சட்டங்கள் அமைக்கவேண்டும்.

" இந்தத் தக்காவி **Loan** கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சாதாரணமாக, கிராமங்களில் ஒருபழமொழி சொல்வதுண்டு. அதாவது, 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுப்பதில்லை'. அரசாங்கம் நல்லமுறையில், நல்லமனப்பான்மையுடன் ஜில்லாக்களுக்கு பணங்களை ஒதுக்கிவைத்திருந்தாலும், அதிகாரிகளின் மூலமாக விவசாயிகள் கடனை வாங்குவதற்குள் பல தடைகள் ஏற்பட்டு விடுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு சிறிய விவசாயியாகவும், படிப்பில்லாத விவசாயியாகவும் இருக்கிறானோ, அவ்வளவுக்கு அவனுக்கு கஷ்டங்கள் அதிகம். செல்வாக்குள்ள விவசாயிக்கும், படித்த விவசாயிக்கும் சீக்கிரம் கடன் கிடைத்துவிடுகிறது. ஆனால் படிப்பில்லாத விவசாயிக்கு இந்த **Loan** கிடைக்கிறதேயில்லை. ஆகவே, இந்த முறையை நல்ல முறையில் அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" இந்த **Loan**-களை விவசாயிகளுக்கு வாங்கிகொடுப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பவர் கிராம அதிகாரிகள்தான். நல்லமுறையில் இந்த **Loan**-களை விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுக்கக்கூடிய மனப்பான்மை இவர்களிடம் வளரவேண்டும். இப்போது எங்கே பார்த்தாலும், கிராம அதிகாரிகளுக்கு சம்பளம், ஊதியம் குறைவாக இருக்கிறது என்ற மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் எப்போது நிவர்த்திக்க போகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. நாள் ஆனாலும் நிவர்த்தி செய்துதான் ஆகவேண்டும். கிராம அதிகாரிகள் எவ்வளவுக்கெவ்வளவு திருப்தியாக இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் சர்க்கார் நிர்வாகத்திலும் உதவிசெய்வார்கள். மேற்சொன்ன **Loan**-ஐ வாங்க வேண்டுமென்றால், கர்ணிகர் ஒத்தாசையில்லாமல் வாங்கமுடியாது. அவர்கள் எவ்வளவு அனுகூலமாக இருக்கிறார்கள் அல்லது பிரதிகூலமாக இருக்கிறார்கள் என்பது அந்த கடனை வாங்குவதில் ஈடுபட்டுவருபவர்களுக்குத்தான் தெரியும். இப்போது எல்லா காரியங்களுக்கும், சாதாரண உத்தியோகஸ்தரிலிருந்து, பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள்வரையிலும், கிராம அதிகாரிகளுடைய ஒத்தாசையைத் தான் விரும்புகிறார்கள். இந்தமுறையில் இந்தத் தக்காவி கடனை வாங்கிக் கொடுக்கும்படியான காரியத்தில், சர்க்காருக்கும், விவசாயிக்கும் உதவி செய்யவேண்டிய நல்ல ஒரு **Agent** ஆக இருக்க வேண்டிய அதிகாரி யார் என்றால், கிராம அதிகாரிதான். ஆகவே, தங்கள் தங்கள் கிராமங்களில் நல்லமுறையில் விவசாயிகளுக்கு இந்த **Loan**-ஐ வாங்கிக்கொடுக்க, இந்த கிராம அதிகாரிகளுக்கு உற்சாகம் ஊட்டும்முறையில் ஏதாவது ஒருநன் கொடை அல்லது அலவுன்ஸ் அவர்களுக்குக் கொடுத்தால் நல்லதாக இருக்குமென்று நான் சொல்லவிரும்புகிறேன்."

SRI M. KALYANASUNDARAM :—" இப்பவே 100-க்கு 25 ரூபாய் பேரம் நடக்கிறது."

11-50 a.m SRI V. C. PALANISAMI GOUNDER :—" கிராம அதிகாரிகளில் பலர் பட்டா இல்லாத ஏழைகளாக இருக்கின்றார்கள். இப்பொழுது நிலச் சீர்திருத்தம் செய்யப் போகிறோம். தரிசு நிலங்களை எல்லாம் எடுத்து பட்டா செய்யக்கூடிய நிலையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். பட்டா இல்லாத ஏழை கிராம அதிகாரிகளுக்கும் தரிசு நிலங்களை கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். அப்படிக் கொடுத்தால் அவர்களுக்கு ஒருவிதமான சௌக்யம் ஏற்பட்டுவிடும். அவர்களுக்கு தங்களுடைய வறுமையையும் தீர்த்துக்கொள்வதற்கு வழி ஏற்படும். இவர்களுடைய வறுமையெல்லாம் விவசாயிகளுக்குத்தான் போகிறது. அதனால் கிராம அதிகாரிகளையும் நாம் நல்ல நிலைமையில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. விவசாயிகளை நல்ல நிலைமையில் வைக்கவேண்டும் என்றால் கிராம அதிகாரிகளை நாம் உத்சாகப்படுத்தவேண்டும்.

" கிராம அதிகாரிகள் சங்கங்கள் அமைத்துக் கொண்டால் அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். சங்கங்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லக்கூடாது. கிராம அதிகாரிகள் பூரா நேர உத்யோகஸ்தர்கள் அல்ல, ஆனரரி உத்யோகஸ்தர்கள் என்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவம் தான். பூரா நேர உத்யோகஸ்தர் என்றால் அவர்களுக்கு பூரா சம்பளமும் நாம் கொடுக்கவேண்டும். அவர்கள் பார்ட்-டைம் உத்யோகஸ்தர்களாக இருப்பதால் அவர்கள் வேறு வழிகளில் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். அதை நாம் அனுமதிக்கிறோம். அவர்கள் வறுமையில் இருப்பதால் அவர்கள் வேறு வழிகளில் சம்பாதிப்பதற்கும் லஞ்சம் வாங்குவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதுதான் அவர்கள் லஞ்சம் வாங்குவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகையினால் கிராம விவசாயிகள் முன்னேற்றமடையவேண்டுமென்றால் கிராம அதிகாரிகள் முன்னேற்றமடையவேண்டும். அவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டும். இது ஒரு அடிப்படியான கொள்கை என்று நான் எடுத்துக் காட்ட வேண்டியதாக இருக்கிறது.

" அடுத்தபடியாக மின்சாரம். மின்சார அபிவிருத்தி திட்டம் நாடெங்கும் பரவுவதற்கு திட்டம் போட்டு வருகிறார்கள். சென்ற வருஷங்களில் 25,000 பம்பு செட்டுகள் வாங்கிக் கொடுத்திருப்பதாகவும் கனம் நிதி மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வருஷத்தில் 6,000 பம்பு செட்டுகள் வாங்கிக் கொடுக்கப் போவதாக கனம் மராமத்திலாகா மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பம்பு செட்டு என்றால் சாதாரணமாக ஒரு மோட்டார் பம்பு, குழாய், புட் வால்வு, முதலியவைகள் உண்டு. இதற்கு சுமார் ஆயிரம் ரூபாயாகும். அப்படி விலை என்றால் இந்த 6,000 பம்பு செட்டுகளுக்கும் எவ்வளவு தொகை தேவையாக இருக்கும் என்பதை யோசிக்கவேண்டும். அதனால் இப்பொழுது அதற்கென்று ஒதுக்கி இருக்கும் தொகைபோதுமா என்பதைப் பார்க்கவேண்டும். இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதாது.

" பம்பு செட்டுகள் வேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டுமென்றால் அந்த விண்ணப்பத் தாள்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் விவசாயிகள் அதைப் புரிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த விண்ணப்பங்களையெல்லாம் அந்தந்த பிரதேச மொழியில் அச்சடித்துக் கொடுத்தால் விவசாயிகளுக்குச் சௌகர்யமாக இருக்கும். அந்த முறையில் பம்பு செட்டுகள் விஷயத்தில் விவசாயிகளுக்கு வெகு சீக்கிரத்தில் கடன் கொடுத்தால் தான் நன்மையாக இருக்கும். கடன் கொடுக்கும் விஷயத்தில் கொஞ்சம் தாராளமாக இருக்கவேண்டும்.

19th March 1955] [Sri V. C. Palanisami Gounder]

" மின்சார இலாகா மின்சாரம் கொடுக்கிறார்கள். மின்சாரம் கொடுங்கள் என்று கேட்டால் பம்பு செட்டு வாங்கி வாருங்கள், மின்சாரம் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். பம்பு செட்டு வாங்கவேண்டும் கடன் கொடுங்கள் என்று கேட்டால் மின்சாரம் கொடுக்கிறார்களா என்று முதலில் கேட்டு வாருங்கள் பிறகு பம்பு செட்டு வாங்க கடன் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இதில் இப்படிப்பட்ட இரண்டுவித சங்கடங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. அதனால் காலா காலத்தில் பம்பு செட்டுகளை வாங்குவதற்கு கடன் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" ஆயில் எஞ்சின் வாங்குவதற்கும் மின்சார செட்டு வாங்குவதற்கும் கடன் கொடுக்கிறார்கள். அவைகளை வாங்கி விவசாயிகள் விவசாயம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இதில் கொஞ்சம் கஷ்டமான நிலைமை ஏற்படுகிறது. ஆயில் எஞ்சின் கொடுத்தால் அவைகளை அதிகாரிகள் போய் தணிக்கை செய்துவருகிறார்கள். டிமான்ஸ்ட்ரேட்டர்களும், மற்றுமுள்ள மேஸ்திரிகளும் தாங்கள் வாங்கிக் கொடுத்த இஞ்சின்களை மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தவணையோ அங்கு சென்று பார்த்துவருகிறார்கள். அப்பொழுது ஏதாகிலும் கெடுதல் ஏற்பட்டிருந்தால் அவைகளை சீர்செய்துவருகிறார்கள். ஆனால் மின்சார மோட்டார்களை வாங்கிக் கொடுத்தால் அப்படிச் செய்வது இல்லை. மின்சார மோட்டார்களை கடன் உதவியில் வாங்கினால் அப்படிப்பட்ட உதவி சர்க்காரிடமிருந்து கிடைப்பது இல்லை. மின்சார மோட்டார்களில் ஏதாகிலும் கோளாறுகள் ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்துகொள்வதற்கான ஞானம் விவசாயிகளுக்குக் கிடையாது. இனிமேல் எங்கெல்லாம் விவசாயிகள் மின்சார மோட்டார்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் அதிகாரிகள் போய் உதவி செய்யவேண்டும். அதற்கு சர்க்கார் திட்டம்போட்டு மாதத்தில் ஒரு தடவை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது போய் நல்லமுறையில் இந்த மோட்டார்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள இன்ஸ்டலேஷன் சரியாக இருக்கிறதா வயரிங் சரியாக இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து வரும்படியான ஏற்பாடு செய்யவேண்டும்.

" ஆகையினால் இப்படிப்பட்ட விஷயங்களில் சரிவர கவனம் செலுத்தி விவசாயிகளுடைய நிலைமையை முன்னேற்றமடையச் செய்யவேண்டும். அத்துடன் விவசாயிகள் கடன் கேட்டால் அதை எவ்வளவு சீக்கிரத்தில் கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொடுக்க முன்வரவேண்டும். கிராம அதிகாரிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான திட்டத்தை அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri A. VELOO :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்யும் கொள்கையைப்பற்றி என் முன் பேசிய பல அங்கத்தினர்கள் பல விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். அவர்களை நான் ஆதரித்து விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் விஷயம் சம்பந்தமாக மற்றும் சில யோசனைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போது விவசாயிகள் கடன் வாங்க வேண்டுமென்றால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கடன் வேண்டும் என்று விண்ணப்பம் செய்துகொண்டால் கடன் காலாகாலத்தில் கிடைப்பதும் இல்லை. சாதாரணமான கடன் கேட்டு ஒரு வருஷத்திற்குப் பிறகுதான் பல இடங்களில் கிடைக்கிறது. விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்காக விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளைப் பார்த்தால் 'கடன் வேண்டாம்' என்றுகூட நினைக்கும்படியான நிலை ஏற்பட்டு விடுகிறது. விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்று பணம் ஒதுக்கியிருப்பது போதாது. இன்னும் அதிகப்படியாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்குக் கடன் சுலபமாகக் கிடைக்கும் முறையில் சட்ட திட்டங்களையும் விதிகளையும் தளர்த்திக் கொடுக்க வேண்டும். விவசாயிகள் அந்தக் கடனை வாங்கிப் பயனடையும்படியான நிலைமையில் காலாகாலத்தில் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். தகுந்த முறையில் விதிகளைத் தளர்த்தி விவசாயி

களுக்குக் கடன் கிடைக்கும்படி செய்தால் அவர்களுக்கும் அது நலமாக இருக்கும். இதைப்பற்றி எனக்கு முன் பேசிய இரண்டு அங்கத்தினர்கள் விவரமாக எடுத்துக் கூறினார்கள். விவசாயிகளுக்கு உரம் வாங்குவதற்கும், மற்ற விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும் கடன் கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நீண்ட கால தவணைகளில் அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படியான ஏற்பாட்டை சர்க்கார் செய்ய வேண்டும். இப்பொழுது ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகையை அதிகப்படுத்துவதோடு தாராளமாகக் கடன் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"குடிசைத் தொழிலுக்காக ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு **(State Aided Industries Act)** ஸ்டேட்ஸ் எய்டட் இண்டஸ்ட்ரிஸ் ஆக்ட் பிரகாரம் அவர்களுக்குக் கடன் உதவி செய்து கொடுத்தால் நன்மையாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். இதை கனம் மந்திரி அவர்கள் கவனத்தில் வைத்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஜில்லா போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் சர்க்கார் தாராளமாகக் கடன் கொடுத்து உதவினால்தான், சமூகத்திற்கு மிக அவசியமான குடி தண்ணீர் வசதி, சாக்கடை திட்டம் ரோடு போடுவது போக்கு வரத்து வசதி, வைத்திய உதவி, ஆரம்பக் கல்வியைப் பரப்புதல் போன்ற முக்கிய காரியங்களைச் செய்ய முடியும். தற்போது சர்க்கார் ஒதுக்கியுள்ள தொகை போதாது. ஆகையால் இதை அதிகப்படுத்தி அவர்களுக்கு நீண்ட கால தவணையில் கடன் கொடுத்து உதவினால் நகரங்கள் விருத்தியடைவதற்கு வசதியாக இருக்கும். அப்படி அவர்களுக்கு வசதி செய்து கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் வசதிகளைப் பெறுகிறோமே யென்று வரி கொடுப்பதற்கும் முன் வருவார்கள். அதனால் அவர்களுக்கு நீண்டகால தவணையில் கடன் கொடுக்க முன் வரவேண்டும்.

12 noon. "அடுத்தபடியாக **(Rural Housing Scheme)** கிராமத்தில் வீடுகள் கட்டும் திட்டம் சம்பந்தமாக சில வார்த்தைகள். இந்த திட்டத்தை வெற்றிகரமாக நடத்தினால் கிராமப் புறங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற தீ விபத்துகளான அபயாங்களைத் தடுக்க முடியும். ஆகவே, இத்திட்டப்படி கிராமங்களில் தீப்பிடிக்காத பொருள்களைக் கொண்டு கட்டப்படும் நல்ல வீடுகளைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு ஜில்லாவுக்கு வருஷம் ஒன்றுக்குக் குறைந்தது 100 வீடுகளாவது கட்டுவது என்று ஒரு திட்டம் வைத்துக் கொண்டு வீடுகள் கட்டினால் இத்திட்டப்படி பயன் கிடைக்கும் என்றெண்ணுகிறேன். அடுத்தபடியாக **Loan to Minor Ports** என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி. இந்நிதியிலிருந்து, தஞ்சை ஜில்லா தரங்கம்பாடி கடலோரப் பகுதியில் ஒரு **(Sea wall)** சுவர் எழுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன். தரங்கம்பாடி கடற்கரை ஓரத்திலுள்ள சரித்திர புகழ்பெற்ற மாசிலாமணிக் கோவிலும், ஏராளமான வீடுகளும் கடல் அரிப்பினால் அபாயத்திலிருக்கின்றன. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டே வருகிறது. சில வருஷங்களுக்கு முன்பு, **Marine Engineer** ஒருவர் பார்வையிட்டு, 3 (மூன்று) லட்சம் ரூபாய் செலவாகும் என்று ஒரு திட்டம் கலெக்டரால் தயாரித்து அனுப்பப்பட்டது. அத்திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்தி தரங்கம்பாடிக்குச் சமீபத்தில் சுவர் **(Sea wall)** எழுப்ப ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI V. K. RAMASWAMI MUDALIAR :—" Mr. Deputy Speaker, Sir, I support the demand made by the Hon. the Finance Minister. Hon. Members have been discussing about the experiences of the ryots in villages in getting these loans. I entirely agree with the view expressed by the hon. Members. In my opinion, all these loans should be disbursed to the ryots as early as possible and without any difficulty being caused to them. Of course, *mamools* are there. There have been lots of complaints in

19th March 1955] [Sri V. K. Ramaswami Mudaliar]

my district also about the disbursements of loans. Several complaints were given to the Collector of the district who has of course taken some action against some of the departmental officers. Now it is not as bad as it was before so far as our district is concerned.

" Now, Sir, there are two kinds of loans which are granted to the ryots, the takkavi loan and the loan for hire purchase, of pumpsets. I do not know why Government have stopped the grant of takkavi loans recently. As a result of this middle and upper-middle class ryots who have been resorting to intensive cultivation are put to very great difficulties. I know in many cases in my district upper-middle class ryots who wanted to go in for the purchase of tractors and other things have been denied the privilege of getting takkavi loans and as a result they are now applying for loans under the hire-purchase system. The grant of takkavi loans should be restored and all the deserving ryots should be given as much loan as possible.

" There are also some difficulties in regard to the hire purchase system. Government want additional sureties from some other ryot also. When a ryot's solvency has been certified by a Tahsildar and the Collector it is not right to ask him to bring in some more additional sureties. Many of them are unwilling to furnish additional sureties. This must go. Further our Government are demanding that one-fifth of the value of the engine should also be deposited. This should also go. In the Andhra State, I am told very reliably, the Government there are not asking for this deposit. Also, they have raised the period of repayment of the loan to ten years. That is the position in respect of this matter in the Andhra State. We must also adopt that procedure here.

" Another matter to which I like to make a reference is in respect of electricity schemes. The Government are demanding deposits and also minimum charges. It is not possible for the ryots to comply with this demand in many cases. Therefore Government should come forward to relax the rules in respect of this matter as much as possible. If that is done many of the ryots will go in for more pumpsets. The Government of India we were informed has offered about one crore of rupees for the purchase of pumpsets and other things for our State. It is not known why our State Government have not availed themselves of this opportunity. At least this year, I am sure, our Government would put forth a strong case and get the aid from the Central Government and distribute it as loans to our ryots on a very liberal basis.

" Then again, there is the question of interest. Our Government, as the position stands at present, are charging $4\frac{1}{2}$ per cent interest plus a centage of 3 per cent. Altogether it works out to $7\frac{1}{2}$ per cent interest on the loans now sanctioned by our Government. This is really too much. In my opinion our Government should not charge more than half a per cent over the rate charged by the Reserve Bank of India for the loans granted by them. That

should be the policy of our Government. In Spain and other agricultural countries, I am told that the rates of interest are not more than 1½ or 2 per cent. If we cannot afford to grant loans on such low rates of interest, we can charge only half a per cent over the rate charged by the Reserve Bank, but not charge 7½ per cent. This rate of 7½ per cent is rather an usurious rate of interest and the ryots are therefore put to much hardship. Co-operative societies must be started in almost all the villages. They should also liberalise the terms for the grant of these loans. In addition to this if the co-operative societies come forward to help the ryots it will be a great boon to the ryots. With regard to the short term loans for the purchase of bullocks, manure and other things there is very great difficulty experienced by ryots. I am sure in respect of this matter also, Government would liberalise the rules for the grant of these loans and pass orders to sanction the loans within three or four days. Otherwise the object for which the loans are obtained is frustrated. These are the few suggestions I offer in respect of this demand. With these few words I resume my seat.''

12-0 p.m. **Sri O. KORAN**:—" മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, നമ്മുടെ രാജ്യത്തിലെ കൃഷിക്കാർക്കു സാമ്പത്തികസഹായം നൽകി നല്ലതരം വിത്ത്, വളം, കന്ന് മുതലായവ ഉപയോഗിച്ച് കൃഷി അഭിവൃദ്ധിപ്പെടുത്താനും പരിഷ്കരിക്കാനും വേണ്ടിയുള്ള ഒരു ഡിമാൻറാണ് ഇപ്പോൾ ചർച്ചക്കു വന്നിരിക്കുന്നത്. കൃഷിക്കാരെ സംബന്ധിച്ച് പറയുമ്പോൾ ആദ്യമായി പറയേണ്ടത് അവരുടെ കടത്തെപ്പററിയാണ്. നമ്മുടെ നാട്ടിലെ കൃഷിക്കാരെല്ലാം കടക്കാരാണെന്ന് ഗവർമ്മേണ്ടിനു നല്ലപോലെ അറിയാം. കൃഷിക്കാരുടെ ഇന്നത്തെ കൊള്ളക്കൊടുക്ക സ്തംഭിച്ചിരിക്കയാണ്. കടങ്ങളെ സംബന്ധിച്ച് പുതുതായി കൊണ്ടുവന്നിട്ടുള്ള നിയമത്തിൻെറ ഫലമായി ഗ്രാമങ്ങളിലെ കൊള്ളക്കൊടുക്ക മുഴുവൻ സ്തംഭിച്ചിരിക്കുന്നതു നിമിത്തം ഗവർമ്മേണ്ടിൽനിന്നു ധനസഹായം കിട്ടിയാലല്ലാതെ കൃഷിക്കാർക്കു കൃഷിചെയ്യാൻ നിവൃത്തിയില്ലെന്ന ഒരു നില വന്നിട്ടുണ്ട്. അതു മനസ്സിലാക്കിയതിൻെറ ഫലമായിട്ടാണ് തക്കാവി കടങ്ങളും മററും കൊടുത്ത് കൃഷിക്കാരെ സഹായിക്കാൻ ഗവർമ്മേണ്ട് മുന്നോട്ടു വന്നിട്ടുള്ളത്. കൃഷിക്കാർക്കു കടം കൊടുക്കുക, പമ്പുസെററുകൾ വാങ്ങിക്കൊടുക്കുക മുതലായ പല ഇനങ്ങൾക്കുമായി ഈ ഡിമാൻറിൽ നീക്കിവച്ചിരിക്കുന്നത് ആറു കോടിയിൽ ചില്വാനം ഉറുപ്പികയാണ്. ഈ തുക കൊണ്ടുമാത്രം ഈ രാജ്യത്തിലെ കൃഷിക്കാർക്ക് വേണ്ടുവോളം സഹായം നൽകുന്നതിനു സാദ്ധ്യമല്ലെന്നുള്ള വസ്തുത ആദ്യമേ ചൂണ്ടിക്കാണിച്ചു കൊള്ളട്ടെ. കൃഷിയിറക്കുന്ന സമയത്താണ് കൃഷിക്കാർക്ക് കടം ആവശ്യമുള്ളതു. തക്കാവി കടങ്ങൾക്ക് അപേക്ഷ അയച്ചാൽ കൃഷിക്കാർക്ക് ആവശ്യത്തിനുതകുന്ന വിധത്തിൽ അനുവദിച്ചു കിട്ടുന്നില്ല. ആവശ്യം കഴിഞ്ഞു എത്രയോ കാലം കാത്തിരുന്നാലേ കടം അനുവദിച്ചു കിട്ടുകയുള്ളു എന്ന ഒരു നിലയാണ് ഇന്ന് അനുഭവത്തിൽ കാണുന്നത്. അതുകൊണ്ട് തക്കാവി കടങ്ങൾകൊണ്ട് ഉദ്ദേശിച്ചിട്ടുള്ള ഫലം ഉണ്ടാകുന്നില്ല. കടങ്ങൾ തക്ക സമയത്ത് കൊടുക്കുവാനും ആവശ്യത്തിനു മതിയായ അളവിൽ വർദ്ധിപ്പിക്കുവാനും ഗവർമ്മേണ്ട് ശ്രമിക്കുമെന്ന് ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. ഇന്നു കടം അനുവദിച്ചു കിട്ടാനും അനുവദിച്ചു കിട്ടിയാൽ സംഖ്യ വാങ്ങുന്നതിനും പലവിധത്തിലുള്ള ആളുകളുടെ സഹായം ആവശ്യമായി വരുന്നു. കടം അനുവദിക്കുന്നതിനു അധികാരിയുടെ സർട്ടിഫിക്കെററു വേണ്ടിയിരിക്കുന്നു. കടം അനുവദിച്ചു കിട്ടിയാൽ കൃഷി ഡെമോൺസ്ട്രേറററാഫീസിൽ പോയി വളം വാങ്ങിയാൽ മാത്രമേ പണം കൊടുക്കുകയുള്ളുവെന്ന് നിർബ്ബന്ധം വച്ചിട്ടുണ്ട്. അതുകൊണ്ട് കൃഷിക്കാർക്കു വളരെ ബുദ്ധിമുട്ടുണ്ടാകുന്നുണ്ട്. വളം ആവശ്യമില്ലാത്ത ആളുകളുണ്ട്. സ്വന്തമായി പച്ചില വളമൊ മററു വളങ്ങളൊ കൈവശമുള്ളവരെ കൃഷി ഡിപ്പാർട്ടുമെണ്ടിൽനിന്നും വളം വാങ്ങണമെന്നു നിർബ്ബന്ധിക്കുന്നതുകൊണ്ട് ബുദ്ധിമുട്ടുകളുണ്ടാവുന്നുണ്ട്. വളം ആവശ്യമില്ലാത്തവർക്കു വളം കൊടുക്കേണ്ട ആവശ്യമില്ല. അവരെക്കൊണ്ടു നിർബ്ബന്ധിച്ചു വളം എടുപ്പിക്കുന്നതു തെററാണ്. ഇന്നു നമ്മുടെ നാട്ടിലെ കൃഷിക്കാർ ഏററവും അപരിഷ്കൃതമായ രീതിയിലാണ് കൃഷി നടത്തിക്കൊണ്ടിരിക്കുന്നത്. പരിഷ്കൃതരീതിയിലുള്ള കൃഷിയു

പകരണങ്ങൾ അവക്കില്ല. നല്ല കന്നുകാലികളില്ല. ഇന്നു കൃഷിക്കാൎക്കു് കിട്ടുന്ന കടം കൃഷിച്ചെലവുകൾ നിൎവ്വഹിക്കാൻ തന്നെ മതിയാകാത്ത തരത്തിലുള്ളതാണു്. തന്നിമത്തം നല്ല കന്നുകളൊ കൃഷിയായുധങ്ങളൊ വാങ്ങി ഉപയോഗിക്കാൻ ഗവൎമ്മേണ്ടിൽനിന്നു കിട്ടുന്ന സഹായം പൎയ്യാപ്തമല്ല. അതുകൊണ്ടു തക്കാവി കടങ്ങൾക്കു കൂടുതൽ സംഖ്യ നീക്കിവെക്കണമെന്നു് ഞാൻ അഭ്യൎത്ഥിച്ചുകൊള്ളുന്നു. മലബാറിനെ സംബന്ധിച്ചിടത്തോളം പറയുകയാണെങ്കിൽ വളരെ കുറച്ചു കൃഷിക്കാൎക്കേ തക്കാവി കടങ്ങൾ കിട്ടിയിട്ടുള്ളു.

"പമ്പുസെററുകൾ ഇന്നു കൃഷി ആഫീസിൽ ചെന്നു വാങ്ങേണ്ടിയിരിക്കുന്നു. അതുകൊണ്ടു് കൃഷിക്കാൎക്കു് അവ പ്രയോജനപ്പെടുന്നില്ല. എല്ലാ താലൂക്കുകളിലും താലൂക്കാഫീസിൽ ഈ പമ്പുസെററുകൾ സൂക്ഷിക്കേണ്ടതാണെന്നു കൃഷി ഉപദേശകക്കമ്മിററിയുടെ യോഗം ആവശ്യപ്പെട്ടിട്ടുണ്ടായിരുന്നു. ഇന്നു പമ്പുസെററുകൾ കിട്ടാൻതന്നെ പ്രയാസം. പമ്പുസെററുകൾ അനുവദിച്ചു കിട്ടുവാൻ കാലതാമസം നേരിടുന്നതുകൊണ്ടു കൃഷിയെല്ലാം ഉണങ്ങി നശിക്കുന്നതു് സാധാരണയാണു്. അത്രക്കു കാലതാമസം ഉണ്ടാകുന്നുണ്ടു്. കൃഷിക്കാൎക്കു സൌകൎയ്യമായ വിധത്തിൽ ആവശ്യമുള്ള കാലത്തുതന്നെ പമ്പുസെററുകൾ കിട്ടണമെങ്കിൽ ഓരോ താലൂക്കാഫീസിലും പമ്പു സെററുകൾ ഉണ്ടായിരിക്കണം. വള്ളുവനാടു, ഏറനാടു, പാലക്കാടു മുതലായ താലൂക്കുകളിൽ സമയത്തു പമ്പുസെററുകൾ കിട്ടാത്തതുകൊണ്ടു് കൃഷി വളരെയധികം ഉണങ്ങി നശിച്ചുപോയിട്ടുണ്ടു്. കൂടാതെ ഇത്തവണത്തെ ബഡ്ജററിൽ പമ്പുസെററുകൾക്കായി കൂടുതൽ സംഖ്യ നീക്കിവച്ചു കാണുന്നില്ല. ഈ ഇനത്തിൽ കൂടുതൽ സംഖ്യ നീക്കിവയ്ക്കുകയും കൃഷിക്കാൎക്കു ചുരുങ്ങിയ ചെലവിൽ പമ്പുസെററുകൾ കിട്ടാൻ ഏൎപ്പാടു ചെയ്യുകയും ചെയ്യേണ്ടതു അത്യാവശ്യമാണു്. ഷൊറണൂരിൽനിന്നു കൃഷി ഡിപ്പാൎട്ടു്മെണ്ടു് ആഫീസ് ഇപ്പോൾ കോഴിക്കോട്ടേക്കു് മാററിയിരിക്കുകയാണു്. അതും കൂടുതൽ ബുദ്ധിമുട്ടിനു കാരണമാണു്. എല്ലാ കാൎയ്യത്തിനും കോഴിക്കോടുവരെ പോകണമെന്നു വന്നാൽ കൃഷിക്കാൎക്കു അതൊന്നും സാധിക്കാൻ പോകുന്നില്ലെന്നു ചുരുക്കം. കൃഷിക്കാൎക്കു നൽകുന്ന സഹായങ്ങൾ അവരെ ബുദ്ധിമുട്ടിക്കാതെയും സൌകൎയ്യമായ വിധത്തിലും നൽകുന്ന കാൎയ്യത്തിൽ ഗവൎമ്മേണ്ടു് കൂടുതൽ ശ്രദ്ധവയ്ക്കേണ്ടിയിരിക്കുന്നു.

"തക്കാവി കടങ്ങൾ അനുവദിക്കുന്നതിനുള്ള നിബന്ധനകളിൽ കുറെ അയവു വരുത്തേണ്ടതായിട്ടുണ്ടു. കൂടുതൽ സംഖ്യ അനുവദിക്കുക, കാലതാമസം വരുത്താതെ സമയത്തു കൊടുപ്പാൻ ഏൎപ്പാടുചെയ്യുക, ഇതെല്ലാം ചെയ്യേണ്ടിയിരിക്കുന്നു. കടം കൊടുക്കുന്നതിൽ നടന്നുകൊണ്ടിരിക്കുന്ന അഴിമതികളും കൃത്രിമങ്ങളും അവസാനിപ്പിക്കുകയെന്നുള്ളതും വളരെ മുഖ്യമായ ഒരു സംഗതിയാണു്. തക്കാവി കടങ്ങൾ കൊടുക്കുന്ന കാൎയ്യത്തിൽ നടക്കുന്ന അഴിമതികളെപ്പററി കൃഷി ഡിപ്പാൎട്ടുമെണ്ടിനു വേണ്ടിയുള്ള ഡിമാൻഡു ചൎച്ചക്കു വന്നപ്പോൾ ഞാൻ സൂചിപ്പിച്ചിട്ടുണ്ടു. വളരെ ബുദ്ധിമുട്ടി നൂറോ നൂററമ്പതോ ഉറുപ്പിക കടം അനുവദിച്ചു കിട്ടിക്കഴിഞ്ഞാൽ പിന്നെ ആ സംഖ്യ വാങ്ങാൻ ചെല്ലുമ്പോൾ ചിലൎക്കെല്ലാം കൈക്കൂലി കൊടുക്കേണ്ടിവരുന്നുണ്ടു്. അതിനും ഒരു പരിഹാരമുണ്ടാകേണ്ടതു് വളരെ അത്യാവശ്യമാണു്. കിട്ടുന്ന കടം തുച്ഛമാണു്. അതിൽനിന്നും വളത്തിനും വിത്തിനുമെല്ലാം ചെലവുചെയ്തുകഴിഞ്ഞാൽ കൃഷിച്ചെലവിനു പോലും യാതൊന്നും ബാക്കിയുണ്ടാവുകയില്ല. പാററക്കാട്ടം നീക്കിയാൽ കൂട്ടാനില്ല എന്നുപറഞ്ഞമാതിരിയാണു് കൃഷിക്കാരനു കിട്ടുന്ന കടത്തിന്റെ പോക്കു്. ഭാൎയ്യയുടെ പണ്ടം പണയംവച്ചിട്ടും കൃഷിചെയ്യാൻ സാധിക്കാതെ വിഷമിക്കുന്ന കൃഷിക്കാരാണു് അധികവും. പ്രത്യേകിച്ചു ചെറിയ കൃഷിക്കാർ കൃഷിയിറക്കാൻ വളരെ ബുദ്ധിമുട്ടുന്നുണ്ടു്. അതുകൊണ്ടു ഗവൎമ്മേണ്ടിൽനിന്നു അനുവദിക്കുന്ന തുച്ഛമായ സംഖ്യയെങ്കിലും കൃഷിയിറക്കുന്ന സമയത്തു കൃഷിക്കാൎക്കു കൊടുപ്പാൻ പ്രത്യേകം ശ്രദ്ധവയ്ക്കേണ്ടിയിരിക്കുന്നു. പണക്കാൎക്കും സ്വാധീനമുള്ളവൎക്കും മാത്രമേ ഇന്നു കടം കിട്ടാനെളുപ്പമുള്ളു. എഴുതാനും വായിക്കാനും അറിഞ്ഞുകൂടാത്ത സാധാരണ കൃഷിക്കാരനു് ഈ കടങ്ങൾ വാങ്ങേണ്ടതെങ്ങനെയാണെന്നുള്ളതിനെ സംബന്ധിച്ചു ശരിയായ വിവരമില്ല. വേണ്ട വിധത്തിൽ ഹരജി അയയ്ക്കാനോ ഡിപ്പാൎട്ടു്മെണ്ടു ആഫീസുകളിൽ പോയി അന്വേഷിച്ചു കാൎയ്യം സാധിക്കാനോ അവൎക്കു കഴിവില്ല. കടം കിട്ടാനുള്ള നടപടികൾ ലഘൂകരിച്ചു എളുപ്പത്തിൽ സാധുക്കളായ കൃഷിക്കാൎക്കു കടം കിട്ടുന്നതിനുവേണ്ട ഏൎപ്പാടുകൾ ചെയ്യേണ്ടതും ആവശ്യമായിരിക്കുന്നു. കാൎയ്യശേഷിയും സ്വാധീനവും ശിപാൎശിയും ഉള്ളവൎക്കേ കടം കിട്ടു എന്ന നില മാറണം.

" നമ്മുടെ നാട്ടിൽ നെൽകൃഷിക്കൂടാതെ അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ സാധിക്കുന്ന മററു പല കൃഷികളുമുണ്ട്. കുരുമുളക്, വാഴ, റബ്ബർ മുതലായ കൃഷികൾക്കും ഗവമ്മേണ്ട ധനസഹായം ചെയ്യേണ്ടതാണ്. ഇത്രയും പറഞ്ഞുകൊണ്ടു സമയച്ചുരുക്കത്താൽ ഞാൻ എൻെറ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു. "

12-10 p.m. *SRI M. DHARMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்று சட்டசபையில் விவாதிக்கப்படும், கடன் மான்யத்தை நான் ஆதரித்து பேச முன்வந்திருக்கிறேன். எனக்கு முன்னால் சில அங்கத்தினர்கள் இந்த கடன் விஷயத்தைப்பற்றி விவரமாக எடுத்துச்சொல்லி யிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இந்தக் கடன் வசதி எவ்விதம் உபயோகப்படுகிறது. எப்படி உபயோகப்படவில்லை என்பதைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். குறிப்பாக நான் சொல்லுவது என்னவென்றால், அரசாங்கம் நல்லெண்ணத்துடன் இப்படிப்பட்ட திட்டங்களைக்கொண்டு வருகிறதானாலும், அந்த அரசாங்கத்தின் நல்லெண்ணத்தின்படி ஏழை விவசாயிகளுக்கு இந்தக் கடன் வசதி உபயோகப்படுவதில்லை என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். அரசாங்க அதிகாரிகள் கையாளும் முறையால், ஏழை விவசாயிகளுக்கு இந்தக் கடன் உபயோகப்படுவதில்லை. பட்டாதாரர்களாக இருப்பவர்களுக்குத் தான் கடன் கொடுக்க முடியுமென்று சொல்லுகிறார்கள். இந்த நிபந்தனையை அரசாங்க அதிகாரிகள் கையாளுகிறார்கள். ஒருவன் ஏழையாக இருக்கலாம். இருந்தாலும் தன் சொந்தக்காரரிடமிருந்து நிலம் வாங்கி பயிரிடுகிறான். அந்த நிலைமையில், பயிர் செய்ய கடன் அவனுக்கு தேவையாக இருக்கிறது. ஆனால் கடன் கேட்கும்போது, அவனுக்கு நிலம் சொந்தமில்லாததால், கடன் கொடுக்கப்படுவதில்லை. ஏழை விவசாயிகள் நன்மை அடையத்தான் இக்கடன் வசதிக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதென்று நம்புகிறேன். ஆகவே, ஒரு விவசாயிக்கு நிலம் சொந்தமாக இல்லாமற் போனாலும், அவன் பயிரிடுவோனாகில், விவசாயம் எந்த நிலத்தில் செய்தாலும், அவனுக்குக் கடன் வசதி செய்துகொடுக்க, அரசாங்கம் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" இரண்டாவதாக பம்பு செட் வாங்க கடன் கொடுப்பது. பம்பு செட்டுகளை விவசாயத்திற்கு உபயோகித்தால், நிலத்தில் பயிர் செய்து ஒருவன் முன்னேற முடியும். அதனால் அவர்களுக்கு பம்பு செட் வாங்க பணம் கடனாக அரசாங்கம் கொடுக்கிறது. அப்படி கடன் வாங்கி அநேகம் பேர் நெல் விளைச்சல் செய்திருக்கிறார்கள். தற்போது நெல் விலை குறைந்து விட்டது. அதன் காரணமாக, வாங்கின கடனை அரசாங்கத்திற்குக் திருப்பி கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். பம்பு செட்டுக்காக வாங்கின கடனை ஐந்து தவணையில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்பது நிபந்தனை. இந்த வருஷத்தில் அரசாங்கத்திற்கு கடனில் ஒரு பகுதி கொடுக்க வேண்டும். நெல் விலை குறைந்த காரணத்தால் அப்படி திருப்பிக் கொடுக்கும் நிலைமையில் இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே அவர்களிடம் வாஸ்தவத்திலேயே பரிதாபம் காட்டி அவர்களுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்யும் எண்ணமிருந்தால், ஐந்து வருஷ தவணை என்பதை பத்து வருஷத் தவணையில் அக்கடனை திருப்பிக் கொடுக்க உத்தரவுகள் போட வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறேன். இது விஷயத்தில் எனக்கு அனுபவமுண்டு. ஏழை விவசாயிகள் இம்மாதிரி கடன் வாங்கி நெல் பயிர் செய்ததில் கிடைக்கும் மகசூல் இப்போதிருக்கும் விலையில் பாதி செலவுக்குக் கூட கட்டாது. அப்படி இருக்கும்போது அரசாங்கம் கடனைக் கொடுக்கும்படி நிற்பந்தம் செய்தால் விவசாயி நிலத்தை விற்றுதான் கொடுக்கவேண்டி நேரிடும். ஆகையால்தான் ஐந்து வருஷத் தவணை என்பதை பத்து வருஷ தவணையாக மாற்றி, அவ்விவசாயிகளுக்கு ஆதரவு காட்டும்படி கேட்டுக்சொள்ளுகிறேன்.

" திருவள்ளூர் தாலூகாவில் அநேக கிராமங்கள் ஜமீன் கிராமங்களாக இருக்கின்றன. அந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு கடன் கொடுக்க முடியாதென்று சொல்லுகிறார்கள். காரணம் கேட்டால், அக்கிராமங்கள் **survey** ஆகாத கிராமங்கள், அதனால் கடன் கொடுக்க முடியாதென்று சொல்லுகிறார்கள். பக்கத்து ஜமீன் அல்லரத விவசாயிகள் கடன் வாங்கி

விவசாயம் செய்கிறார்கள். விவசாயிகளுக்கு கடன் கொடுத்து முன்னேறச் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆதலால், ஜமீன் கிராமங்களை சீக்கிரத்தில் survey செய்து அங்கிருக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கடன் வசதிகள் கிடைக்கும்படி செய்து, அவர்களை வாழவைக்க வேண்டுமென்று கனம் மந்திரியார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இது மட்டுமல்ல, Housing Scheme-ன் கீழ் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ள கடன் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. ஒரு வீடு கட்ட, ரூபாய் 750-லிருந்து ஆயிரம் வரையில் கொடுத்து, அந்தக் கடனை, 20 வருஷத் தவணையில் திருப்பி வாங்கவேண்டுமென்று அந்த Scheme-ல் கண்டிருக்கிறது. இந்தத் திட்டம் ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் உதவி செய்வதாக இருக்குமென்றே நினைக்கிறேன். ஆனால் அதில் subsidy யாக ஒன்றும் கொடுப்பதில்லை. ஆயிரம் ரூபாய் ஒரு ஹரிஜன குடும்பத்துக்குக் கொடுத்தால், அதிலே 50 சத விகிதம் subsidy, இனாமாகக் கொடுத்தால்தான் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ள நல்ல சலுகை அரசாங்கம் காட்டுவதாகத் தெரியும். ஆயிரம் ரூபாய் மொத்தம் கொடுத்து, அதில் 50-சத விகிதம் இனாமாக, subsidy ஆக பாவித்து, மற்ற ஐந்நூறு ரூபாயை 30 வருஷ தவணையில் வசூலித்தால், ஹரிஜன காலனிகளும், மற்றவர்கள் குடியிருக்கும் காலனிகள்போல் சீக்கிரத்தில் முன்னேறி விடும் என்பதில் சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட உதவிக்காக ஹரிஜனங்கள், மகாத்மா காந்தியை தெய்வமாகப் புகழ்வதுபோல், இந்த அரசாங்கத்தையும் தெய்வமாக கொண்டாட முன்வருவார்கள்.

"காட்டு ஓரம் பிரதேசங்களை ஹரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு இருக்கிறது. இதற்காக சர்க்காரை பாராட்டுகிறோம், சந்தோஷப்படுகிறோம். காடு என்று சொல்லும்போது மேடு பள்ளம் நிறைந்த இடம் என்பது தெரியும். அந்தக் காட்டுப் பிரதேசத்தில் பயிர் செய்ய வேண்டுமென்றால் முதலில் நிலத்தை சரிப்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் இந்த வேலைக்காக கடன் கொடுக்க முடியாதென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுக்க அரசாங்க உத்தரவு கிடையாதாம். பணம் இல்லாமல், அவ்வித மேடு பள்ளங்கள் உள்ள காடுகளில் விவசாயம் செய்ய முடியாது. இவ்விதமான நிலங்களில் விவசாயம் செய்ய tractors கொடுக்கப்பட வேண்டும். மேலும் அந்நிலத்தில் உழுது பயிர் செய்து லாபமடைய கடன் கொடுத்துத்தான் தீரவேண்டும். குமரி விவசாய பயிராக இருந்தாலும், காட்டுப் பிரதேசங்களில் ஹரிஜனங்கள் பயிர் செய்தாலும் அவர்கள், personal security யின்மேல் கடன்கொடுத்தால், அதைப்பற்றி, விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், சாமான்கள் வாங்கி, பயிர் செய்து லாபம் அடைவார்கள். ஆகையினாலே குமரி விவசாய பயிருக்கும் தக்க கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"குண்டவாகம், விவசாயிகளுக்கு கொடுத்துவருகிறார்கள். இதைக் கொடுப்பதற்கு solvency சர்டிபிகேட் வேண்டுமென்று அதிகாரிகள் கேட்கிறார்கள். இப்பணம் கிடைத்தால், விவசாயத்திற்கான, முக்கியமாக மாடுகள் வாங்க முடியும். இந்த solvency சர்டிபிகேட் பெறுவதில் ரொம்ப கஷ்டங்கள் இருக்கின்றன. இக்கஷ்டங்களைப்பற்றி அரசாங்கத்திற்கும் நன்றாக தெரிந்திருக்கும். முதலில் கிராம முன்சீப், இந்த சர்டிபிகேட் கொடுக்கும்படி சிபார்சு செய்து எழுதினால், அது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலமாகப் போய், தாசில்தாரிடம் சென்று, அந்த சர்டிபிகேட் கொடுக்கலாம் என்று வருவதற்குள் மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன. அப்படிப்பட்ட solvency சர்டிபிகேட் வேண்டுமென்ற நிபந்தனை வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். ஒரு விவசாயிக்கு சொத்து இருக்கிறது, அந்த சொத்து விஷயமாக யாதொரு வில்லங்கமும் இல்லை என்று தாசில்தாரிடமிருந்து சர்டிபிகேட் வேண்டியதில்லை. கிராம முன்சீப் ஒரு பொறுப்புள்ள உத்யோகஸ்தர். அவர் சர்டிபிகேட் கொடுத்தாலே போதுமானது. தாசில்தார் சர்டிபிகேட் கொடுத்த பிறகுதான் கடன் கொடுப்பது என்பது, கடன் கொடுப்பதை தள்ளிப்போட்டுக்கொண்டே போவதாகும். அதனால்

விவசாயிக்கு அவசியமானபோது கடன் கிடைக்காது. ஆகையால், கிராம முன்சீப் **solvency** சர்டிபிகேட் கொடுத்தவுடன் கடன் கொடுக்க ஏற்பாடாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடுமட்டுமல்ல. மின்சார வசதி தற்போது விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த மின்சார வசதி கொடுக்கும் விஷயமாக, பம்பு செட் வாங்கும் விவசாயிகளுக்கு தனிச் சலுகை காட்டவேண்டுமென்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மின்சாரம் முதலில் கிடைத்தால்தான், விவசாயிக்கு பம்பு செட் வாங்க, பணம் கடனாகக் கிடைக்கிறது. பல விவசாயிகள் இவ்விதமாக கடன் வாங்கி பம்பு செட்டுகள் வாங்கின பிறகு, மின்சாரம் அவர்களுக்குக் கொடுக்க உத்தரவாகாமல் இருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே அவர்களுக்கு மின்சார வசதி கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு சபைத் தலைவருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

12-20 p.m. * **Sri S. R. ARUMUGAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன, விவசாயிகள் கடன் வாங்கி விவசாயத்தை நடத்துவதற்கு எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் தெரிவித்துவிட்டார்கள். விவசாயிகள் தங்கள் பூமியில் உற்பத்தி செய்வதற்காக மாடுகள் வாங்குவதற்கோ, கிணறுகள் வெட்டுவதற்கோ கடன் வாங்குவதாயிருந்தால் 100-க்கு 25 பங்குதான் கடன் கிடைக்குமே தவிர வேறு வழியில்லை. கடன் கிடைப்பதற்கு காலதாமதம் ஆவதுடன் கடன் வாங்குவதற்காக அதிகமான பணம் செலவு செய்ய வேண்டி ஏற்படுகிறது. நான் ஒரு யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். கிராமங்களிலுள்ள கணக்குப்பிள்ளை, மணியக்காரர், அவர்களுக்கு மேலுள்ள ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆகியவர்களுக்கு ஊக்கம் இருந்தால் தான் அந்தக் கடனை சீக்கிரமாக சர்க்காரிடமிருந்து வாங்கி விவசாயிகளுக்குக் கொடுப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஒரு விவசாயிக்குக் கடன் வேண்டுமென்று மனுச் செய்துகொண்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கிராமக்கணக்குப்பிள்ளை, மணியக்காரர், ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆகியவர்கள் கடன் சம்பந்தமான ரிகார்டுகளையெல்லாம் உடனுக்குடன் பரிசீலனை செய்து மனுச் செய்துகொண்ட விவசாயிக்குக் கடன் வாங்கிக் கொடுத்துவிட்டால் மேற்கண்ட அதிகாரிகளுக்குக் கடன் தொகையில் 2½ சத விகிதம் கமிஷனைப்போல கொடுத்துவிட வகை செய்துவிட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். இம்மாதிரியான ஒரு ஏற்பாட்டைச் செய்தால் விவசாயிகளுக்குச் சர்க்கார் கடன் கிடைப்பதில் காலதாமதம் இருக்காது ; விவசாயிகள் அனாவசியமாகக் கஷ்டப்படவேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது. இதைக் கவனித்து 2½ சத விகிதம் கமிஷன் கொடுப்பதற்கு சர்க்கார் சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்தால் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

" விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன்கள் பலவகை. விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய எல்லாக் கடன்களும் இருக்கின்றன. உற்பத்தியின்பேரில் கடன் கொடுக்கப்படுகின்றன. அன்றாடம் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய கடனைத் திருப்பிக்கட்டுவதற்கு விவசாயிக்குப் போதுமான வசதியில்லை. கூட்டுறவு நில அடமான பாங்கு மூலமாக அந்த வசதி கிடைக்கிறது. கூட்டுறவு பாங்குகள் 1½ சத விகித வட்டிக்கு ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வாங்குகின்றன. விவசாயிகளுக்கு 6½ சத விகிதம் வட்டிக்கு கூட்டுறவு பாங்குகள் கடன் கொடுக்கின்றன. ஒன்றரை சத விகித வட்டிக்கு ரிசர்வ் பாங்கியிலிருந்து பணத்தை வாங்கி, விவசாயிகளுக்கு 6½ சத விகித வட்டிக்கு கடன் கொடுப்பதன் மூலம் கூட்டுறவு பாங்குகள் 5 சத விகித வட்டி அதிகமாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்கிறார்கள். ஐந்து சத விகித அதிக வட்டி விவசாயிகள் கொடுக்க வேண்டியிருப்பதைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் என்ன செய்யவேண்டுமென்றால் ரிசர்வ் பாங்கியினிடமிருந்து சர்க்காரே நேரடியாகப் பணத்தைப் பெற்று, விவசாயிகளுக்கு 1½ சத விகித வட்டிக்கு கடன் கிடைக்கச் செய்தால் விவசாயிகளுக்கு

அனுகூலமாக இருக்கும். விவசாயிகள் அனுவசியமாக வட்டி கொடுக்க வேண்டிய நிலைமையிலிருந்து மாறுதல் ஏற்படும். விவசாயிகளுக்குச் சர்க்காரே நேரடியாகக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம்.

"நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு எரு, விதை, மோட்டார் பம்பு செட்டுகள் போன்றவைகளை வாங்குவதற்கு சர்க்கார் விவசாயிகளுக்குப் பணம் கொடுத்து வருகிறார்கள். ஆனால், இம்மாதிரியான உபகரணங்களை வாங்குவதற்கு சர்க்கார் விவசாயிகளுக்குப் பணமாக கொடுப்பதற்குப் பதிலாக விதை, எரு போன்றவைகளை அவ்வப்போது கொடுத்து வந்தால் விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு பெரிய உதவியாக இருக்கும். விவசாய அபிவிருத்திக்காக கொடுக்கப்படும் பணம் நேரிடையாக எல்லாப் பணமும் விவசாய அபிவிருத்திக்கே செலவிடப்படாமல் தங்களுக்குத் தேவையான இதர செலவுகளுக்கும் செலவழித்து விடக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

"நம்முடைய ராஜ்யத்தில் ஒவ்வொரு தாலூகாவிலும் அநேகமாக இரண்டு அல்லது மூன்றுக்கு மேற்பட்ட விவசாய டெமான்ஸ்ட்ரேடர் காரியாலயங்கள் வைத்து விவசாயக் கருவிகளையும், உரம், விதைபோன்றவைகளையும் விவசாயிகளுக்கு கொடுத்து உதவிச் செய்தால் அவர்களுக்கு அனுகூலமாக இருப்பதுடன் காலாகாலத்தில் தங்களுடைய பூமியை அபிவிருத்தி செய்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

"கிணறு வெட்டுவதற்கு மான்யம் வழங்குவது சம்பந்தமாக ஒரு நியதி இருக்கிறது. அதாவது குறிப்பிட்ட ஆழம் கிணறு வெட்டப்பட்டால் தான் கிணறு மான்யம் கொடுக்கப்படலாம் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அநேக கிணறுகள் குறிப்பிட்ட அளவுக்குப் பாதி ஆழம் வெட்டிக்கொண்டிருக்கும்போது மழை வந்து விடுவதால் கிணறு முழு ஆழமும் வெட்ட முடிவதில்லை. அதற்குப் பிறகு ஐந்தாறு மாதங்களில் கிணறுகளில் தண்ணீர் வற்றி விடுகிறது. ரெவினியூ இன்ஸ்பெக்டரோ தாசில்தாரோ, அந்தக் கிணற்றைப் பார்த்துவிட்டு 'குறிப்பிட்ட ஆழம் வரை கிணறு வெட்டப்படவில்லை; ஆகவே உங்களுக்கு மான்யமாகக் கொடுத்த பணத்தைக் கடனாக பாவித்து பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டும்' என்று சொல்லி விவசாயிகளுக்குக் கொடுத்த பணத்தை கண்டிப்பாக வசூல் செய்ய நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இதனால் அநேக விவசாயிகளுக்கு பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிணறு வெட்டுவதற்குக் கொடுத்த பணத்தை மான்யமாகக் கருதவேண்டுமேயொழிய கடனாகக் கருதுவது கூடாது, காரணம் என்னவென்றால் குறிப்பிட்ட ஆழம் கிணறு வெட்ட முடியாதது விவசாயினுடைய தவறு அல்ல; மழை பெய்ததுதான் கிணற்றைத் தொடர்ந்து வெட்ட முடியாததற்குக் காரணம். பணத்தை வேறு எதற்கும் உபயோகப்படுத்துவது அல்ல.

"கனம் அங்கத்தினர் ஸ்ரீ தர்மலிங்கம் ஒரு யோசனை தெரிவித்தார். ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு ரூ. 750 கடனாகக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. எழுநூற்று ஐம்பது ரூபாயையும் கடனாகக் கொடுப்பதற்குப் பதிலாக, பாதித் தொகையைக் கடனாகவும் பாதித் தொகையை மானியமாகவும் கொடுத்தால் ஹரிஜனங்கள் சமீப காலத்தில் நல்ல நிலைமையை அடைய முடியும். ஆகவே, சர்க்கார் மான்யம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஹரிஜன அபிவிருத்திக்காக மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கிடைக்கும் போது மேற்சொன்ன யோசனையை சர்க்கார் கவனித்து வீடு கட்டுவதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையை மான்யமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கோயமுத்தூர் தாலூகாவில் இருபத்திநான்கு வீரபாண்டி கிராமத்தில் அநேக பூமிகள் சர்வே ஆகாமால் மற்றவர்களால் விவசாயத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. ரிசர்வ் காடுகளும் இருக்கின்றன. அந்தக்

காடுகளிலெல்லாம் ஹரிஜனங்களைக் கொண்டுபோய் அமர்த்தி காடுகளை நல்ல முறையில் பண்படுத்தி அவர்கள் விவசாயம் செய்வதற்கு அனுகூலமாகப் பம்பு செட்டுகளைக் கடனாகக் கொடுத்து குடியமர்த்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களானால் ஹரிஜனங்களுடைய பெரும்பாலான குறைகள் நீங்கிவிடும் ; ஹரிஜனங்களைப்பற்றி வரும் புகார்களும் நீங்கிவிடும். மேற்கண்ட விஷயங்களைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

12-31 p.m. SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது சம்பந்தமான இந்த மானியக் கோரிக்கையானது மிக முக்கியமானது. 'Advances to cultivators' என்ற வகையில் சென்ற ஆண்டில் கூட ரூ. 1,73,06,700 ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1954–55-ம் வருஷத்திய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 1,28,41,000 தான் போட்டிருக்கிறது. இந்த வருஷத்திற்கு ரூ. 1,43,44,200 ஒதுக்கப்பட்டிருக்கிறது. உரங்கள் வாங்கும் விஷயத்தில் பணம் குறைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். சாதாரண விவசாயிகளுக்குத்தான் அதிகமான கடன் தேவை என்று எல்லா அங்கத்தினர்களும் பேசுகிறார்கள். விவசாயம் செய்யும் காலத்தில் விவசாயிகளுக்கு முக்கியமாகப் பணம் தேவைப்படுகிறது. அம்மாதிரி காலத்தில் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்துவிட்டால் அதுவே பெரும் புண்ணியமாக இருக்கும். பருவ காலங்களில் ரூ. 100 அல்லது ரூ. 200 கூட கடன் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அம்மாதிரி நிலைமையில் விவசாயிகளுக்கு சுலபமான வட்டிக்குக் கடன்கொடுத்து உதவி செய்வதற்கு சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"விவசாயிகள் கடன் பளுவினால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்குப் பத்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டுமென்று வெட்டுப் பிரேரணையை பிரேரித்த ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார். நிதி மந்திரி அவர்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் 'சீக்கிரமாக அது ஒதுக்கப்படும்' என்று சொன்னார்கள். அதை அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சர்க்கார் சிப்பந்திகளுக்கு வேண்டிய கடன் கொடுக்கப்பட்டுவருகிறது. வீடு கட்டும் திட்டம் போன்றவைகள் இருக்கின்றன. கடன் பெறுவதில் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. கடன் வாங்குவதிலுள்ள சிரமங்கள் குறைக்கப்பட்டு சுலபமாகக் கடன் வாங்கக்கூடிய முறையில் விதிகள் சுலபப்படுத்தவேண்டும். குறிப்பாக நகரப்புறங்களில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு கூட்டுறவு முறையில் வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நடுத்தர மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். 'இன்டஸ்ட்ரியல் ஹௌசிங் ஸ்கீம்' இன்படி ஆலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுவது போல் குறைந்த சம்பளம் பெறும் சர்க்கார் சிப்பந்திகளுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

"பஞ்சாயத்து போர்டுகள், முனிஸிபாலிடிகள், ஜில்லா போர்டு போன்றவைகளுக்குப் பணம் கடனாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. பல பஞ்சாயத்து போர்டுகளில் பணம் இருந்தாலுங் கூட பணத்தைச் செலவழிக்க முடியாமல் தவிக்கின்றன. பஞ்சாயத்து போர்டுகள் ஜனங்களுக்கு வேலை செய்ய வேண்டுமென்ற கருத்து இருந்தாலுங்கூட வரி போடும் காலத்தில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வரண்ட பஞ்சாயத்து போர்டுகள் எவ்வளவு கடிதம் எழுதினாலும் கடன் கிடைக்காது. செல்வாக்குள்ள முனிஸிபாலிடிகளோ பஞ்சாயத்து போர்டுகளோ கடன் கேட்டால் கிடைக்கிறதேயொழிய, சாதாரண பஞ்சாயத்து போர்டுகளுக்கு கடன் வேண்டுமென்று எழுதினால் அரசாங்கத்தினிடமிருந்து கடன் கிடைப்பது அரிது. ஆகவே, பஞ்சாயத்து போர்டுகளின் பண நிலைமையைக் கவனித்து, தேவைப்பட்ட பஞ்சாயத்து போர்டுகளுக்கு வேண்டிய பண உதவியைச் செய்ய சர்க்கார் முன் வர வேண்டும். பஞ்சாயத்து போர்டுகளுக்கு பணம் கொடுத்தால்தான் சாதாரண விவசாயிகளுக்கு பணம் கொடுத்ததாக இருக்கும். அப்பொழுது

19th March 1955] [Sri M. Palaniyandi]

தான் விவசாயிகளுக்கு வேண்டிய சிறிய சௌகரியங்களைப் பஞ்சாயத்து போர்டுகள் செய்துகொடுப்பதற்குச் சௌகரியமாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக கூட்டுறவு முறையில் வீடு கட்ட பணம் கொடுக்கிறார்கள். அது சரிதான். இருந்தாலும்கூட நடுத்தர மக்களுக்கு வீடு கட்ட பணம் ஒதுக்கப்படவேண்டும். இந்த மாகாணத்தை எடுத்துக் கொண்டால், கூட்டுறவு முறையில் பல கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். எல்லா வீடுகளும், 10,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. நடுத்தர மக்களுக்கு உதவக்கூடிய வீடுகள் கட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாகப் பணம் கொடுத்துதவ சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக **Milk Supply Union**-கள் ஏற்படுத்த பண உதவி கொடுக்கப்படுகிறது. அப்படியிருந்தும் இப்போது பல பால் சப்ளை யூனியன்கள் யார் கையிலிருக்கிறது என்றால், வசதி படைத்தவர்கள் கைகளில்தானிருக்கிறது. கிராமப்புரங்களிலிருந்து இந்த யூனியன்களுக்குப் பால் வந்துகொண்டிருக்கிறது. இந்த விஷயம் நமக்குத்தெரியும். ஏழைகளுக்கும், கணவனை இழந்தோ அல்லது மற்ற எந்த காரணங்களினாலோ பரிதவிக்கும் பெண்களுக்கு பால் வியாபாரம் ஒரு நல்வாழ்வு அளிக்கிறது. ஆகையால் கிராமப்புரங்களில், கூட்டுறவு இயக்கம் மூலமாக பால் வியாபாரம் செய்ய, நல்லதொரு பிரசாரம் செய்து, அங்கு **Milk Supply Union**-களை ஏற்படுத்த அதிகமாகப் பணம் உதவி செய்யவேண்டியது சர்க்கார் கடமையாகும். சர்க்கார் பணம் உதவி செய்தால் நிச்சயமாக அவர்கள் அந்தக் கடனைத் திருப்பித் தந்து விடுவார்கள். விதவைப் பெண்களின் வாழ்வைக் கருதியாவது அதிகப் பணம் இந்த இனத்திற்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும் **Milk Supply Union** கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கும், நிலமில்லாது கிடைக்கும் குத்தகையை வைத்துக் கொண்டு வாழலாம் என்றாலும்கூட, அதுவும் முடியாமல் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கும் மிகவும் உதவியாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக இந்த **National Extension Service Scheme** இருக்கிறதே அந்த இடங்களிலெல்லாம்கூட இந்தக் கடன் உதவி கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த உதவிப் பணம் சீக்கிரம் கொடுக்கப்படுவதில்லை. பணம் கொடுக்கக் கூடிய முறையில் பல தொந்திரவுகள் இருக்கின்றன. தக்காவிக் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் மிக மிக சொற்பம். ரூபாய் 20 ஆயிரம்தான் ஒதுக்கியுள்ளார்கள். இதை வைத்துக்கொண்டு எத்தனை **application**களுக்குப் பணம் கொடுக்கமுடியும். இதன் காரணமாக அதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்கே இந்தச் சலுகை கிடைக்கிறது. ஆகையால் சர்க்கார் தக்காவிக் கடன்களுக்காகச் அதிகமாக பணம் ஒதுக்கி, ஏழை விவசாயிகளுக்குமட்டுமல்ல, குத்தகைக்கு எடுத்துக்கொண்டு வேலை செய்பவர்களுக்குக்கூட, இந்த கடன் உதவி கொடுக்க முன்வர வேண்டும். குத்தகைதார்கள் குத்தகை எடுப்பதற்கு கடன் கிடைக்காத காரணத்தினால் அதிக வட்டிக்குப் பணம் வாங்கி உழுது பயிரிட்டபிறகு உழைத்த பயனை கடன்காரர்களுக்கு அழுதுவிட்டு வாடி வதங்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் குத்தகைக்கு வேலை செய்யக் கூடியவர்களுக்கும் கடன் உதவி கட்டாயம் கொடுக்கப்படவேண்டும். நிலம் உள்ளவர்களுக்குத்தான் கடன் கொடுக்கப்படும் என்று இல்லாமல் விவசாயிகளுக்கு அவர்கள் சொந்த ஜாமீன்பேரிலேயே இந்தக் கடன் உதவி செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

"அடுத்தபடியாக முனிஸிபாலிடி, ஜில்லா போர்டுகளுக்கு அதிகப்படியாகக் கடன் வசதி கொடுக்கப்படவேண்டும். ஜில்லா போர்டு, முனிசிபாலிடிகளுக்கு கடன் கொடுப்பதால் இரண்டு வசதிகள் இருக்கின்றன. ஒன்று, இந்தக் கடன் பணத்தை வைத்துக்கொண்டு ஜில்லா போர்டுகளும்,

[Sri M. Palaniyandi] [19th March 1955

முனிசிபாலிடிகளும் நாட்டு மக்களுக்கு வேண்டிய ரோட்டு வசதி, மற்ற வசதிகள் செய்வதுடன், கிளார்க்கு உத்தியோகத்திற்குப் போக முடியாதவர்கள், தங்கள் உழைப்பையே உயிர் வாழ்வுக்கு நம்பியிருப்பவர்களுக்கு இந்த ரோட்டு வேலை, மற்ற வேலைகளில், வேலையளித்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓர் அளவுக்கு நீக்கமுடியும்.

"அடுத்தபடியாக இந்த வருஷத்தில் எல்லா அபிவிருத்தி வேலைகளுக்கும் சர்க்கார் அதிகமாகப் பணம் ஒதுக்கியுள்ளார்கள். எங்கள் திருச்சினுப்பள்ளி ஜில்லாவில் உடையார்பாளையம், ஜெயங்கொண்டாம் போன்ற இடங்களில் தண்ணீர்த் தட்டு மிக அதிகமாக இருக்கிறது. இந்த கஷ்டத்தை நீக்க, அங்குள்ள **Major Panchayat Board** கள் தங்களுக்கு வேண்டிய கடனுக்காக திட்டம் தீட்டும்போது, சர்க்கார் முன் வந்து கடன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

12-40 p.m. *SRI K. V. RAMASWAMI :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்திற்கு கனம் K. T. ராஜு கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரேணையை ஆதரிக்கிறேன். அவர் வெட்டுப் பிரேரேணையில் கிராமக் கடன் வசதிக்காக ரூபாய் பத்துக் கோடி ஒதுக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கும் யோசனையை நான் வரவேற்கிறேன். குறிப்பாக இந்த மான்யத்தில் விவசாயிகள் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை, (அதாவது $1\frac{1}{2}$ கோடி ரூபாய்) போதாது. விவசாயிகள் இன்று பலவேறு கஷ்டங்களுக்கிடையே கடன் வேண்டும் என்று சர்க்காருக்கு மனுப் போடுகிறார்கள். குறிப்பாக தக்காவிக் கடன் வேண்டும் என்று விண்ணப்பம் போடுகிறார்கள். அப்படி விண்ணப்பங்கள் போடும்போது டிஸ்டிரிக்டிலும், தாலூக்காவிலும் உள்ள ரெவின்யு அதிகாரிகள் போதிய பணம் இல்லை என்று சொல்லாமல், வேறு பல காரணங்களைச் சொல்லி போடும் விண்ணப்பங்களை மறுக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களில் எங்கேயாவது தவறு இருக்காதா என்று தேடித்தேடி கண்டுபிடித்து, அதைக்காட்டி அவர்கள் விண்ணப்பங்களை **reject** செய்யக் கூடும் நிலைமை இன்று இருக்கிறது என்பதை தற்சமயம் கனம் நிதி மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இதேமாதிரிதான் **Agriculturists' Loan Act**ன்படி, உரம் வேண்டுமென்று கோரி விண்ணப்பம் போட்டால் அதுவும் நிராகரிக்கப் படுகிறது. ஒவ்வொரு தாலூக்காவிலும், இந்த விவசாய கடன்களுக்காக ஏராளமாக விண்ணப்பங்கள் வருவதால், அவற்றை எப்படி முடிவு செய்வது என்று தெரியாமல், ஏதாவது சில சொத்தைக் காரணங்களை கண்டுபிடித்து அவைகளை நிராகரிக்கவேண்டிய நிலைமையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் ஜில்லாவில் நடந்திருக்கக்கூடிய ஒரு விஷயத்தை கனம் மந்திரி அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவில் திருச்செங்கோடு தாலூக்காவில் ஒரு விதவை 11 வருஷம் ஆச்சு, புருஷன் செத்துப் போய் ! அந்த அம்மாள் விவசாய கடன் சட்டத்தின்கீழ் தனக்கு கடன் வேண்டுமென்று கோரி, அதாவது உரம் வாங்க ரூபாய் 120 கடன் வேண்டுமென்று கோரி, ஜில்லா விவசாய அதிகாரிக்கு மனு போட்டிருந்தார்கள். ஆனால் நாற்றுவிட்டு, களையெடுத்து அறுவடையாகி நெல் களத்திற்கு வரும்போது அந்த விதவைக்கு உங்களுக்கு கடன் இல்லையென்று பதில் வருகிறது. இது ஒருபுறமிருக்க, அதில் சொல்லியிருக்கக்கூடிய காரணம் என்னவென்றால், பட்டா அந்த அம்மாள் புருஷனுடைய பேரில் இருப்பதாகவும் கணக்கப்பிள்ளையிடமிருந்தாவது, ரெவின்யு அதிகாரிகளிடமிருந்தாவது **Registry** வாங்கிக்கொண்டு வந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 11 வருஷமாக, கணவன் இறந்ததிலிருந்து நிலத்தை அந்த அம்மாள் அனுபவித்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது இந்தமாதிரி பதில் வருகிறது. பதில் வந்தவுடன் கர்ணத்திடம் போனால், கர்ணம் **entry** பண்ணி கொடுக்கமாட்டேன் என்கிறார். இப்படி பல தகராறுகள் இருக்கிறது. இதை ரெவினியு மந்திரி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு

19th March 1955] [Sri K. V. Ramaswami]

வந்திருக்கிறார்கள் அந்த அம்மாள் 120 ரூபாய் கடன் கிடைப்பதற்காக, 20, 25 ரூபாய் செலவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. இது வெல்லாம் ஏன் நடக்கிறது என்றால், ஒதுக்கியிருக்கக்கூடிய பணம் மிகவும் சொற்பமாய் இருக்கிறது. எனவே, இன்னும் அதிகப்படியாகக் கடன் தொகை ஒதுக்கவேண்டும் என்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

"அடுத்தபடியாக பம்பு செட்டுகளுக்காக கடன் கொடுக்கப்படுகிறது. அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையும் மிகக் குறைவு. பல விவசாயிகள் பம்பு செட்டுக்களுக்காக விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள் அவர்கள் விவசாய ஆபீசில் போய் கேட்டால், ஒரு லிஸ்டை எடுத்துக் காட்டுகிறார்கள். உங்கள் பெயர் இந்த listல் இருக்கிறது, ஆனால் Priority பிரகாரம் உங்களுக்கு பம்பு செட்டு வரும் என்கிறார்கள். அதன்படி வர 7, 8 வருஷம் ஆகும். விவசாயிகளுக்கு பம்பு செட்டு கொடுப்பதன்மூலம், அல்லது பம்பு செட்டுக்களுக்காக கடன் கொடுப்பதன் மூலம் இரண்டு நன்மைகளிருக்கின்றன. ஒன்று, பம்பு செட்டுகளை உடனே கிணற்றில் வைக்க விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். அதனால் உற்பத்தி பெருகுவதுடன், பம்பு செட்டுகள் உற்பத்தி செய்யக் கூடிய Engineering Works இருக்கிறதே நமது மாகாணத்தில், அவ்வகளெல்லாம் அபிவிருத்தி அடைய முடியும். ஏராளமான விவசாயிகள் பம்பு செட்டுகள் வைப்பதால், இதற்கு ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. இன்னும் அதிகமான தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"அதற்கு அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சாக்கடை திட்டம், குடி தண்ணீர் வசதி திட்டம் ஆகியவற்றிற்காகவெல்லாம் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய நாமக்கல்லுக்கு பக்கத்தில் காவேரி ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றிலிருந்து தண்ணீரைக் நாமக்கல்லிலிருந்து கொண்டுவர, எங்கள் ஊருக்குப் பணம் ஒதுக்குங்கள் என்று பலமுறை பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டும்கூட, போட்டதுதான் கண்ட பலனே தவிர, இதுவரையில் சர்க்கார் பணம் ஒதுக்கியதாக தெரியவில்லை. இதேமாதிரி பல பஞ்சாயத்து போர்டுகள், underground drainage போட பணம் வேண்டும் என்று விண்ணப்பம் போடுகிறார்கள். அதற்குக்கூட சர்க்கார் பணம் தருவதில்லை. காரணம், இந்த இனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் மிகமிகக் குறைவாக இருப்பதுதான். ஆகையால் இன்னும் அதிகமாக பணம் ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்பொழுது ஏற்பட்டுள்ள விலைவாசிக் குறைவினால் விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு அவசியமான காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும். வழக்கம் போல் பணம் இல்லை என்று சொல்லாமல் கனம் மந்திரி அவர்கள் எப்படியாவது பணம் சம்பாதித்து அவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பணம் இல்லை என்று சொல்லுவதைவிட மனம் இல்லை என்று கூறலாம். மனம் இருந்தால் பணம் இருக்கும். மனம் இருந்தால் எப்படியாவது பணத்தை சம்பாதித்துக் கொடுப்பார்கள். நமது சர்க்காரிடம் பணம் இல்லாவிட்டால் மத்திய சர்க்காரிடமாவது கடன் வாங்கிக் கொடுக்கலாம். மத்திய சர்க்காரும் பணம் இல்லை என்று சொல்லி விட்டால் இப்பொழுது எவ்வளவோ பணக்காரர்கள் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பணத்தைக் கடனாக வாங்கி வசதிகளைச் செய்து கொள்ள கடனாகக் கொடுக்கலாம். ராஜாஜி இருந்தபோது இரண்டு வருஷங்களில் ஐந்து கோடி ரூபாயை கடனாக எழுப்பவில்லையா. அம்மாதிரி கடன் எழுப்பியாவது விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி அவர்களுக்குக் கடன் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இச்சுடன் முடித்துக் கொள்ளுகிறேன்." 12-45 p.m.

[19th March 1955

SRI V. GOVINDASWAMY NAIDU :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்துப் பேசுகையில் சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். நம் மாகாணத்தில் விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்து கூறினார்கள். 1361–62-ம் பசலிக்கு விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு பிறகு வசூலித்துக் கொள்ளலாம் என்று சட்டம் செய்து அதை அமுலுக்குக் கொண்டுவந்திருந்தோம். அதனால் இப்பொழுது நாம் அதையெல்லாம் வசூலிக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறோம். இப்பொழுது அதை வசூலிப்பதற்கும் பல நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. இதுவரையில் விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனை கொடுக்காமலும் வரியைச் செலுத்தாமலும் இருந்து வந்தார்கள். இப்பொழுது அவைகளை திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சர்க்காருக்கும் அவைகளைத் திருப்பி வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இப்பொழுது அதற்கு வேண்டிய டிமாண்டையும் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது விலைவாசிகள் குறைந்து போய்விட்டன. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு இருந்த விலைவாசிகள் இப்பொழுது இல்லை. ஆனால் அப்பொழுது முதற்கொண்டு இப்பொழுது வரையில் வாய்தாவையும் வாங்கிய கடனையும் சேர்த்துக்கட்டவேண்டியதாக இருக்கிறது. அதனால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது இருந்த நிலைமையில் விவசாயிகள் சாமான்களை ஹையர் பசேஸ் முறையில் வாங்கி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் விற்கப்பட்ட விலையிலேயே இப்பொழுதும் விற்கும் என்ற எண்ணத்தில் வாங்கி விட்டார்கள். ஆனால் இப்பொழுது விலைவாசிகள் குறைந்துபோய் விட்டதனால் அவர்களால் வாங்கிய சாமான்களின் தொகையைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது ஐந்து வருஷத்தில் ஐந்து தவணைகளாக திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது விலைவாசிகள் வீழ்ந்துவிட்டதால் அவர்களால் அப்படிக் கொடுக்க முடியவில்லை. அதே விலையில் விற்றால் அவர்களால் கஷ்டமில்லாமல் கொடுத்துவிட முடியும். திருப்பிக் கொடுத்துவிடலாம் என்றுதான் அப்பொழுது சர்க்காரிடமிருந்து தைர்யமாகக் கடன் வாங்கினார்கள். அதனால் இப்பொழுது ஐந்து தவணைகள் என்றிருப்பதை பத்து தவணைகள் என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் அவர்களுக்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க சௌகர்யமாக இருக்கும்.

" தக்காவிக் கடன்களை வாங்குவதிலும் விவசாயிகளுக்கு அதிகப்படியான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு வருஷத்தில் திருப்பிக் கொடுத்து விட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் தவணைகளில் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்குச் சௌகர்யமாக இருக்கும். அப்படிச் செய்துகொடுத்தால் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியவர்களுக்கு சௌகர்யமாக இருக்கும். எனக்கு முன்பு பேசிய கனம் கே. வி. ராமசாமி ஒன்றைக் குறிப்பிட்டார். இம்மாதிரி கடன் வாங்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று. கடன் வாங்கும் காலங்களில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், முன்சீப் வரவேண்டும் என்றும் கர்ணம் வரவேண்டும் என்றும் குறிப்பாகச் சொல்லுகிறார்கள். அப்படி அவர்களைக் கூட்டிக்கொண்டு போனாலும் ‘ இன்றைக்கு முடியாது. நாளைக்கு வா ’ என்று சொல்லுகிறார்கள். அப்படி மறுபடியும் தவணை கொடுக்கிறார்கள். இப்படி பல தவணைகள் போடுவதால் விவசாயிகளால் பல தடவைகளில் அங்கு போக முடிவது இல்லை. தங்களுடைய ஊரிலிருந்து தாலூகா ஹெட்குவார்ட்டர் ஆபீசுக்குப் போவதென்றால் அவர்களுக்கு அதிகப்படியாகச் செலவாகிறது. ரூ. 150 அல்லது ரூ. 200 கடன் வாங்குவதற்குள் 20 அல்லது 25 ரூபாய் செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. அதனால் தவணை போடாமல் விவசாயிகள் வந்தவுடன் கடன் தொகையைக் கொடுத்து விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாய இலாகாவில்தான் அதிகப்படியாகக் கடன் கொடுக்கிறார்கள். இப்பொழுது ஒவ்வொரு பிர்க்காவிற்கும் மேஸ்திரிகள் இருக்கிறார்கள். தாலூ

காவிற்கு இரண்டு டிமான்ஸ்ட்ரேட்டர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாரையாவது அந்தக் கடன் தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடன் வேண்டும் என்று மனுப் போட்டால் அந்த டிமான்ஸ்ட்ரேட்டரோ அல்லது மேஸ்திரியோ அந்தக் கடன் தொகையைக் கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் கஜானாவில் அந்தக் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

